DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர் இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX Community

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal; Affidavits for Immigration purposes
Kokulan Baskaran
Tel: 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25 வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
சிந்திக்கும் தமிழ் உலகின் உலகில் எதிர்க்கும் கதிர் வீசும் ...
$1.00
416-752-1524
416-752-6703
உதயம் 1305 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 9, 2021

# கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் "வீட்டிலேயே இருங்கள்" சட்டம் நேற்று வியாழன் முதல் அமுலுக்கு வந்தது

## கடுமையான அறிவிப்பை விடுத்த மாகாண முதல்வர் டக் போர்ட்



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் "வீட்டிலேயே இருங்கள்" சட்டம் நேற்று வியாழன் முதல் அமுலுக்கு வந்தது. மாகாணத்தில் கடந்த சில வாரங்களாக பெறப்பட்ட கோவிட் பரிசோதனை முடிவுகள் மற்றும் இறப்பு வீதங்கள், வைத்தியசாலைகளில் ஏற்பட்ட நோயாளர்கள் படுக்கைகளின் தட்டுப்பாடு, போதிய சுவாசக் கருவிகள் இல்லாமை கண்டு பிடிக்கப்பட்டு அவற்றைச் சமாளிக்க முடியாத ஆபத்தான சூழ்நிலை உருவான நிலைமை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டே இந்த "வீட்டிலேயே இருங்கள்" சட்டம் வியாழன் நள்ளிரவு முதல் அமுலுக்கு கொண்டு வரப்படுகின்றது என்றும், மேலும் இந்தச் சட்டம் மிகவும் கடுமையாகக் கண்காணிக்கப்படும் என்றும் இந்த கடுமையான அறிவிப்பை விடுத்த மாகாண முதல்வர் டக் போர்ட் தெரிவித்தார்.

கனடாவில் இந்த மாகாணத்திலேயே அதிகளவு தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதும் ஒரு தமிழ் பேசும் மத்திய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும், இரண்டு மாகாண சபை உறுப்பினர்களும் உள்ளார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த "வீட்டிலேயே இருங்கள்" சட்டம் அமுலுக்கு வந்த நேரம் தொடக்கம் பின்வரும் விடயங்கள் மாகாண அரசினாலும், மாகாண மற்றும் நகரசபைகள் சார்ந்த சுகாதாரப் பிரிவுகள் ஆகியவற்றாலும் அனைத்தும் கண்காணிக்கப்பெறும் என்றும் முதலவர் டக்போர்ட் தெரிவித்தார்.

இந்தச் சட்டத்தை ஒன்றாரியோ அரசு உடனயடிக அமுலுக்கு கொண்டுவருவதன் மூலம் மாகாணத்தில் கொரொனா இறப்பு விகிதத்தை குறைக்காலாம் என்றும் வைத்தியசாலைகளில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எல்லை தாண்டி அதிகரிப்பதை தடுப்பதன் மூலம், அங்கு நோயாளர் படுக்கைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளலாம் என்றும், கொரோனா தொற்று பரவுவதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதன் மூலம், பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளின் பாதுகாப்பிற்கு உத்தரவாதத்தை ஏற்படுத்தலாம் என்றும் இதுவரை கொரோனா தடுப்பூசிகள் பெறாத பல ஒன்றாரியோ மாகாணத்தவர்களுக்கு தடுப்பூசி பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புக்கள் அதிகமாக கிட்டும் என்றும், சமூக மட்டத்தில் மாகாணத்தில் நோய்த் தொற்று மேலும் பரவாமல் தடுக்க ஏதுவாக அமையும் என்றும் மாகாண முதல்வர் டக் போர்ட் மேலும் தெரிவித்தார்.

அவர் இந்த சட்டம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறான கடுமையான சட்டத்தை எமது அரசாங்கம் அமுல் செய்தாலும் மளிகைச் சாமான்கள் கொள்வனவு செய்வது மற்றும் மருந்துப் பொருட்கள், மருத்தவ உபகரணங்கள் வாங்குவது போன்ற அவசரத் தேவைகளுக்கு அந்தந்த வர்த்தக நிறுவனங்களுக்குச் சென்று வர்த்தக நிறுவனங்கள் அனுமதி வழங்கும் வரை காத்திருந்து உள்ளே சென்று தங்களுக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுவருவது மிகவும் அவசியமானதாக அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் மாகாண முதல்வர் மக்களிடம் வேண்டியுள்ளார்.




INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000 Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX Realtron AD Team

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட அனுபவம்
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905 794 4404

# கனடாவில் Bankruptcy க்குச் செல்லும் நிலையில் நிதியளிக்கப்பட்ட அல்லது குத்தகைக்கு எடுக்கப்பட்ட காருக்கு என்ன நடக்கும்?



உங்கள் நிதி வளங்களுடன் போராடுவது மிகவும் கடினமானது எவ்வாறாயினும், உங்களுக்கு என்ன கடன் தீர்வுகள் உள்ளன, அதேபோல் உங்கள் சொத்துக்களில் எவை பாதுகாக்கப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்வது என்பதற்காக சம்பந்தப்பட்ட நிபுணர் பரிந்துரைகளுக்கு அழைப்பு விடுங்கள். பணத்திற்கு கடன்பட்டிருக்கும் நிறைய பேர் உண்மையிலேயே அதிகமாக உணர்வார்கள் அதிஸ்டவசமாக, சில நிறுவனங்களின் நிதிக் கடன் உதவியைப் கனடா முழுவதும் பயன்படுத்தலாம்.

உங்கள் நிலைமையைப் பொறுத்து ஒரு மாற்று, தனிப்பட்ட Bankruptcy அல்லது நுகர்வோர் முன்மொழிவுக்காக தாக்கல் செய்யப்படுகிறது. இத்தகைய சூழ்நிலைகளில், பாதுகாப்பற்ற நிதிக் கடன்கள் மட்டுமே பொதுவாக பாதிக்கப்படுகின்றன, அதாவது, சில சொத்துக்களுடன் கடன் வழங்கப்படவில்லை. மறுபுறம், உங்கள் பாதுகாக்கப்பட்ட நிதிக் கடன்களின் பாதுகாப்பும் முதன்மையாக அவற்றில் பணம் செலுத்துவதை நீங்கள் செய்ய முடியுமா என்பதை அடிப்படையாகக் கொண்டது.

### பாதுகாப்பற்ற நிதிக் கடனும் பாதுகாப்பான நிதிக் கடன்

பாதுகாப்பற்ற நிதிக் கடன்களில் பொதுவாக கிரெடிட் கார்டுகள், தனிநபர் கடன்கள், வருமான வரிக் கடமைகள் போன்றவை அடங்கும். மறுபுறம், உத்தரவாதமான நிதிக் கடமைகள் என்பது அடமானம், ரியல் எஸ்டேட், வாகனம் போன்ற ஒரு சொத்துடன் நிதிக் கடன் பிணைக்கப்பட்டுள்ள இடங்களாகும். கடன், அல்லது வாகன குத்தகை, இது உங்கள் வாகனங்களால் பாதுகாக்கப்படுகிறது.

நீங்கள் ஒரு காரை குத்தகைக்கு விடுகிறீர்கள் என்றால், நீங்கள் ஒரு வாடிக்கையாளர் முன்மொழிவை சமர்ப்பித்தால் அல்லது Bankruptcy நிலைக்கு வந்தால், நீங்கள் தொடர்ந்து பணம் செலுத்துகிறீர்கள் என்றால் தொழில்நுட்ப ரீதியாக அதைத் தொங்கவிடலாம். உங்களால் முடியாது, அல்லது வாகனத்தை பராமரிக்க விரும்பாதபோது, நீங்கள் இரண்டு காரியங்களைச் செய்யலாம், தானாக முன்வந்து வாகனத்தை சரணடையலாம் அல்லது முன்கூட்டியே முன்கூட்டியே தொடங்கலாம்.

**உங்கள் தேர்வுகள் மற்றும் அடுத்து என்ன நடக்கப்போகிறது.**



ஒரு காரை குத்தகைக்கு விடுவது நீங்கள் அதற்கு பணம் செலுத்துவதாகக் கூறுகிறது, மேலும் குத்தகை முடிவடையும் வரை அதைப் பயன்படுத்துகிறது. நீங்கள் திவாலாகிவிட்டதாக அறிவித்தாலும், குத்தகைக்கு விடப்பட்ட வாகனத்திற்கான உங்கள் குடியேற்றங்களை நீங்கள் நாள் சார்ந்து, அவற்றை தொடர்ந்து தயாரிப்பதற்கு நீங்கள் பணம் செலுத்தினால், குத்தகை விதிமுறைகளின்படி அதை வைத்திருக்க நீங்கள் சட்டபூர்வமாக தகுதியுடையவர்கள். நீங்கள் கூடுதலாக காப்பீட்டுத் தொகையை முழு பலத்துடன் வைத்திருக்க வேண்டும்.

நிதிக் கடன் உதவியை வழங்கக்கூடிய அங்கீகாரம் பெற்ற Bankruptcy நிலையைக் கவனிக்கும் அறங்காவலருடன் பேசும்போது, உங்கள் வாகனக்கு குத்தகை முன்பணத்தைப் பற்றி அறிய அவர் அனுமதிக்க வேண்டியது அவசியம். பொதுவாக, குத்தகை நிறுவனம் மற்றும் கடன் வழங்குநர்கள் நீங்கள் தானாகவே பணம் கட்டவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்.

### வாகன காப்புறுதி மற்றும் எல்.ஐ.டி.

வாடிக்கையாளர் முன்மொழிவு அல்லது நொடித்துப் போன பிறகு குத்தகைக்கு விடப்பட்ட உங்கள் வாகனத்துடன் நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள் என்பதைப் பொருட்படுத்தாமல், உங்கள் வாகனம் உங்கள் உடமைகளில் இல்லாத வரை காப்பீட்டுத் தொகையை எப்போதும் பாதுகாக்கவும். நீங்கள் அதை திருப்பித் தருவதற்கு முன்பு ஏதேனும் நடந்தால், நீங்கள் காப்பீடு செய்யப்படாவிட்டால், நீங்கள் பணம் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுவீர்கள். மேலும், காப்பீடு இல்லாமல் இருந்து கார் விபத்துக்கள் ஏற்பட்டால், உங்கள் வாகன சாரதிப் பத்திரம் பாதிக்கப்படலாம்.

இந்த விடயம் தொடர்பான ஏதேனும் கேள்விகள் உங்களிடத்தில் இருந்தால் தயவு செய்து www.gtacredit.com என்னும் இணையத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது (416) 650-1100 என்னும் எமது தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும்.



உதயன் கதிரோட்டம்

# அதிமுக, திமுக, எந்த ஆட்சி அமைந்தாலும் தமிழ்நாட்டு மக்கள் மகிழ்ச்சியடைய மாட்டார்கள்...

## நாம் தமிழர் சீமானின் வேட்பாளர்கள் நால்வராவது வெற்றிபெற வேண்டும் என்பது பலரது விருப்பம்....

## திருமாவளவன், வை.கோ விரும்புவது போன்று காங்கிரஸ் – திமுக கூட்டு நாட்டுக்குத் தேவையில்லையாம்...

தமிழ்நாட்டு மக்கள் மற்றும் வாக்களிக்காதவர்கள் கூட எதிர்பார்த்துக் காத்திருந்த 2021 சட்ட சபைத் தேர்தல் வாக்களிப்பு எவ்வித குழப்பமும் இன்றி நிறைவுக்கு வந்துள்ளது. வாக்களிப்பு இயந்திரங்களின் உள்ளே காணப்படும் நிஜமான வெற்றிகள் சில வாரங்களுக்கு எவருமே அறியாத வண்ணம் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டில் தமிழ்நாட்டின் பல இடங்களிலும் வைக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் இந்த 2021 சட்ட சபைத் தேர்தல் முடிவுகளை அறிந்து கொள்வதில் தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் இருபத்தைந்து வீதத்திற்கு குறைவானவர்களே ஆர்வத்துடன் காத்திருப்பதான சென்னை ஊடகங்கள் நடத்திய கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்துள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்..

இது இவ்வாறிருக்கும் நிலையில், ஆங்காங்கே இரண்டு பிரதான கட்சிகளின் உறுப்பினர்களுக்கிடையே மோதல்கள் இடம்பெற்று சில உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளதான கவலை தரும் தகவல்களும் பெறப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டை காமராஜர் போன்ற கண்ணியமான அரசியல்வாதிகள் முதல்வராக அமர்ந்திருந்து ஆட்சி செய்த அந்த பொற்காலத்திற்குப் பிறகு, அவ்வாறான ஆட்சி அங்கு இடம்டபெறவே இல்லை என்பதை தமிழ்நாட்டு மக்களில் கற்றவர்களாக விளங்கும் பலர் பேசிக் கொண்டே உள்ளார்கள்.

இவர்களில் முதன்மையானவர்கள் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் மற்றும் அவரது கட்சியில் வேட்பாளர்களாக விருப்பத்துடன் இணைந்து கொண்டுள்ள உழைக்கும் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அன்பர்கள்.

மேலும், திமுக, அதிமுக போன்ற கட்சிகளை ஆதரிக்கின்றவர்களில் கற்றவர்கள் என்ற பிரிவிற்குள் அடங்கும் எவருமே இந்தக் கருத்தை இதுவரை வெளிப்படையாகக் கூறவேயில்லை. ஏனென்றால் அவர்களில் பலர் 'ருசி' கண்டவர்கள். தங்களுக்கு 'இலாபத்தை' தந்தவர்களுக்கு எதிராகப் பேச அவர்ளுக்கு துணிச்சலில்லை. ஆனால் நியாயவாதிகள் போல அறிக்கைகளை அவர்கள் வெளியிடுகின்றார்கள். அவர்களிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ளும் ஊடகங்கள் அந்த ஏமாற்றுக்கார 'கற்றவர்களின்' அறிக்கைகளை மக்களிடம் கொண்டு செல்ல துணைநிற்கின்றன.

ஆனால் நாம் தமிழர் சீமான் போன்றவர்கள் தெரிவிக்கும் யதார்த்தமான கருத்துக்கள், துணிச்சலான உரைகள், சமூகத்திற்கு பயன்தரக் கூடிய உண்மைகள். முதலாளித்துவம், வர்க்க அரசியல் போன்றவற்றை நன்கு விளக்கும் கருத்துக்கள் கோட்பாடுகள் ஆகியனவற்றை பரப்புரை செய்வதற்கு பெரும்பாலான தமிழ்நாட்டு ஊடகங்கள் முன்வந்ததாகத் தெரியவில்லை.

மேலும் இதுவரை காலமும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரையும், அந்த அமைப்பையும் ஈழத் தமிழ் மக்களையும் காப்பாற்ற நாம் இருக்கின்றோம் என்று கூறி வந்த திருமாவளவனும் வை. கோ என்னும் கோபாலசாமியும் .இந்தத் தேர்தலில், திமுக- காங்கிரஸ் கூட்டணியின் கீழ் போட்டியிடுகின்றார்கள். அதுவும், வை.கோவின் வேட்பாளர்கள், திமுகவின் சின்னமான உதயசூரியன் சின்னத்திலேயே போட்டியிட்டார்கள்.

2009ம் ஆண்டு வரை திருமாவளவனும், வை.கோவும் தலைவர் பிரபாகரன் அவர்களைப் பற்றி பேசுவதும், ஈழத்தமிழர் புகழ்பாடுவதிலுமே கவனமாக இருந்தவர்கள், எந்த திமுக-காங்கிரஸ் கூட்டணி கட்சிகள் இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதன் தலைவர்களையும் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான அப்பாவிப் பொது மக்களையும், குழந்தைகள் மற்றும் தாய்மார்களையும் கொன்றழிக்க உதவியாகவும் தூண்டுதலாகவும் இருந்தனவோ அதே கொலைக் கரங்களுக்கு தொடர்ச்சியாக ஆதரவுக் கரங்களை நீட்டிய வண்ணம் உள்ளார்கள்.

2009ம் ஆண்டிற்கு பின்னர் தான் பெற்ற யுத்த வெற்றியைக் கொண்டாடும் முகமாக இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி மகிந்தாவால் அழைக்கப்பெற்ற திமுக-காங்கிரஸ் குழுவில் திருமாவளவனும் இணைந்து சென்று மகிந்தா என்னும் யுத்தக் குற்றம் செய்த ஜனாதிபதியிடமிருந்து பரிசுப் பொருள் பெற்றுக்கொண்டதை தமிழ்நாட்டுத் தமிழர்களும், ஈழத்தமிழர்களும் மறந்து விடமாட்டார்கள்.

அதற்கு முன்னைய காலப்பகுதிகளில் ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் ஏற்பாடு செய்த விழாக்களிலும் வைபவங்களிலும் அவர்களது பிரயாணச் செலவில் பயணித்து கலந்து கொண்டு நட்சத்திர ஹோட்டல் அறைகளில் தங்கியிருந்து விட்டு, மேடைகளில் தலைவர் பிரபாகரன் அவர்களையும் விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் வியந்தும் புகழ்ந்தும் பேசிவிட்டு இப்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒப்பற்றத் தலைவர்களையும் அவர்களையும் விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அழித்த அதே கூட்டு கும்பலோடு சேர்ந்து நின்று மீண்டும் அந்த கொடிய ஆட்சி அமைந்து மீண்டும் ஈழத்தமிழர்களை வஞ்சிக்கும் செயற்பாடுகளுக்கு வழிதேடி நிற்கின்றார்கள் இந்த இரட்டை வஞ்சக நெஞ்சங்கள் திருமாவளவன்- வை. கோ இருவரும்.

இவர்களுக்கு ஒரு பாடத்தை தமிழகத்து மக்கள் புகட்டுவார்கள் என்றே அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள் என்பதே உண்மை.

இறுதியாக நாம் தமிழர் கட்சியின் சீமான் தலைமையில் அவர் உட்பட குறைந்தது நான்கு சட்ட சபை உறுப்பினர்களையாவது இந்த தேர்தல் முடிவுகள் அந்த ஆசனங்களில் அமரச் செய்தால், தமிழ்நாட்டில் காமராஜர் காலத்து ஆட்சி ஒன்று அடுத்து பொதுத் தேர்தலிலாவது சட்டசபையைக் கைப்பற்றும் என்ற நம்பிக்கையைத் தோற்றம் பெற வைக்கும், என்ற வார்த்தைகளோடு அடுத்த வாரம் சந்திக்கலாம் எனக் கூறி விடைபெறுகின்றோம்.


**BASEMENT FOR RENT**

**FINCH & MORNINGSIDE**

**2 Bedroom bsmt for rent.**
**Sep entrance, laundry, kitchen**
**Close to TTC,**
**Working couple preferred**
**Avail: May 01/2021**

**Tel: (647) 581-2225**

**ROOM FOR RENT**

**KENNEDY & EGLINTON**
**McCowan & Sheppard**

**2** அறை கொண்ட தொடர் மாடிக் கட்டடத்தில் 1 **water heater** அறை வாடகைக்கு உண்டு. **Close to Kennedy Subway & Rt (McCowan RT). Includes: Internet, TV, TP, Radio.**
**1 Person - $1000 2 people - $1200**
**(Tamil people)**

தொடர்புகளுக்கு:
**416-752-4444**
**416-857-5252**



பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com


# 8 அணிகள் பங்கேற்கும் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இன்று தொடக்கம் முதல் ஆட்டத்தில் மும்பை – பெங்களூரு அணிகள் சென்னையில் மோதல்

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது. சென்னையில் நடக்கும் முதல் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் மும்பை இந்தியன்ஸ், பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணிகள் மோதுகின்றன.

பதிவு: ஏப்ரல் 09, 2021 04:57 AM

ஐ.பி.எல். கிரிக்கெட்

இந்திய கிரிக்கெட் வாரியம் சார்பில், ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி 2008-ம் ஆண்டு முதல் நடந்து வருகிறது. இந்திய வீரர்கள் மட்டுமின்றி வெளிநாட்டு வீரர்களும் கால்பதிக்கும் இந்த சரவெடி போட்டிக்கு ரசிகர்கள் மத்தியில் எப்போதும் அமோக வரவேற்பு உண்டு. இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவல் உச்சத்தில் இருந்ததால் 13-வது ஐ.பி.எல். போட்டி ஐக்கிய அரபு அமீரகத்துக்கு மாற்றப்பட்டு கடந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் அங்கு வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்த நிலையில் கொரோனா பாதிப்பு இன்னும் கட்டுக்குள் வராவிட்டாலும் ஐ.பி.எல். போட்டி மீண்டும் அதன் தாயகமான இந்தியாவுக்கு திரும்புகிறது. இதன்படி 14-வது ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா இன்று (வெள்ளிக்கிழமை) முதல் மே 30-ந்தேதி வரை சென்னை, பெங்களூரு, மும்பை, ஆமதாபாத், கொல்கத்தா, டெல்லி ஆகிய நகரங்களில் நடைபெறுகிறது.

8 அணிகள்

நடப்பு சாம்பியன் மும்பை இந்தியன்ஸ், முன்னாள் சாம்பியன் சென்னை சூப்பர் கிங்ஸ், டெல்லி கேப்பிட்டல்ஸ், ஐதராபாத் சன்ரைசர்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ், பஞ்சாப் கிங்ஸ், ராஜஸ்தான் ராயல்ஸ் ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணி நிர்வாகமும் சொதப்பிய வீரர்களை கழற்றி விட்டும், புதிய வீரர்களை சேர்த்தும் தங்கள் அணியை பட்டைதீட்டி முழுவீச்சில் தயார்படுத்தி உள்ளன. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முந்தைய பிளே-ஆப் சுற்றுக்கு முன்னேறும். இறுதிப்போட்டி உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் ஸ்டேடியத்தை கொண்ட ஆமதாபாத்தில் மே 30-ந்தேதி அரங்கேறுகிறது.

உள்ளூரில் ஆட்டங்கள் கிடையாது

வழக்கமாக ஒவ்வொரு அணிக்கும் உள்ளூர் மைதானங்களில் 7 லீக் ஆட்டங்கள் நடத்தப்படும். இது தான் அந்த அணிக்கும் சாதகமான அம்சமாக இருக்கும். ஆனால் முதல்முறையாக இந்த சீசனில் எந்த அணிக்கும் தங்களது சொந்த ஊரில் போட்டிகள் கிடையாது. உதாரணமாக சென்னை சேப்பாக்கத்தில் மொத்தம் 10 லீக் ஆட்டங்கள் நடக்கின்றன. ஆனால் சென்னை அணிக்கு இங்கு ஒரு ஆட்டமும் கிடையாது. மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் 10 ஆட்டங்கள் நடந்தாலும் மும்பை இந்தியன்ஸ் அங்கு பயணிக்க வேண்டிய தேவையில்லை. ஐதராபாத், மொகாலி, ஜெய்ப்பூர் ஆகிய இடங்கள் இந்த முறை போட்டிக்கு தேர்வு செய்யப்படவில்லை. இதனால் அந்த நகரங்களை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்ட ஐதராபாத் சன்ரைசர்ஸ், பஞ்சாப் கிங்ஸ், ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் அதிருப்திக்குள்ளாயின. அவர்களை சரிகட்டுவதற்காக யாருக்கும் உள்ளூர் ஆட்டங்கள் இல்லாதவாறு போட்டி அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கொரோனா அச்சத்துக்கு மத்தியில் போட்டியை நடத்த வேண்டி இருப்பதால் வீரர்களின் அதிகமான போக்குவரத்தை தவிர்ப்பதற்காக போட்டி நடக்கும் இடங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது. லீக் சுற்றின் போது ஒவ்வொரு அணிகளும் மொத்தம் 3 தடவை மட்டுமே மற்ற இடங்களுக்கு பயணம் மேற்கொள்ளும்.ரசிகர்களுக்கு அனுமதி இல்லை

கொரோனா எதிரொலியாக கடந்த ஆண்டு ஐ.பி.எல். போட்டியை நேரில் பார்க்க ரசிகர்கள் அனுமதிக்கப்படவில்லை. இந்த சீசனிலும் ரசிகர்களின் ஆரவாரத்தை பார்க்கும் வாய்ப்பு இல்லை. பூட்டிய மைதானத்திலேயே ஆட்டங்கள் நடக்க உள்ளன. கொரோனா தடுப்பு மருத்துவ உயிர் பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட்டு அதில் இணைந்துள்ள வீரர்கள் மற்றும் பயிற்சி குழுவினர், நிர்வாகிகள் எந்த காரணத்தை கொண்டும் கொரோனா விதிமுறைகளை மீறக்கூடாது என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டு உள்ளது.வீரர்களுக்கு அடிக்கடி கொரோனா பரிசோதனை செய்யும் நடைமுறை இந்த முறையும் தொடரும். எந்த வீரருக்காவது கொரோனா பாதிப்பு தென்பட்டால் உடனடியாக அந்த வீரர் 10 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவார்.

முதல் ஆட்டத்தில் யார்-யார்?

சென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் இன்றிரவு அரங்கேறும் தொடக்க ஆட்டத்தில் 5 முறை சாம்பியனான ரோகித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி, விராட் கோலி தலைமையிலான பெங்களூரு ராயல் சேலஞ்சர்சுடன் பலப்பரீட்சை நடத்துகிறது.பேட்டிங் மற்றும் பந்து வீச்சு இரண்டிலும் மும்பை அணி வலுவாக இருந்தாலும் தங்களது தொடக்க லீக்கில் தோற்பது அந்த அணிக்கு வாடிக்கையாகும். 2013-ம் ஆண்டில் இருந்து அந்த அணி தொடர்ந்து 8 சீசனில் தங்களது முதல் லீக்கில் தோற்று வருகிறது. அந்த சறுக்கலுக்கு இந்த முறை மும்பை முடிவு கட்டுமா? என்பதை பார்க்க சுவாரஸ்யமாக இருக்கும்.தென்ஆப்பிரிக்காவைச் சேர்ந்த விக்கெட் கீப்பர் குயின்டான் டி காக் சில தினங்களுக்கு முன்பு தான் மும்பை அணியுடன் இணைந்தார். 7 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதால் அவர் முதல் ஆட்டத்தில் ஆடமாட்டார் என்று தெரிகிறது. இதனால். விக்கெட் கீப்பிங் பணியை இ'ான் கி'ன் கவனிப்பார். ரோகித் சர்மா, இ'ான் கி'ன், சூர்யகுமார் யாதவ், பாண்ட்யா சகோதரர்கள், பும்ரா, டிரென்ட் பவுல்ட் என்று நட்சத்திர பட்டாளத்துடன் களம் காணும் மும்பை அணி ஆதிக்கம் செலுத்தும் முனைப்புடன் ஆயத்தமாக உள்ளது.

விராட் கோலி அணி

இதுவரை பட்டம் வெல்லாத விராட் கோலி தலைமையிலான பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணி இந்த சீசனில் அதிக தொகை கொடுத்து இரு வீரர்களை வாங்கியிருக்கிறது. ரூ.14 கோடிக்கு ஆல்-ரவுண்டர் மேக்ஸ்வெல்லையும், ரூ.15 கோடிக்கு நியூசிலாந்து ஆல்-ரவுண்டர் கைல் ஜாமிசனையும் ஏலத்தில் எடுத்துள்ளனர். ஏற்கனவே அதிரடி வேட்டைக்கு டிவில்லியர்சும் காத்திருக்கிறார்.

கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டு வந்துள்ள இளம் பேட்ஸ்மேன் தேவ்தத் படிக்கல் அணியுடன் இணைந்து பயிற்சியை தொடங்கி விட்டதால் ஆடும் லெவனில் இடம் பெற வாய்ப்புள்ளது.பந்து வீச்சில் வாீங்டன் சுந்தர், யுஸ்வேந்திர சாஹல், முகமது சிராஜ், நவ்தீப் சைனி உள்ளிட்டோர் நம்பிக்கை அளிக்கிறார்கள். சென்னை ஆடுகளம் மெதுவான தன்மை கொண்டது என்பதால் சுழற்பந்து வீச்சின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறும். மொத்தத்தில் சவால்மிக்க இரு அணிகள் மல்லுகட்டுவதால் இந்த ஆட்டம் ரசிகர்களின்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

# இந்தியா-கனடா வர்த்தக உறவுகள் 'மீண்டும் மலருகின்றன'

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

இந்தியாவும் கனடாவும் நான்கு ஆண்டுகளுப் பிறகு சிறிய அளவிலான இருதரப்பு வர்த்தக உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.


இது தொடர்பில் இந்திய-கனேடிய உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் திரைமறைவில் நடைபெற்று வந்தன. இருதரப்பும் விரிவான கூட்டு பொருளாதார ஒப்பந்தம் (CEPA-சீபா) ஒன்றை ஏற்படுத்த கடந்த பத்தாண்டுகளாக தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

அப்படியான ஒப்பந்தம் தொடர்பில் கடந்த ஆகஸ்ட் 2017ல் கடைசியாக நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

"நாங்கள் கனேடியத் தரப்புடன் கடந்த 2020 ஜுன் முதல் மெய் நிகர் தொடர்புகள் மூலம் பல சுற்றுகள் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தோம். அவ்வகையில் கடந்த அக்டோபரில் விரைவாக இடைக்கால உடன்பாடு ஒன்றை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடங்குவதற்கு எண்ணியிருந்தோம். அதற்கான முகாந்திரங்கள் குறித்த ஒரு குறிப்பு கனேடிய தரப்புடன் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது. எனவே முறையான வகையில் இந்த மாதத்தின் (ஏப்ரல்) பிற்பகுதியில் தீவிரமான பேச்சுவார்த்தைகள் நடைபெறும் சாத்தியங்கள் உள்ளன" என்று இந்திய வர்த்தகத்துறை உயரதிகாரி ஒருவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டனுடன் இந்தியா சிறிய வர்த்தக உடன்பாடுகளை முன்னெடுக்க ஆர்வமாக இருந்தாலும், அதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதும் இல்லை. குறுகியகால வர்த்தக உடன்பாடுகளைவிட இந்தியாவுடன் விரிவான சுதந்திர வர்த்தக உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளவே பெரும்பாலான நாடுகள் விரும்புகின்றன.

அமெரிக்காவுடன் இடைக்கால அல்லது சிறிய அளவிலான வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ள இந்தியா எடுத்த முயற்சியும் எதிர்பார்த்த அளவுக்கு பலனளிக்கவில்லை. ஜோ பைடன் புதிய அதிபராக பதவியேற்ற பிறகு இந்திய-அமெரிக்க உறவுகள் வேகமெடுக்க ஆரம்பித்துள்ளன. அண்மையில் அமெரிக்க பாதுக்காப்பு அமைச்சர் லாயட் ஆஸ்டின் மார்ச் மாதம் மத்தியில் இந்தியா வந்திருந்தார்.




இப்போது ஏப்ரலில் அமெரிக்க அதிபரின் சிறப்புத் தூதராக இருக்கும் ஜான் கெர்ரி இந்தியாவுக்கு வந்துள்ளார். இவர் முன்னர் அமெரிக்காவின் வெளியுறவு அமைச்சராக இருந்தவர். அவ்வகையில் இந்திய-அமெரிக்க உறவுகளை வலுப்படுத்தி மேலும் முன்னெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

வட அமெரிக்க நாடுகளுடன் காத்திரமான இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவையும் கட்டியெழுப்ப இந்தியா முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. இராஜதந்திர உறவில் மட்டுமல்ல, பொருளாதார உறவுகளிலும் இந்தியா கனடாவை ஒரு முக்கிய பங்காளியாகக் கருதுகிறது என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார்.

இதன் பின்புலத்திலேயே இந்தியா-கனடா இடையேயான பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் இப்போது வேகமெடுக்க ஆரம்பித்துள்ளன. இந்தப் பேச்சுவார்த்தைகள் ஏப்ரல் மாத இறுதியில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் அதற்கான திகதிகள் இன்னும் முடிவாகவில்லை. இந்திய-கனேடிய தரப்புக்கு இடையே 2017 ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற 10ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு முன்னேற்றங்கள் ஏதுவுமின்றி தேக்க நிலையே காணப்பட்டது.

அந்த சமயத்தில் பொருட்கள் மற்றும் சேவைகள், இ-காமர்ஸ், தொலைத்தொடர்பு, போன்ற விஷயங்களில் "ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன" என்று கூறப்பட்டாலும் யதார்த்தமான முன்னேற்றங்கள் ஏதும் இருக்கவில்லை. பின்னர் 2020 நவம்பர் மாதம் இந்திய-கனேடிய அதிகாரிகள் மட்டத்தில் காணொளி வாயிலாகக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கனடாவைப் பொறுத்தவரையில் "இந்தியா மிகமுக்கியமான வர்த்தக பங்காளி என்றும், இந்தியாவுடனான வர்த்தக உறவைப் பன்மடங்கு பெருக்க கனடா மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது, அது தொடர்பில் விரிவான உடன்படிக்கைகளை எட்டுவதற்கு கனடா தீவிரமாகவுள்ளது" என்று கூறப்பட்டது.




கனேடியப் பொருட்களுக்கு இந்தியச் சந்தையில் கணிசமான இடத்தைப் பெறுவதில் கனடா அதிக தீவிரம் காட்டுகிறது. இதன் மூலம் கனேடியர்களுக்கு கூடுதலான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்று கனடா கருதுகிறது.

ஆனால் இது ஒரு நெருடல் உள்ளது. இந்தியத் தயாரிப்புகளுக்கு கனடா பெரியதொரு சந்தையாக இல்லை. எனவே சேவைத்துறையில் அதை ஈடுகட்ட இந்தியா விழைகிறது. அந்த அம்சத்தை சீபாவில் உள்வாங்க இந்தியா விரும்புகிறது. இதன் மூலம் தகவல்-தொழில்நுட்ப துறையில் உலகளவில் முன்னோடியாக இருக்கும் இந்தியா தமது தொழில்சார் வல்லுநர்கள் அதிகளவில் கனடாவுக்குச் சென்று பணியாற்ற முடியும் என்று நம்புகிறது. அவ்வகையில் கனடாவுக்கு செல்ல விரும்பும் தொழில்சார் வல்லுநர்களுக்கு விசா பெறுவது சுலபமாகும்.

கனடாவைப் பொறுத்தவரை பருப்புகள் ஏற்றுமதியில் இந்தியச் சந்தையில் பெரிய வாய்ப்புகளை எதிர்பார்க்கிறது. தமது விவசாயப் பொருட்களுக்கு இந்தியச் சந்தை திறந்துவிடப்பட வேண்டும் என்பதும் கனடாவின் விருப்பமாகவுள்ளது.




கடந்த 2020ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து கனடாவுக்கு ஏற்றுமதியான பொருட்களின் பெருமதி $2.8 பில்லியன் டாலர்கள் அளவுக்கு இருந்தது. அதே நேரம் கனடாவிலிருந்து இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி $3.9 பில்லியன் டாலர். அவ்வகையில் $1.1 பில்லியன் டாலர் வர்த்தக பற்றாக்குறை உள்ளது என்பதை இந்தியா கனடாவுக்குச் சுட்டிக்காட்டுகிறது. எனவே அந்தப் பற்றாக்குறையை சேவைகள் துறை மூலம் ஈடுகட்ட வேண்டும் என்பது இந்தியாவின் எதிர்பார்ப்பு.

கனடாவிலிருந்து நிலக்கரி, பொட்டாசியம் குளோரைட், கச்சா எண்ணெய் மற்றும் பருப்பு வகைகளை இறக்குமதி செய்யும் இந்தியா தமது தரப்பிலிருந்து மருந்துப் பொருட்கள், எரிவாயு விநியோகத்திற்கான குழாய்கள், இறால் வகைகள் ஆகியவற்றை முக்கியமாக ஏற்றுமதி செய்கிறது.

இருதரப்புக்கும் இடையே நெருடலாக இருக்கும் மற்றொரு விஷயம் அந்நிய நேரடி முதலீடு. வெளிநாட்டு முதலீடுகளைப் பாதுகாப்பது தொடர்பான உடன்பாடு ஒன்றை ஏற்படுத்த மன்மோகன் சிங் தலைமையிலான அரசில் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்திருந்தாலும் அது கிணற்றில் போட்ட கல்லாகவே உள்ளது.

மோதி தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, அவர்கள் இருதரப்பு முதலீட்டு உடன்படிக்கையை முன்னெடுக்க வேண்டுமென்று விரும்பி அதற்கான வரைவு ஒன்றையும் அறிமுகப்படுத்தினர். அதுவும் பேச்சுவார்த்தைகள் கட்டத்திலுள்ளன. அது விரைவாக முடிக்கப்பட வேண்டும் என்று இருதரப்பும் விரும்புகின்றன.

இரு நாடுகளும் சீனாவின் பலம் மற்றும் ஆக்கிரமிப்பை உணர்ந்துள்ளன. ஜனநாயக விழுமியங்கள் எனும் அடிப்படையில் கனடா, அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம், ஆஸ்திரேலியா, ஜப்பான், பிரேசில், தென் ஆப்ரிக்கா போன்ற நாடுகள் இந்தியாவுடன் நெருக்கமான பொருளாதார மற்றும் இராஜதந்திர உறவுகளை விரும்புகின்றனர்.

இந்தியாவிலுள்ள சந்தை வாய்ப்புகளை நழுவவிட எந்த வளர்ந்த நாடும் விரும்பவில்லை. உதாரணமாக கனடாவிலிருந்து 1% அளவிலான பொருட்களே இந்தியாவுக்கு ஏற்றுமதியாகின்றன. அதேவேளை சீனாவுக்கு 10% பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பெறுமதியளவிலும் இது 10-1 எனும் வீதத்திலேயே உள்ளது.

பொருளாதார ரீதியாக சீனாவை ஒப்பிடும் போது இந்தியாவுடன் நிலவும் வர்த்தக இடைவெளியைக் குறைக்க கனடா மிகவும் ஆர்வமாக உள்ளது. சீபா உடன்படிக்கை விரைவாக எட்டப்பட வேண்டும் என்பதே இருநாடுகளின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

## (3ம் பக்கத் தொடர்ச்சி)

ஆவலை தூண்டி உள்ளது. இவ்விரு அணிகளும் இதுவரை 27 ஆட்டங்களில் நேருக்கு நேர் மோதியுள்ளன. இதில் 9-ல் பெங்களூருவும், 17-ல் மும்பையும் வெற்றி பெற்றன. ஒரு ஆட்டம் டை ஆனது.

வீரர்கள் பட்டியல்

இரு அணிகளின் உத்தேச அணி வருமாறு:-

மும்பை இந்தியன்ஸ்: ரோகித் சர்மா (கேப்டன்), இ'ான் கி'ன், சூர்யகுமார் யாதவ், ஹர்திக் பாண்ட்யா, கீரன் பொல்லார்ட், ஜேம்ஸ் நீம், குருணல் பாண்ட்யா, நாதன் கவுல்டர்-நிலே அல்லது ஜெயந்த் யாதவ், ராகுல் சாஹர், டிரென்ட் பவுல்ட், ஜஸ்பிரித் பும்ரா.

பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ்: விராட் கோலி (கேப்டன்), தேவ்தத் படிக்கல், டிவில்லியர்ஸ், மேக்ஸ்வெல், முகமது அசாருதீன், டேனியல் கிறிஸ்டியன், வாஷிங்டன் சுந்தர், கைல் ஜாமிசன், நவ்தீப் சைனி, முகமது சிராஜ், யுஸ்வேந்திர சாஹல்.

இதுவரை சாம்பியன்கள்
2008 - ராஜஸ்தான்
2009 - டெக்கான் சார்ஜர்ஸ்
2010 - சென்னை
2011 - சென்னை
2012 - கொல்கத்தா
2013 - மும்பை
2014 - கொல்கத்தா
2015 - மும்பை
2016 - ஐதராபாத்
2017 - மும்பை
2018 - சென்னை
2019 - மும்பை
2020 - மும்பை
2021 - ???

தலைமைத்துவ அனுபவம்

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் ரோகித் சர்மா 116 ஆட்டங்களுக்கு கேப்டனாக இருந்து அதில் 68-ல் வெற்றியும், 44-ல் தோல்வியும் சந்தித்து இருக்கிறார். 4 ஆட்டங்கள் டையில் முடிந்தது. விராட் கோலி இதுவரை 125 ஆட்டங்களில் கேப்டனாக பணியாற்றி அதில் 55-ல் வெற்றியும், 63-ல் தோல்வியும் கண்டுள்ளார் 3 ஆட்டம் டை ஆனது. 4 ஆட்டங்களில் முடிவில்லை.

இரவு 7.30 மணிக்கு தொடங்கும் இந்த ஆட்டத்தை ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனல்கள் நேரடி ஒளிபரப்பு செய்கின்றன.

# மக்கள், மண், மதம் அனைத்தையும் ஒருங்கிணைத்து நேசித்தவர் 'மக்களின் ஆயர்' இராயப்பு ஜோசப்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)



'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்'
- குறள் 664 (பொருட்பால் - அமைச்சியல் - வினைத்திட்பம்) -

இந்தக் குறளில் கூறப்பட்டுள்ள அனைத்து அம்சங்களும் காலஞ்சென்ற "மக்களின் ஆயர்" இராயப்பு ஜோசப் அவர்களுக்கு முற்றாகப் பொருந்தும். அவர் ஆயர், ஆண்டகை என்பதைவிட தமிழ் மக்களால் ஆண்டவராகவே பார்க்கப்பட்டார். ஆம் தமிழ் மக்களுக்காக அவர் சொன்னதையும் செய்தார், மக்களின் துன்பம் அறிந்து சொல்லாததையும் செய்தார்.

மிகவும் மோசமான உக்கிரமான போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் மக்களை காப்பாற்ற வேண்டிய கடமை மதத்திற்கு உண்டு என்று உணர்த்தியவர் ஆயர் ராயப்பு ஜோசப் அவர்கள்.

லண்டன் பிபிசி தமிழோசையின் மூத்த தயாரிப்பாளராக நான் இருந்த காலத்தில் அவருடன் பல விஷயங்கள் குறித்து உரையாடும் வாய்ப்பும் பாக்கியமும் எனக்கு கிடைத்தது.

போர் வலையத்தில் நடைபெற்ற கொடூர சம்பவங்களைக் காழ்ப்புணர்ச்சியின்றி வெளியுலகத்திற்கு எடுத்துச் சென்றதில் அவர் முக்கியப் பங்காற்றினார். யுத்த காலத்தில் களத்திலிருந்து தகவல்களைப் பெறுவது மிகவும் சவாலான ஒன்று. முதலில் தொடர்புகள் இருக்க வேண்டும், அப்படி தொடர்புகள் இருந்தாலும் செய்திக்காக அழைக்கும் போது தொடர்பு கிடைக்க வேண்டும். தொடர்பு கிடைத்தாலும் அது தெளிவாக இருக்க வேண்டும். தெளிவாக இருந்தாலும் இடையே துண்டிக்கப்படாமல் இருக்க வேண்டும். இப்படிப் பல நெருக்கடிகளுக்கு இடையே பல முறை அவருடன் உரையாடியுள்ளேன்.

அவரை நேரடியாகவே மொபைல் தொலைபேசியில் அழைக்க முடியும். ஆயராக இருந்தாலும் அழைப்பை ஏற்பார். விஷயத்தைச் சொல்லி பேட்டி வேண்டும் என்றதும், சரியென்றால் உடனடியாகவோ அல்லது சிறிது தாமதமாகவோ நேரம் ஒதுக்கிக்கொடுப்பார். அவசரப்பட்டு "எடுத்தோம் கவிழ்த்தோம்" என்று பேசும் குணம் அவரிடம் இருந்ததில்லை.

போர்க்காலத்தில் கூறப்படும் எந்தத் தகவலும் திரிபு படுத்தப்பட்டு ஆபத்துக்கு இட்டுச் செல்லும் என்பதை நன்கு அறிந்தவர் இறைவனடி சேர்ந்துள்ள ஆயர் இராயப்பு ஜோசப் அவர்கள்.



அதேவேளை, தகவல்களை சேகரித்த பிறகே பேசும் தன்மை கொண்டவர். "தம்பி கொஞ்சம் பொறுங்கோ, விசாரித்துப் போட்டுச் சொல்கிறேன்" என்று அவர் பல முறை கூற நான் கேட்டுள்ளேன்.

அவருடன் நான் பேசிய பல முக்கியமான நாட்களில் ஒன்று "மடுமாதாவும் வலிந்த தாக்குதல் காரணமாக இடப்பெயர்வுக்குள்ளான" நாள். அதற்கு சில நாட்கள் முன்னரே மன்னார் தேவாலாயத்தைச் சுற்றியுள்ள பகுதிளில் போர் மேகங்கள் சூழ்ந்திருந்தன.

மன்னார் மறைமாவட்டத்தின் பல பகுதிகள் போர்க்காலத்தில் மோசமான பாதிப்புக்களை சந்தித்தன. அங்கு தமிழ் மக்களுக்கு அடைக்கலமாகத் திகழ்ந்த பல தேவாலயங்கள் தாக்கப்பட்டன, மக்கள் கொல்லப்பட்டனர், அங்கவீனர்கள் ஆக்கப்பட்டனர் அல்லது காணாமல் போயினர். கத்தோலிக்க திருச்சபையின் பல குருமார் தொடர்ச்சியாக மோசமான யுத்தமொன்றை முன்னெடுத்த கொடுங்கோல் ஆட்சியில் கொல்லப்பட்டனர் அல்லது அதனால் பாதிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் ஷெல்லடித் தாக்குதலிருந்து தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர்.

மன்னார் பகுதி மக்களுக்கு மட்டுமின்றி இலங்கை முழுவதும் மடு மாதா மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தனர். தன்னிடம் அடைக்கலம் புகுந்தவர்களை காத்து இரட்சித்து வந்த மடு மாதாவே இடம்பெயர்ந்து செல்லும் நிலையை உருவாக்கியது 2008 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருந்த போர். அந்த ஆண்டின் முற்பகுதியிலிருந்தே மன்னார் பகுதியில் இலங்கை படைகளின் தாக்குதல் மிகவும் தீவிரமாக இருந்தது. ஏராளமானோர் அங்கிருந்த தேவாலயங்களில் தஞ்சமடைந்தனர்.

அரசின் பார்வையில் தமிழர்கள் அனைவருமே விடுதலைப் புலிகளாகத் தெரிந்தனர். தேவாலயங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களுடன் பதுங்கியுள்ளனர் என்று அரசு பிரச்சாரம் செய்து வந்தது. தேவாலயங்கள் இருக்கும் பகுதியைச் சுற்றியும் தாக்குதல்கள் ஆரம்பமாயின.

அவ்வகையில் மடு மாதா தேவாலயத்தைச் சுற்றியும் தாக்குதல்கள் இடம்பெற ஆரம்பித்தன. அந்த தேவாலயத்தை விடுதலைப் புலிகள் ஒரு தளமாகப் பயன்படுத்தி தாக்குதல்களை நடத்துகின்றனர். ஆலய வளாகத்திலிருந்து புலிகள் எறிகணைகளை ஏவுகின்றனர் என்றெல்லாம் அரசு தீவிரமான பிரச்சாரத்தை முன்னெடுத்து, அந்தப் பகுதியின் மீதான தனது தாக்குதலை நியாயப்படுத்தியது.

இந்நிலையில் மக்களை மட்டுமின்றி மடு மாதாவையும் காப்பாற்ற வேண்டிய நெருக்கடியான நிலை மன்னார் மறை மாவட்டத்திற்கு ஏற்பட்டது. 400 ஆண்டுகளுக்கும் பழமையான தேவாலயத்தையும் அங்கிருந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்கும் மடுமாதாவையும் காப்பாற்ற வேண்டிய நிர்பந்ததை எதிர்கொண்ட ஆயர் மிகவும் துணிச்சலான முடிவொன்றை எடுத்தார். அது மடு மாதாவின் "திருச்சொரூபத்தை" மடு தேவாலயத்திலிருந்து பாதுகாப்பாக விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்த தேவன்பிட்டி புனித சேவியர் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்வது என்கிற முடிவு.

அந்த முடிவுக்காக கடும் விமர்சனங்களை எதிர்கொண்டார் ஆயர் இராயப்பு ஜோசப். மடுமாதா 400 ஆண்டுகளில் முதல் முறையாக இடம்பெயர்ந்து தேவன்பிட்டிக்கு சென்ற போது அவருடன் பேசும் வாய்ப்பு எனக்கு கிட்டியது.

"எனது மக்கள், அவர்களது நிலம் ஆகியவற்றைக் காப்பாற்றுவதுடன் அனைத்திற்கும் மேலாக பல்லாயிரக்கணாக நம்பிக்கையாளர்கள் வணங்கும் எமது மாதாவைக் காப்பாற்ற வேண்டிய கடமை எனக்கு உள்ளது. மாதாவின் திருச்சொரூபத்தின் பாதுகாப்பு நான் அஞ்சுகிறேன். எனவேதான் நான் எமது மாதாவை தேவன்பிட்டிக்கு எடுத்துச் செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டேன். அங்கு மாதா தனது மக்களின் மத்தியில் பாதுகாப்பாக இருப்பார்" என்று மிகவும் கனத்த இதயத்துடன் அதே நேரம் உறுதி தளராமல் கூறினார் காலஞ்சென்ற ஆயர் இராயப்பு ஜோசப்.

மடுமாதா இடம்பெயர்ந்த அன்று நடைபெற்ற தாக்குதலில் அந்த தேவாலயத்தைச் சுற்றியிருந்த சூழலில் அரசின் ெ'ல் வீச்சுத் தாக்குதலில் குறைந்தது 40 பேர் கொல்லப்பட்டனர்.

இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களுக்கு மிக முக்கியமானதொரு சாட்சியாக இருந்தார் ஆயர் இராயப்பு ஜோசப். தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தனது அஞ்சலியில் தெரிவித்திருந்ததைப் போல், இலங்கையில் போர்க் காலத்தில் நடைபெற்ற பாரிய மனித உரிமை மீறல்களை பன்னாட்டரங்குக்கு எடுத்துச் சென்றவர் அவர். அதையடுத்தே இலங்கை மீதான அழுத்தங்கள் அதிகரித்தன.

மறைந்த ஆயர் இராயப்பு ஜோசப் பல வகையில் தனித்துவமானவர். அவர் இலங்கையிலிருந்த இதர கத்தோலிக்க குருமார்களைவிட தமது மக்களையும் மண்ணையும் மிகவும் நேசித்தார்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக அவரது குரல் ஒலித்தது. அதன் காரணமாக அவர் தொடர்ந்து இராணுவத்தினர் மற்றும் சிங்கள அரசியல்வாதிகள் மற்றும் தென்னிலங்கை ஊடகங்களின் ஏச்சுப்பேச்சுகளுக்கு ஆளானார், அச்சுறுத்தப்பட்டார், மன ரீதியாகத் துன்புறுத்தப்பட்டார். விசாரணை என்று கூறி அலைக்கழிக்கப்பட்டார்.

அதிலும் குறிப்பாக போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை இராணுவத்தினர் செய்தனர் எனும் குற்றச்சாட்டை அவர் முன்வைத்த போது இந்த துன்புறுத்தல்கள் அதிகரித்தன. இறுதிக்கட்ட போரின் போது 150,000 பொதுமக்கள் ஒரே ஆண்டில் காணாமல் போயினர் என்று தரவுகளுடன் ஆயர் கூற பிரச்சனை பூதாகாரமாக வெடித்தது. சிங்களம் அவர் மீது வன்மத்தை முன்னெடுத்து நஞ்சைக் கக்கியது.



கடந்த 2009 மே மாதம் போர் முடிவுக்கு வந்துவிட்டது என்று அரசு அறிவிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக ஆயிரக்கணக்கான மக்கள் சிக்கியிருந்த பகுதியின் மீது நடைபெற்ற ஒரு தாக்குதலில் 100க்கும் அதிகமான குழந்தைகள் கொல்லப்பட்டதை வடக்கு இலங்கையில் நிலவரம் "இரத்தக்களரியாகவுள்ளது" என்று ஐக்கிய நாடுகள் சபை கூறியது.

எனினும், எவ்விதமான சர்வதேசப் பிரசன்னமும் ஊடகங்களும், அரசால் "மோதலற்ற பகுதி" என்று அறிவிக்கப்பட்டிருந்த பிரதேசத்தில் இருக்கவில்லை. எனவே அங்கு நடைபெற்ற கொடூரங்கள் உலகத்தின் பார்வைக்கு உடனடியாக வராமலிருந்தது.

அப்போது பாதிக்கப்பட்டோரின் குரலாக இருந்தார் ஆயர் இராயப்பு ஜோசப். அவருக்கு அனைத்து தரப்பிலிருந்தும் தகவல்கள் வந்துகொண்டிருந்தன. அவருக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் உண்மைகளைப் பேசினார். எனவே அவர் "சர்ச்சைக்குரியவர்" மற்றும் "புலி ஆயர்" என்று ஏசப்பட்டார்.

அவர் மீதான விமர்சனங்கள் குறித்து நான் அவரிடமே அப்போது கேட்டேன். "நான் சர்ச்சைக்குரிய ஆயர் என்று அழைக்கப்படுகிறேன் ஏனென்றால் சர்ச்சைக்குரிய விஷயங்கள் நடைபெறுகின்றன. அதற்கு எதிராக நான் குரல் கொடுத்தால். என் மீது "புலி முத்திரை" குத்தப்படுகிறது அதோடு சர்ச்சைக்குரியவர் என்ற பெயரும் ஏற்படுகிறது. எனது மக்களுக்காக நான் பேசினால் நான் "வெளிப்படையாக" பேசுகிறேன் என்று கூறப்பட்டேன். தமிழ் மக்களுக்காக கரிசனப்பட்டு அவர்களுடன் நின்றதால், என்னை "தேசத் துரோகி" என்று அழைத்தனர். புலிகளின் ஆதரவாளர், பிரிவினைவாதி என்று ஓயாமல் என்னைப் பற்றி பிரச்சாரம் செய்தார்கள். அப்படியான குற்றச்சாட்டுகள் குறித்து நான் கவலைப்படுவதில்லை. எமது மக்களுக்காகவும், அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகவும், இங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் நான் குரல் கொடுக்கத் தயங்கமாட்டேன்" என்று எவ்வித அச்சமும் காழ்ப்புணர்ச்சியுமின்றி எனக்கு பதிலளித்தார் "மக்களின் ஆயர்" இராயப்பு ஜோசப்.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

(5ம் பக்கம் தொடர்ச்சி)

## மக்கள், மண், மதம் அனைத்தையும் ஒருங்கிணைத்து நேசித்தவர் 'மக்களின் ஆயர்' இராயப்பு ஜோசப்

போர் முடிந்த பிறகு காணாமல் போனவர்களின் எண்ணிக்கை குறித்து அவர் ஆவணப்படுத்தி வெளியிட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் ஜனநாயக மரபுகளை மதிக்கும் நாடுகளின் மனசாட்சியை உலுக்கின. போர் வலையத்தில் இருந்த 150,000 பேரை போர் முடிந்த பிறகு காணவில்லை என்று உலகிற்குத் தெரிவித்தார் ஆயர்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் இணக்கப்பாடு காண்பதற்கென்று அரசால் ஏற்படுத்தப்பட்ட எல் எல் ஆர் சி அமைப்பிடம் 2011 ஆயர் இராயப்பு ஜோசப் சில தரவுகளை அளித்தார்.

"கடந்த அக்டோபர் 2008 முதல் மே 2009 வரையிலான காலப்பகுதியில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்த மக்கள் தொகைக்கும், 2008 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கு முன்னர் வன்னியில் வசித்த மக்கள் தொகைக்கும்



146,679 பேர் இடைவெளி உள்ளது. அவர்களுக்கு என்னவாயிற்று?" என்று அவர் வைத்த கேள்வியைக் கண்டு நாடே அதிர்ந்து போனது.

அவர் எழுந்தமானமாக எந்த தரவுகளை முன்வைக்கவில்லை. முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி கச்சேரிகளிடமிருந்து எடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையிலேயே அவர் அந்தக் கேள்வியை எழுப்பியிருந்தார். அவர் கேட்ட கேள்வி மிகவு எளிமையானது.

கச்சேரியின் கணக்குகளின் படி அதாவது 2008 அக்டோபருக்கு முந்திய பகுதியில் வன்னியில் 429,059 பேர் வசித்தனர். ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானப் பணிகளுக்கான அலுவலகம் 10 ஜூலை 2009 நிலவரப்படி வன்னியிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தவர்களின் எண்ணிக்கை 282,380 என்று கணக்கிட்டிருந்தது. மீதமானவர்களுக்கு என்னவாயிற்று என்பதே ஆயரின் கேள்வியாக இருந்தது.

இந்தத் தரவுகளை எல் எல் ஆர் சியிடம் வைப்பதற்கு முன்னரே அயர்லாந்து தலைநகர் டப்ளினில் இடம்பெற்ற "இலங்கைக்கான மக்கள் தீர்ப்பாயத்தில்" அவர் சாட்சியமளித்திருந்தார். இதை நினைவு கூர்ந்தார் அங்கிருக்கும் டிரினிட்டி கல்லூரியில் உதவிப் பேராசிர்யராக இருக்கும் கலாநிதி ஜூட் லால் ஃபெர்ணாண்டோ.



"மிகவும் வெளிப்படையாகப் பேசிய ஆயர் அவர்களை சிங்களப் பேரினவாதிகளும் அரசும் மிகவும் மோசமாக விமர்சித்து அவர் "புலி ஆயர்" என்று ஏளனம் செய்தன. ஆனால் அவர் தமிழர்களால் "மக்கள் ஆயர்" என்று அன்புடன் அழைக்கப்பட்டார். சிங்கள கத்தோலிக்கத் திருச்சபையால் அவர் புலிகளுக்கு ஆதரவானவர் என்று கூறப்பட்ட போது கூட அதை அவர் பொருட்படுத்தவில்லை".

அவர் அச்சமின்றி கருணையை வெளிப்படுத்தினார். இதன் காரணமாக சிங்கள கத்தோலிக்க நிர்வாகத்தால் புறந்தள்ளப்பட்டார். ஆனால் இதைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. அவரது ஒரே கவலை "தமிழர் நல்வாழ்வு" மட்டுமே.

அவர் காலமான பிறகு நாட்டின் ஜனாதிபதியும் போர்க் காலத்தில் பாதுகாப்புச் செயலராகவும் இருந்த கோத்தாபய ராஜபக்ச மரியாதை நிமித்தம் கூட இரங்கல் தெரிவிக்கவில்லை. பிரதமர் மஹிந்த ராஜபக்ச இரு நாட்களுக்குப் பிறகே சம்பிரதாய ரீதியில் ஒரு இரங்கலை வெளியிட்டார்.

இலங்கையில் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான கர்தினால் மால்கம் ரஞ்சித் கூட கடமையே என்றுதான் அவரது நல்லடக்கத்தில் பங்குபெற்றார் என்பதைக் காணக் கூடியதாக இருந்தது.

ஆயர் இராயப்பு ஜோசப்பின் மரணத்தின் மூலம் போர்க் குற்றங்கள் தொடர்பிலான மிக முக்கியான சாட்சி ஒன்று மௌனமாகியுள்ளது. ஆனால் "மக்கள் ஆயர்" விட்டுச் சென்றுள்ள சாட்சியங்களும் பணிகளும் எக்காலத்திற்கும் நிற்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் மக்களுக்காக அயராது உழைத்தீர்கள், உங்கள் பணி வீணாகாது. சென்று வாருங்கள் ஆயர் அவர்களே.




# இலங்கையின் கொரோனா மரணங்கள் 600 ஐ எட்டுகின்றது

இலங்கையில் கொவிட்-19 தொற்று தொடர்பான மேலும் 2 மரணங்கள் பதிவாகியுள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்று உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் ஏற்கனவே 591 கொரோனா மரணங்கள் பதிவானதாக அறிவிக்கப்பட்ட நிலையில், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள 2 மரணங்களுடன், இலங்கையில் இதுவரை 593 கொவிட்-19 தொடர்பான மரணங்கள் பதிவாகியுள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இவ்வாறு அறிவிக்கப்பட்டவர்களில் இருவரும் 8ம் திகதி வியாழக்கிழமை மரணமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

592ஆவது மரணம்
தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த, 70 வயதான ஆண் ஒருவர், கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கொவிட்-19 தொற்றாளராக அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, ஐனுர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு மரணமடைந்துள்ளார். இவரது மரணம் இன்று (08) நிகழ்ந்துள்ளது. இவரது மரணத்திற்கான காரணம், உக்கிர மாரடைப்பு நிலை, குருதி வி'மடைவு அதிர்ச்சி, உயர் இரத்த அழுத்தம் மற்றும் கொவிட்-19 நியூமோனியா நிலை, என அறிவிக்கப்பட்டுள்ளது.

593ஆவது மரணம்
கோண்டாவில் பிரதேசத்தைச் சேர்ந்த, 79 வயதான பெண் ஒருவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமடைந்துள்ளார். இவரது மரணம் இன்று (08) நிகழ்ந்துள்ளது. இவரது மரணத்திற்கான காரணம், கொவிட்-19 தொற்றினால் சிக்கலடைந்த நாட்பட்ட சிறுநீரக நோய் நிலை, அதன் காரணமாக ஏற்பட்ட குருதி வி'டைவு நிலை, நியூமோனியா நிலை, சிறுநீர் வழியில் தொற்று மற்றும் நீரிழிவு நோய் நிலை, என அறிவிக்கப்பட்டுள்ளது.



ப்ராம்ப்ட்டன் நகரம்
2021 ஆம் ஆண்டிற்கான வரி செலுத்துதலை தள்ளி வைக்கும் திட்டம்

- 2021 ஆம் ஆண்டிற்கான வரி செலுத்துதலை விண்ணப்பம் செய்வதன் மூலம் தள்ளி வைக்கலாம்
- ஏப்ரல் 15 க்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்கவும்
- தள்ளி வைக்கப்படும் தொகைகளை டிச.15, 2021 க்குள் செலுத்திவிட வேண்டும்
- வரி பாக்கி இருப்பின் வட்டியும் அபராதமும் விதிக்கப்படும்
- நீங்கள் தகுதி பெறுகிறீர்களா எனப் பார்க்க வருகை தரவும்: bramptan.ca

21-0587 311 brampton.ca

BRAMPTON

# அமெரிக்க காங்கிரஸ் முதல் வெள்ளை மாளிகை வரை இலங்கை ஒரு வெளிப் பகையை எதிர் கொள்கிறது!

கனடா நக்கீரன்

கடந்த மார்ச் மாதம் 23 ஆம் நாள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை (ஐநாமஉ) பேரவையில் ஐக்கிய இராச்சியம் மற்றும் அதன் நேசநாடுகளும் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய விமர்சனம் தொடருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானம் 46-1 வரவேற்று அறிக்கைவிட்டாலும் வேறு தரப்பினர் அந்தத் தீர்மானத்தில் சிறிலங்கா அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தத் தவறிவிட்டது என்ற விமர்சனம் இருக்கிறது.

சீனாவின் "செல்வாக்கிலிருந்து" விலகி இருக்குமாறு இலங்கை சனாதிபதி கோட்டாபய இராசபக்ச அரசாங்கத்தை நெருக்குவதே அமெரிக்காவின் உண்மையான நோக்கம் என்றும் சொல்லப்பட்டது.

சிறிலங்கா அரசைப் பொறுத்தளவில் தீர்மானம் பற்றி கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகிறது. குறித்த தீர்மானம் சட்ட விரோதமான தீர்மானம் என்றும் அது சிறிலங்கா அரசைக் கட்டுப்படுத்தாது எனக் கூறப்படுகிறது.

ஐநாமஉ பேரவையின் தீர்மானம் உறுப்பு நாடுகளைக் கட்டுப்படுத்தாது **(non-binding)** என்பது உண்மையே. ஆனால் அந்தத் தீர்மானம் ஐநாமஉ பேரவையின் ஆணையாளரைக் கட்டுப்படுத்தும். அந்தத் தீர்மானத்தில் சொல்லப்பட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடு அவருக்கு உண்டு. இன்னும் விளக்கமாக சொல்ல வேண்டும் என்றால் தீர்மானம் 46-1 யை நடைமுறைப்படுத்தும் ஆணை அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் கடப்பாடு சிறிலங்கா அரசிடம் கொடுக்கப்பட்டிருந்தது.

2012 ஆம் ஆண்டு தொடக்கம் சிறிலங்கா தொடர்பான தீர்மானங்களை அமெரிக்க நாடே அதன் நட்பு நாடுகளின் ஆதரவோடு ஐநாமஉ பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்றி வந்தது.

ஆனால் கடந்த யூன் 19, 2018 அன்று அப்போது ஆட்சியில் இருந்த சனாதிபதி ட்ரம்ப் ஐநாமஉ பேரவை இஸ்ரேல் நாட்டுக்கு எதிராகச் செயல்படுகிறது எனக் குற்றம்சாட்டி அதில் இருந்து வெளியேறுவதாக அறிவித்தார்.

ஐநாமஉ பேரவையில் அமெரிக்காவின் நலன்களை ஐக்கிய இராச்சியம் கவனிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. தமிழ்மக்களைப் பொறுத்தளவில் அமெரிக்காவின் வெளியேற்றம் ஒரு பின்னடைவாகப் பார்க்கப்பட்டது. நல்ல காலமாக கடந்த சனவரி 20, 2021 இல் அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் இடம்பெற்றது. சனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்டு வென்ற ஜோ பைடென் சனாதிபதியாக பதவி ஏற்றுக் கொண்டார். அமெரிக்கா மீண்டும் ஐநாமஉ பேரவையில் சேரும் என சனாதிபதி பைடென் அறிவித்தார். அதனைத் தொடர்ந்து அமெரிக்கா மீண்டும் ஐநாமஉ பேரவையில் ஒரு பார்வையாளராக இருந்து வருகிறது. ஐநாமஉ பேரவைக்கு தேர்தல் நடக்கும் போது அமெரிக்கா போட்டியிட்டு மீண்டும் ஒரு உறுப்பு நாடாக வரக் கூடும்.

பொதுவாக அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் இடம்பெறும் போது வெளியுறவுக் கொள்கை பேரளவு மாறுவதில்லை. ஆனால் இம்முறை புதிதாக சனாதிபதியாக ஜோ பைடென் முன்னைய ஆட்சியில் கடைப்பிடிக்கப்பட்ட வெளியுறவுக் கொள்கையின் போக்கை மாற்றியுள்ளார்.

பொதுவாகவே குடியரசுக் கட்சியை விட சனநாயகக் கட்சி மனித உரிமைகள், பருவ மாற்றம், சிறுபான்மை மக்களின் சுதந்திரம் பற்றி அதிக அக்கறை காட்டுகிறது. இதன் பயனாக அமெரிக்கா மீண்டும் ஐநாமஉ பேரவையில் சேருவதற்கு முடிவு எடுத்துள்ளது. இது தமிழ்மக்களைப் பொறுத்தளவில் நல்ல சகுனமாகும்.

முன்னரைவிட மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு சனாதிபதி பைடென் தீர்மானித்துள்ளார். அதற்கேற்ப மனித உரிமைக்குக் குரல் கொடுக்கக் கூடியவர்களை முக்கிய பதவிகளில் அமர்த்தியுள்ளார்.

இதில் அந்தோனி பிலிங்கன் **(Antony Blinken)** ஒருவர். அவர்தான் இன்றைய அரசின் செயலாளர் **(Secretary of State)** ஆவர். அதாவது அவர்தான் அமெரிக்காவின் வெளியுறவு அமைச்சர். அமெரிக்காவில் யாரும் அமைச்சர் என்று அழைக்கப்படுவதில்லை. செயலாளர் என்றே அழைக்கப்படுகிறார்.

வெளியுறவுச் செயலாளர் அந்தோனி பிலிங்கன் கடந்த பெப்ரவரி 24, 2021 அன்று சிறிலங்காவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட இருந்த தீர்மானத்துக்கு ஆதரவு திரட்டுமுகமாக ஐநாமஉ பேரவையில் உரையாற்றினார். அவரது உரை ஈழப் போர் 4 இல் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சிறிலங்கா பொறுப்புக் கூற வேண்டும்.

சிரியா, தெற்கு சூடான் மற்றும் வட கொரியாவில் மனித உரிமை மீறல்கள், இலங்கையில் கடந்த கால அட்டூழியங்களுக்குப் பொறுப்புக்கூறல் இல்லாமை மற்றும் இன்றைய நிலை குறித்து மேலும் விசாரணை தேவை, உலகெங்கிலும் உள்ள கவலைகளை எதிர்கொள்ளும் தீர்மானங்களை ஆதரிக்குமாறு இந்தப் பேரவையை ஊக்குவிக்கிறோம் எனப் பேசியிருந்தார்.

அதே நேரம் அமெரிக்காவின் மக்கள் அவை உறுப்பினர்கள் வெளியுறவுச் செயலாளருக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதியிருந்தார்கள். அதில்,

"இலங்கையுடனான இராசதந்திர ஈடுபாட்டில் மனித உரிமைகள் மற்றும் சனநாயகத்தை மையப்படுத்தவும் இலங்கைக்கான சர்வதேச பொறுப்புக்கூறல் செயல்முறையை மேம்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் அமெரிக்கா மேற்கொள்ள வேண்டும்.

"இராசபக்ச அரசாங்கம் கடந்த ஆண்டு, போர்க்குற்றங்களில் சம்பந்தப்பட்ட நபர்களை அரசாங்கத்தின் உயர் பதவிகளில் அமர்த்தியுள்ளது முக்கிய சனநாயக சீர்திருத்தங்களை மாற்றியமைத்தது மற்றும் சனாதிபதி பதவிக்குரிய அதிகாரத்தை பலப்படுத்தியது போர்க் குற்றங்களைச் செய்தவர்களை விசாரித்து வழக்குத் தொடர எடுத்த முயற்சிகள் தடைபட்டது மனித உரிமைகளை கண்காணித்தல் மற்றும் துன்புறுத்துவதில் ஈடுபட்டுள்ளது. இலங்கையில் மனித உரிமைகள் "மோசமடைந்து வருவது" குறித்து மனித உரிமைகள் பேரவை "தீவிர அக்கறையை" வெளிப்படுத்தியது.

"ஐநாமஉ பேரவை நிறைவேற்றிய தீர்மானம் கடந்த கால மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களுக்கு பொறுப்புக் கூறலில் இருந்து இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது."

ஐநாமஉ பேரவையில் இலங்கையின் தீர்மானம் குறித்த சிறப்பு அறிக்கையில் மக்களவை வெளியுறவுக் குழுவின் தலைவர் கிரெக் மீக்ஸ் **(Greg Meeks)** கூறுகையில், "ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிக்கும் அமெரிக்கா அமைதியான மற்றும் வளமான இலங்கை இந்தோ - பசிபிக் பகுதியில் அமெரிக்காவிற்கு ஒரு முக்கிய பங்காளியாக இருக்க முடியும்.

இந்தத் தீர்மானம் மனித உரிமைச் சட்டத்தின் கடுமையான மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து உடனடி, முழுமையான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணையின் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது. மேலும் ஒரு அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் செயல்பாட்டில் ஈடுபடுவதற்கான தனது உறுதிப்பாட்டை எண்பிக்க இலங்கை அரசாங்கத்தை நான் வற்புறுத்துகிறேன்" எனக் கூறினார்.

அமெரிக்க அரசியல் தலைவர்களின் நிலைப்பாடு தமிழர் தரப்புக்கு நம்பிக்கை தருவதாக உள்ளது. அமெரிக்காதான் இன்றைய ஒரே உலக வல்லரவு. அந்த வல்லரசின் ஆதரவு தமிழர் பக்கம் இருப்பதை ஒரு நல்ல சகுனமாகவே நாம் பார்க்க வேண்டும். சிலர் பூகோள அரசியலில் அமெரிக்கா - சீனா இரண்டுக்கும் இடையில் நடக்கும் போட்டியில் இலங்கை அரசாங்கம் சீனா பக்கம் சாய்ந்துவிடாமல் இருக்க தமிழர் சிக்கலைக் கையில் எடுத்துள்ளது, அதில் சுயநலம் இருக்கிறது என்கிறார்கள். அதில் உண்மையிருக்கலாம். ஆனால் அமெரிக்காவின் சுயநலத்தில் தமிழர்க்கு நன்மை இருக்குமானால் அதனை நாம் வரவேற்க வேண்டும். அதுதான் சாணக்கியம்.

தானத்துக்குக் கொடுத்த மாட்டின் பல்லைப் பிடுங்கிப் பார்க்கக் கூடாது என்பார்கள். ஒரு குளத்தில் உள்ள மீன்கள் உயிர் வாழ அந்தக் குளத்தின் பாசியை உண்கின்றன. அதே நேரம் குளம் தூய்மையாகிறது. அதாவது சுயநலத்தில் பொதுநலம் இருக்குமேயானால் அதனை நாம் வரவேற்க வேண்டும்.

மனித உரிமைகள் மற்றும் போர்க்குற்றங்களைக் கையாள்வதற்கு பைடென் நிருவாகம் முக்கிய அதிகார பீடங்களில் பல அதிகாரிகளை நியமித்துள்ளது. இலங்கையின் வெளியுறவு அமைச்சகம் சனாதிபதி பைடெனின் இராசதந்திர மூலோபாயங்களை அறிந்து வைத்திருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு இந்திய-அமெரிக்கரான (செல்வி) சுமோனா குகா **(Ms. Sumona Guha)** வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்புச் சபையில் தெற்காசியாவின் மூத்த இயக்குநராக அமர்த்தப்பட்டுள்ளார். அவர் பைடென் வெள்ளை மாளிகை குழுவுடனும் பைடெனின் உள்நாட்டுக் கொள்கை இயக்குனர் கலாநிதி சூசன் ரைசுடெனும் நெருக்கமாக பணியாற்றுவார்.

மற்றொரு இந்திய-அமெரிக்க (செல்வி) மாலா அதிகார் **(Ms Mala Adigar)** இப்போது பைடென் வெள்ளை மாளிகையில் கொள்கை இயக்குநராக உள்ளார். ஒபாமாவின் கீழ் அவர் தேசிய பாதுகாப்பு சபையில் மனித உரிமைகள் இயக்குநராகப் பணியாற்றினார்.

இந்திய-அமெரிக்கரான (செல்வி) சாந்தி கலாதில் **(Ms Shanthi Kalathil)** இப்போது வெள்ளை மாளிகையில் மனித உரிமைகள் மற்றும் சனநாயகத்திற்கான ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மற்றொரு இந்திய - அமெரிக்கரான உஸ்ரா சீயாவை **(Uzra Zeya)** வெளியுறவுத்துறையில் சனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான துணைச் செயலாளராக பைடென் நியமித்துள்ளார்.

மேலும் மற்றொரு இந்திய-அமெரிக்கரான உஸ்ரா சீயாவை **(Uzra Zeya)** வெளியுறவுத்துறையில் சனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான துணைச் செயலாளராக நியமிகப்பட்டுள்ளார்.

வெளியுறவுக் கொள்கை மற்றும் பாதுகாப்பு விடயங்களை வகுக்கும் அமைப்பான தேசிய பாதுகாப்பு சபையில் 'தெற்காசிய விவகாரங்களை' கையாள சனாதிபதி பைடென் ஏற்கனவே ஒரு முக்கிய நியமனத்தைச் செய்துள்ளார். அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையில் மனித உரிமைகளைக் கையாள்வதற்கான மற்றொரு நியமனம், மனித உரிமைகள் மற்றும் போர்க்குற்றங்கள் பணியகம் செயல்படும் மனித உரிமைகள், போர்க் குற்றங்கள் மற்றும் வெளிநாட்டு நாடுகளில் சட்டத்தின் ஆட்சிக்கு தீவிர முக்கியத்துவம் அளிக்கிறது.

இலங்கையின் ஈழப் போரின்போது தமிழ்ப் புலம்பெயர் பிரதிநிதிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திய சனாதிபதி ஒபாமாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த கலாநிதி சூசன் ரைஸ் **(Dr. Susan Rice)** உள்நாட்டு விவகாரங்களுக்கான சனாதிபதி ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். இது வெள்ளை மாளிகையின் உள்நாட்டு நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப வெளிநாட்டு விவகாரங்களில் இரகசியமாக செயல்படும் ஒரு நிலைப்பாடாகும்.

மேலவை வெளியுறவுக் குழுவின் மிகவும் செல்வாக்குமிக்க தலைவரான றொபேட் மெனண்டெசும் **(Robert Menendez)** இலங்கைக்கு எதிரான மனப் போக்குடையவர்.

கடந்த ஆண்டு எம்சிசி **(Millennium Challenge Corporation (MCC)** மற்றும் இலங்கை தொடர்பான மேலவை விசாரணையில் இலங்கை ஒரு போர்க்குற்றவாளியைத் சனாதிபதியாகத் தேர்ந்தெடுத்ததாக **(elected a war criminal)** றொபேட் மெனண்டெஸ் அறிவித்தார். ஆக அமெரிக்க காங்கிரஸ் முதல் வெள்ளை மாளிகை வரை இலங்கை ஒரு பகைக் குழுவை எதிர்கொள்கிறது எனலாம்.

இலங்கை வெளிநாட்டு இராஜதந்திரத்தை மூலோபாயப்படுத்த குறிப்பிடத்தக்க முயற்சிகளை எடுக்காத ஒரு நேரத்தில் இலங்கை பிரச்சினைகள் காங்கிரஸ் வெளியுறவுக் குழுவில் தீவிரமாக நுழைந்துள்ளன என்பதை இந்த விவாதங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

இப்போது தெற்காசிய நாட்டின் சூழ்நிலையை வெளியுறவுத்துறை கவனத்தில் கொண்டு சிறிலங்கா சனாதிபதி பைடென் நிருவாகத்தின் நிகழ்ச்சி நிரலில் உள்ளது என்பது தமிழர் தரப்புக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறது.
அமெரிக்க காங்கிரஸ் முதல் வெள்ளை மாளிகை வரை இலங்கை ஒரு வெளிப் பகையை எதிர் கொள்கிறது!



# ஆயர் ராயப்பு ஜோசப்பிற்கு மெய்யான அஞ்சலி

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

**2013**ஆம் ஆண்டு தமிழ் சிவில் சமூக அமையம் தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளை கட்சிகளுக்கிடையே ஒரு சந்திப்பை மன்னாரில் ஒழுங்குபடுத்தியது. அப்பொழுது மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக இருந்த அமரர் ராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் சிவில் சமூக அமையத்தின் அழைப்பாளராக இருந்தார். அவருடைய தலைமையில் நடந்த கூட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர்களும் சிவில் சமூகத்தில் பிரதிநிதிகளும் ஆர்வமுடையவர்கள் பங்குபற்றினார்கள். இக்கூட்டத்தில்தான் ஒரு தமிழ் தேசியப் பேரவையை உருவாக்குவது என்று முடிவெடுக்கப்பட்டது. அதற்காக ஒரு ஏற்பாட்டுக்குழு உருவாக்கப்பட்டது. அதில் கூட்டமைப்பின் சார்பாக சுமந்திரனும் மக்கள் முன்னணியின் சார்பாக கஜேந்திரகுமாரும் சிவில் சமூகத்தின் சார்பாக சட்டவாளர் புவி தரனும் குருபரனும் அடங்கிய ஒரு குழு உருவாக்கப்பட்டது. ஆனால் அந்தக் குழு தொடர்ந்தும் செய்யப்படவில்லை. தமிழ் தேசிய பேரவை உருவாக்கப்படவில்லை.

அப்படி ஒரு தமிழ் தேசிய பேரவை உருவாக்க வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? ஏனெனில் 2009ஆம் ஆண்டுக்குப்பின் கூட்டமைப்பு செல்லும் வழி பிழையானது என்ற காரணத்தால் எனைய கட்சிகளும் சிவில் சமூக பிரதிநிதிகளோடும் இணைத்து ஒரு மக்கள் அமைப்பை உருவாக்குவதன் மூலம் கூட்டமைப்பை மாறாத கொள்கைகளுக்கும் இலக்குகளும் பொறுப்புக்கூற வைப்பதே தமிழ் மக்கள் பேரவை என்ற ஒரு கனவின் நோக்கமாகும்.

இந்த கனவுக்குள் கூட்டமைப்பைத் திருத்தலாம்கூட்டமைப்பை அரவணைத்து மாற்றலாம் என்ற ஒரு நப்பாசை உண்டு என்பதை இக்கட்டுரை ஏற்றுக்கொள்கிறது. கூட்டமைப்பின் வர்க்க குணமது ; அதை மாற்ற முடியாது; அதனிடம் புரட்சிகரமான மாற்றங்கள் எதனையும் எதிர்பார்க்க முடியாது; அந்த கட்சிக்கு பதிலாக ஒரு புதிய கட்சியை அல்லது அமைப்பை உருவாக்குவதே புரட்சிகரமான மாற்று தெளிவாக இருக்கும் என்ற விவாதத்தை இக்கட்டுரை நிராகரிக்கவில்லை. ஆனால் அப்பொழுது மக்கள் ஆணையைப் பெற்ற ஏகப் பிரதிநிதியாக கூட்டமைப்பே காட்சியளித்தது. எனவே மக்கள் ஆணையை மீறி ஒரு புதிய கட்டமைப்பை உருவாக்க தேவையான வாழ்க்கை ஒழுக்கமோ அல்லது அரசியல் ஒழுக்கமோ அப்பொழுது சிவில் சமூக பிரதிநிதிகளிடம் இருக்கவில்லை என்ற இயலாமையையும் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

ஆனால் கூட்டமைப்பு அதன் ஏக பிரதிநிதித்துவம் காரணமாகவே அந்த கனவோடு சேர்ந்து உழைக்க மறுத்தது. கடந்த ஆண்டு நடந்த பொதுத் தேர்தல் வரையிலும் அக்கட்சி ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படத் தயாராக இருக்கவில்லை. கடந்த பொதுத்தேர்தலில் ஏற்பட்ட தோல்விகளின் விளைவாகத்தான் அது ஏதோ ஒரு இணக்கத்துக்கு வருவது போல ஒரு தோற்றத்தைக் காட்டியது. எனவே கூட்டமைப்பு தமிழ்மக்களின் ஏக பிரதிநிதியாக தோற்றம் காட்டிய ஒரு காலகட்டத்தில் அக்கட்சியை மாறா இலட்சியத்துக்கும் அரசியல் இலக்குகளுக்கும் பொறுப்புக்கூற வைக்கும் உள்நோக்கத்தோடு திட்டமிடப்பட்டதே தமிழ்தேசிய பேரவை ஆகும். ஆனால் அந்தக் கனவு இன்றுவரையிலும் நிறைவேறவே இல்லை.

அதன்பின் 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது. ஆனால் அது தமிழ் தேசிய பேரவை அல்ல. தமிழ் மக்கள் பேரவையில் கூட்டமைப்பு இணையவில்லை. எனினும் அதன் பங்காளிக் கட்சிகள் சில இணைந்திருந்தன. கூட்டமைப்பின் பிரதான கட்சி ஆகிய தமிழரசுக் கட்சி அந்த தமிழ் மக்கள் பேரவைக்குள் சேரவில்லை. தமிழ் மக்கள் பேரவையின் தொடக்கமும் ஏறக்குறைய கூட்டமைப்புக்கு எதிரானதுதான். ஏனெனில் கூட்டமைப்பில் அதிருப்தியடைந்த விக்னேஸ்வரனே பேரவையின் மையமாக இருந்தார். அதாவது 2013ஆம் ஆண்டு சிந்திக்கப் பட்டதைப் போன்று ஒரு தமிழ்த் தேசிய பேரவையை உருவாக்க முடியவில்லை. அதற்கு கூட்டமைப்பு குறிப்பாக தமிழரசுக் கட்சி ஒத்துழைக்கவில்லை. அதனால் கூட்டமைப்பில் அதிருப்தி கொண்ட விக்னேஸ்வரனை மையமாகக்கொண்டு ஒரு தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது பேரவையில் அங்கம் வகித்த இரண்டு கட்சிகளையும் ஒருங்கிணைக்க பேரவையால் முடியவில்லை. தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் ஈபிஆர்எல்எப்பும் ஒன்றுக்கொன்று முரண் நிலைக்கு போயின. தமிழ் தேசிய மக்கள் முன்னணி விக்னேஸ்வரனுக்கு எதிராக திரும்பியது. அதன் தர்க்கபூர்வ விளைவாக பேரவைக்கும் எதிராகத் திரும்பியது. அதோடு உள்ளூராட்சி சபை தேர்தலில் அக்கட்சி பேரவை என்ற பெயரை தனது அணிக்கு பயன்படுத்தியது. எனினும் அதற்குப் பின்னரான தேர்தல்களில் அந்த பெயரை அக்கட்சி பயன்படுத்தவில்லை.

அதற்கும் சில ஆண்டுகளுக்குப்பின் அதாவது கடந்த ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பின் பிரமுகர்கள் சிலர் தோல்வியடைந்தனர். இவ்வாறு தோல்வியடைந்த மாவை சேனாதிராஜா கட்சிக்குள்ளேயே தனது தலைமைத்துவத்தை காப்பாற்றுவதற்காக தமிழ்த்தேசிய பேரவை என்ற பெயரில் ஓர் அமைப்பை உருவாக்க போவதாகவும் அதில் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் மக்களுக்கு ஆதரவான அரசியல் மற்றும் சட்ட செயற்பாட்டாளர்களையும் இணைக்கப் போவதாக ஒரு தகவலை தனது நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருந்தார். எனினும் அது மாவை கண்ட ஒரு கனவாகவே முடிந்தது.

இவ்வாறாக தமிழ்ப் பேரவை அல்லது தமிழ் மக்கள் பேரவை அல்லது தமிழ்த் தேசிய பேரவை போன்ற வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படும் ஏதோ ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற கனவு தமிழ் தேசிய அரசியலில் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக நிலவிவருகிறது. ஆனால் அது தொடர்ந்தும் ஒரு நிறைவேறாத கனவாகவே காணப்படுகிறது. அந்தக் கனவை கருக்கொண்ட தமிழ் சிவில்சமூக அமையத்தின் அழைப்பாளராக இறக்கும் வரையிலும் பொறுப்பை வகித்த ஆயர் ராயப்பு ஜோசப் இப்பொழுது இல்லை. கனவு மட்டும் தொடர்ந்தும் நிறைவேறாமலே தொங்கிக் கொண்டிருக்கிறது.

தமிழ் சிவில்சமூக அமையம்தான் அந்தக் கனவை கருக்கொண்டது. அதேசமயம் பலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் பயிற்சி பெற்ற ஈபிஆர்எல்எ..ப் உள்ளிட்ட இயக்கங்களிடம் அதுபோன்ற ஒரு கட்டமைப்பை குறித்த சிந்தனை ஏற்கனவே இருந்துள்ளது. பாலஸ்தீனனத்தில் பல்வேறு அமைப்புக்களையும் ஒன்றிணைத்து ஒரு தேசிய பேரவை உருவாக்கப்பட்டதை போன்று தமிழ் அரசியலிலும் அப்படி ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று கனவு காணப்பட்டது. அப்படி ஓர் ஐக்கியத்தை முதலில் ஏற்படுத்தியது இந்தியாதான் என்பது இங்குள்ள முரண்நகை ஆகும். திம்பு பேச்சுவார்த்தையின் போது தமிழ் தரப்பை ஓரணியாக திரட்டுவதற்கு இந்தியாவும் பின்புலமாக நின்றது ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் முதலில் தோன்றிய குறிப்பிட்டுச் செல்லக்கூடிய ஓர் ஐக்கியம் அதுவெல்லாம். எனினும் அதில் இணைந்த இயக்கங்களுக்குள் புளட் இருக்கவில்லை. ஆனால் 2015 இல் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவைக்குள் புளட் இருந்தது. பின்னாளில் அது விலகிச் சென்றது.

தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கம் என்பது ஒருவிதத்தில் விக்னேஸ்வரனின் எழுச்சியின் விளைவுதான். இன்னொரு விதமாகச் சொன்னால் கூட்டமைப்பின் பலம் உடையும்போது இப்படிப்பட்ட அமைப்புகள் தோன்றுகின்றன. அல்லது இப்படிப்பட்ட அமைப்புகளைப் பற்றி சிந்திக்கப்படுகிறது. மாவை சேனாதிராஜாவின் பேரவையும் அப்படிப்பட்டதுதான். அதாவது தொகுத்துப் பார்த்தால் கூட்டமைப்பு பலவீனம் அடையும் பொழுது இப்படிப்பட்ட அமைப்புகளுக்கான தேவை அல்லது ஏதோ ஒரு ஐக்கியம் உருவாக வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இது தான் கடந்த ஜனவரி மாதம் நடந்தது. ஜெனிவாவை நோக்கி மூன்று கட்சிகள் அனுப்பிய கூட்டு ஆவணமும் அப்படிப்பட்டதுதான். கடந்த பொதுத் தேர்தலில் பெற்ற தோல்விகள் கூட்டமைப்பின் ஏகபோகத்தை கேள்விக்குள்ளாக்கின. எனவே மாற்று அணியை சேர்ந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து ஐநாவுக்கு ஒரு பொதுஆவணத்தை அனுப்ப கூட்டமைப்பு ஒப்புக்கொண்டது.

தமிழ்தேசிய பரப்பில் உள்ள எல்லாத் தரப்புக்களையும் ஒன்றிணைக்கும் முயற்சிகள் என்று பார்த்தால் கடந்த 12 ஆண்டுகளில் அதை ஒரு முக்கியமான அடைவு எனலாம். ஆனால் அது 2013ல் கனவு காணப்பட்ட தமிழ் தேசிய பேரவை அல்ல. அதுமட்டுமல்ல அந்த அடைவு தற்காலிகமானதே என்பதனை அடுத்த மாதம் வெளிவந்த பூச்சிய வரைபுக்கு எதிர்வினையாற்றும் விடயத்தில் கூட்டமைப்பு நிரூபித்தது. அதோடு அப்பொழுது ஆவணத்தை தயாரிக்கும் சந்திப்புகளின் போது இனப்படுகொலை என்ற வாசகத்தை இணைக்க ஒப்புக்கொண்ட சுமந்திரன் இப்போது பழைய பல்லவியை பாடத் தொடங்கிவிட்டார்.

எனவே கடந்த பத்தாண்டுகளில் தமிழ்தேசிய அரசியலை ஒரு பொது அடித்தளத்தின் மீது கூட்டிக்கட்டும் முயற்சிகளை தொகுத்துப் பார்த்தால் மிகத் தெளிவாக சில விடயங்கள் தெரியவரும்.

முதலாவது கூட்டமைப்பு பலவீனமடையும் பொழுது அல்லது அதில் உடைவு ஏற்படும் பொழுது இது போன்ற முயற்சிகளுக்கு அவர்கள் ஒத்துக் கொள்வார்கள். இரண்டாவது அவ்வாறு ஏதோ ஓர் உடன்பாட்டுக்கு வந்த பின்னரும் அந்த ஐக்கியத்தை கூட்டமைப்பே பெரும்பாலும் உடைக்கிறது. கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட பதின்மூன்று அம்ச ஆவணத்திற்கு அதுதான் நடந்தது. கடந்த ஜனவரி 15ஆம் திகதி அனுப்பப்பட்ட ஜெனீவாவுக்கான பொது ஆவணத்துக்கும் அதுவே நடந்தது. அதாவது எந்த ஒரு பொது ஏற்பாட்டுக்கும் கூட்டமைப்பை பொறுப்புக்கூற வைப்பதில் அடிப்படையான சவால்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

இந்தச் சவால்களை கடந்து மேற்படி கட்சிகளை ஒரு பொது மேசைக்கு அழைத்துக் கொண்டுவரத்தக்க சிவில் ஆளுமைகள் தற்பொழுது பலமாக இல்லை என்பதே தமிழ் அரசியலில் உள்ள மிகப் பாரதூரமான ஒரு வெற்றிடம் ஆகும். தமிழ் மக்கள் பிரதிநிதிகளையும் சிவில் சமூகங்களையும் சந்திக்கும் பெரும்பாலான வெளிநாட்டு தூதுவர்கள் ஒரு குரலில் பேசுங்கள் ஓரணியாக வாருங்கள் என்று கேட்கிறார்கள். ஆனால் அவ்வாறு தமிழ்த் தரப்பை ஒரு பெரும் திரளாகக் கூட்டிக் கட்டவல்ல சிவில் கட்டமைப்புக்கள் எவையும் கிடையாது. சிவில் தலைவர்களும் கிடையாது. மறைந்த ஆயர் அப்படியொரு ஆளுமையாக காணப்பட்டார். கட்சிகளை அழைத்து கூட்டம் கூட்டி தன் கருத்தை வலிமையாக முன்வைக்கத்தக்க பலம் அவருக்கு இருந்தது. அது அவருக்கு பதவி வழியாகக் கிடைத்தது. அதே சமயம் தனது அரசியல் நிலைப்பாட்டின் காரணமாகவும் செயல்பாட்டின் காரணமாகவும் அவரும் தனது பலத்தை அதிகப்படுத்திக் கொண்டார்.

ஆனால் தற்பொழுது அவ்வாறான ஆளுமைகள் இல்லை.அது மட்டுமல்ல தமிழ் சிவில் சமூகங்களில் பெரும்பாலானவை அறிக்கை விடும் அமைப்புக்களாகவும் செயற்பாட்டு ஒழுக்கம் பெருமளவுக்கு இல்லாதவைகளாகவும் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக கடந்த 12 ஆண்டுகளில் பல்வேறு பெயர்களில் பல்வேறு சிவில் சமூகங்கள் தோன்றி மறைந்துவிட்டன. பல்வேறு தரப்புகளின் நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுப்பதற்காக இவ்வாறு சிவில் சமூகங்கள் அவ்வப்போது உருவாக்கப்படுகின்றன. பின்னர் காணாமல் போய்விடுகின்றன. சில அமைப்புகள் தொடர்ந்தும் கடிதத் தலைப்பு அமைப்புகளாக காணப்படுகின்றன. இதில் ஆகப் பிந்திய ஓர் அமைப்பே அண்மையில் ஜெனிவா கூட்டத் தொடரையொட்டி நல்லூரில் மேடை அமைத்த ஓரமைப்பும் ஆகும். பலாமான சிவில் சமூகங்களற்ற ஒரு வெற்றிடத்தில் அதுபோன்ற அரசின் முகவரமைப்புக்கள் உருவாகின்றன.

இதுவிடயத்தில் தமது செயட்பாட்டு ஒழுக்கம் காரணமாக ஒரு சக்தி மூலமாக மேலெழுந்து அதன் காரணமாகவே அரசியல்வாதிகளையும் செயற்பாட்டாளர்களையும் தன்னை நோக்கி ஈர்க்கவல்ல ஆளுமைகள் அல்லது அமைப்புக்கள் தமிழ் அரசியல் பரப்பில் மிகக் குறைவு.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின்போது இலங்கையில் சிவில் சமூகங்களின் பங்களிப்பை குறித்து பேசும்போது கலாநிதி உயாங்கொட அதை அரசியலின் மீது சிவில் சமூகங்களின் தார்மீக தலையீடு என்று வர்ணித்தார். அப்படி ஒரு தலையிட்டு செய்யக்கூடிய பலம் மறைந்த ஆயர் ராயப்பு ஜோசப்பிடம் இருந்த காரணத்தால்தான் அவரால் கட்சிகளை மன்னாருக்கு அழைக்க முடிந்தது. ஆனால் 2013ஆம் ஆண்டு நடந்த அச்சந்திப்பின் முடிவில் உரை நிகழ்த்திய சம்பந்தர் மறைந்த ஆயரை பார்த்து பின்வரும் தொனிப்பட சொன்னார் “பிஷப் நீங்கள் சொல்லுங்கோ ஆனால் இறுதிமுடிவை நான்தான் எடுப்பேன்” என்று. ஆனால் கடந்த ஜனவரி மாதம் மூன்று கட்சிகளையும் பொது மேசைக்கு கொண்டு வந்தபொழுது அச்சந்திப்பில் பிரசன்னமாகியிருந்த திருமலை ஆயர் நோயல் இமானுவல் அவர்கள் கட்சிப் பிரதிநிதிகளை நோக்கி கண்டிப்பான குரலில் உரை நிகழ்த்திய பொழுது யாரும் அவரை எதிர்த்து கதைக்கவில்லை. அதன் அர்த்தம் சிவில் சமூகங்களின் தார்மீக தலையீட்டுக்கு கட்சிகள் அடங்கிப்போயின என்பதல்ல. ஏனெனில் அந்த ஆவணத்தை ஒன்றாக அனுப்பிய கட்சிகள் பின்னர் எவ்வாறு நடந்துகொண்டன?

எனவே தமிழ் அரசியலின் மீது தார்மீகத் தலையீட்டைச் செய்யவல்ல சிவில்சமூகங்களை கட்டியெழுப்ப வேண்டும். அவ்வாறு கட்டியெழுப்புவதுதான் மறைந்த ஆயிருக்கு சிவில் சமூகங்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் செய்யக்கூடிய மெய்யான அஞ்சலியாக இருக்கும்.

## தமிழகத்தில் விறுவிறுப்பான தேர்தல்:

# 4.50 கோடி பேர் வாக்களித்தனர்

தமிழகம், புதுச்சேரி, கேரளம் ஆகிய மாநில சட்டமன்றத் தேர்தல்கள் ஏப்ரல் 6-ந் தேதியான இன்று ஒரே கட்டமாக நடந்தன. மேற்குவங்காளத்தில் 3-வது கட்ட தேர்தலும், அசாமில் இறுதிக்கட்ட தேர்தலும் நடைபெற்றன. தமிழ்நாட்டில் 234 தொகுதிகள் உள்ளன. மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 6 கோடியே 28 லட்சம். இதில் ஆண்கள் 3 கோடியே 9 லட்சம் பேர். பெண்கள் 3 கோடியே 19 லட்சம் பேர். இதுதவிர 3-ம் பாலினத்தவர் 7192 பேர் உள்ளனர்.

காலை 5 மணிக்கெல்லாம் வாக்குச்சாவடி அதிகாரிகள், ஊழியர்கள் வாக்கு மையத்துக்கு வந்து விட்டனர். 6 மணிக்கு மாதிரி ஓட்டுப்பதிவு நடத்தி பார்க்கப்பட்டது. சரியாக காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. வாக்குச்சாவடிகளில் காலை 7 மணிக்கெல்லாம் வாக்களிக்கும் ஆர்வத்தில் வாக்காளர்கள் குவியத்தொடங்கினர்.

கொரோனா பாதுகாப்பு

கொரோனா பிரச்சினை காரணமாக பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. அனைத்து வாக்காளர்களும் கண்டிப்பாக முகக்கவசம் அணிந்து வர வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு இருந்தது. அதன்படி முகக்கவசம் அணிந்து இருந்தவர்களை மட்டுமே அனுமதித்தனர். முககவசம் அணியாமல் வந்தவர்களுக்கு வாக்குப்பதிவு மையத்திலேயே முகக்கவசம் வழங்கப்பட்டது.

கியூவில் நிற்கும் வாக்காளர்கள் தனிநபர் இடைவெளி விட்டு நிற்பதற்காக வட்ட வடிவில் அடையாளக்குறிகள் போடப்பட்டு இருந்தன. வாக்குச்சாவடியின் முன்பகுதியில் 2 பிரிவாக ஊழியர்கள் அமர்ந்து இருந்தனர். ஒரு பிரிவினர் ஓட்டு போட வந்த நபர் முகக்கவசம் அணிந்திருப்பதை உறுதி செய்து அவரது கையில் சானிடைசரை தெளித்தனர்.

மற்றொரு பிரிவினர் தெர்மல் ஸ்கேனர் மூலம் உடல் வெப்ப சோதனை நடத்தி, ஒரு பாலிதின் கையுறை வழங்கினார்கள். ஓட்டு போட்டு முடிந்ததும் கையுறையை கழற்றிப் போட தனியாக பெட்டி வைக்கப்பட்டு இருந்தது. காலை முதலே ஆண்களும், பெண்களும் கூட்டம் கூட்டமாக ஆர்வமாக வந்து வாக்களித்துச்சென்றனர்.

இரவு 7 மணி வரை வாக்குப்பதிவு

இதுவரை மாலை 6 மணிக்கு வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில் இந்த முறை இரவு 7 மணி வரை வாக்களிக்கலாம் என்று கூடுதல் நேரம் வழங்கப்பட்டு இருந்தது. கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களும் கவச உடையுடன் வந்து வாக்களிக்க மாலை 5 மணிக்கு தனி நேரம் ஒதுக்கப்பட்டு இருந்தது.

அரசியல் கட்சித் தலைவர்கள், வேட்பாளர்கள், சினிமா பிரபலங்கள் என அனைவருமே காலையிலேயே வந்து வாக்களித்தனர். திமுக தலைவர் முக ஸ்டாலின் சென்னை தேனாம்பேட்டை கல்லுகீரி வாக்குச்சாவடியில் குடும்பத்துடன் வந்து வாக்களித்தார். முதல்அமைச்சர் எடப்பாடி பழனிசாமி அவரது சொந்த ஊரான சிலுவம்பாளையத்தில் வாக்களித்தார்.

வாக்குப்பதிவு நிலவரங்களை தமிழக தேர்தல் அதிகாரி சத்யபிரதாசாகு சென்னையில் இருந்தபடியே வெப் கேமரா மூலம் கண்காணித்து, 2 மணி நேரத்திற்கு ஒருமுறை வாக்குப்பதிவு சதவீதத்தை அறிவித்தார்.

பிற்பகல் மூன்று மணி நிலவரப்படி 53.35 சதவிகித வாக்குகள்



பதிவாகியிருப்பதாக சத்யபிரத சாகு தெரிவித்தார்.

எந்தச் சின்னத்தில் வாக்களித்தாலும் பாஜகவுக்கு வாக்குப்பதிவாவதாக விருதுநகர் தொகுதி உள்ளிட்ட சில பகுதிகளில் புகார் எழுந்துள்ளது குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு, தமிழகத்தில் அதுபோன்ற புகார் எங்குமே பதிவாகவில்லை என்று சத்யபிரதா சாகு பதிலளித்தார்.

குமரி மாவட்டம்

குமரி மாவட்டத்தில் 6 சட்டமன்றத் தொகுதிகளுடன் கன்னியாகுமரி நாடாளுமன்றத் தொகுதிக்கும் இடைத்தேர்தல் நடைபெற்றதால் வாக்காளர்கள் தலா இரு ஓட்டுகள் வீதம் பதிவு செய்தனர்.

பிற்பகல் 3 மணி நிலவரப்படி அம்மாவட்டத்தில் 51.16 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தன. (கன்னியாகுமரி 52.56%, நாகர்கோவில் 55.43%, குளச்சல் 48.01%, பத்மநாபபுரம் 50.91%, விளவங்கோடு 49.54%, கிள்ளியூர் 50.12%, மாவட்ட சராசரி 51.16%).

72 சதவீதம்

கடைசி ஒரு மணி நேரம் கொரோனா நோயாளிகள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். அவர்களோடு பொதுமக்களும் பாதுகாப்பு விதிகளைப்பின்பற்றி வாக்களித்தனர்.

திமுக மகளிர் அணிச்செயலாளரும், தூத்துக்குடி எம்பியுமான கனிமொழி கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் கவச உடை அணிந்து மயிலாப்பூர் வாக்குச்சாவடிக்கு வந்து வாக்களித்து விட்டு ஆம்புலன்சில் திரும்பிச்சென்றார். இரவு 7 மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடைந்தது.

இதையடுத்து, இரவு 8.20 மணிக்கு இறுதி வாக்குப்பதிவு நிலவரத்தை தேர்தல் அதிகாரி சத்யபிரதாசாகு செய்தியாளர்களிடம் அறிவித்தார். தமிழகத்தில் 71.79 சதவீத வாக்குகள் பதிவானதாகவும், இன்னும் சில புள்ளி விவரங்களை நள்ளிரவோ, காலையோ சரிபார்த்தபிறகு இந்த சதவீதம் இன்னும் சற்று அதிகரிக்கலாம் என்றும் அவர் கூறினார். இந்த சதவீத கணக்கின்படி, தமிழகத்தில் 4.50 கோடி பேர் வாக்களித்துள்ளனர். துல்லியமான எண்ணிக்கை காலையில் தெரியவரும்.

நெல்லை 65.16 சதவீதம்

மாநிலத்திலேயே அதிகபட்சமாக கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 78 சதவீதமும், அரியலூரில் 73 சதவீதமும் வாக்குகள் பதிவானதாக அவர் தெரிவித்தார். நெல்லை மாவட்டத்தில் 65.16 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. சென்னையில் வாக்குப்பதிவு சதவீதம் 59.40. தென்காசி மாவட்டம் 70.95 தூத்துக்குடி மாவட்டம் 70.

நேற்று தேர்தல் நடந்த புதுவையில் 80 சதவீதமும், கேரளாவில் 70க்கு மேற்பட்ட சதவீதமும் வாக்குப்பதிவு நடந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. தேர்தல் நடந்த அனைத்து மாநிலங்களிலும் மே 2 தேதி தான் வாக்குகள் எண்ணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

**- மணிராஜ், திருநெல்வேலி**




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
rotect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# கரோனா அச்சுறுத்தல் காலத்திலும் தேர்தலை சிறப்பாக நடத்தி முடித்தது சாதனை

## தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு பெருமிதம்

கரோனா அச்சுறுத்தல் காலத்திலும்சட்டப்பேரவைத் தேர்தலை சிறப்பாக நடத்தி முடித்திருப்பதை சாதனையாக கருதுகிறோம் என்று தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூ பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார். தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூ தலைமையில், கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் வி.ராஜாராமன், ஆனி ஜோசப், இணை தலைமைத் தேர்தல் அதிகாரிகள் டி.ஆனந்த், அஜய் யாதவ் உள்ளிட்ட அதிகாரிகள், அவர்களுக்கு கீழ் பணியாற்றும் அலுவலர்களின் அயராத உழைப்பால் சட்டப்பேரவை தேர்தல் அமைதியாக நடந்து முடிந்துள்ளது.

பெரிய அளவில் சிக்கல்கள் ஏதுமின்றி தேர்தலை நடத்தி முடித்தமகிழ்ச்சியில் இருந்த தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூவை தலைமைச் செயலகத்தில் நேற்று சந்தித்தோம். 'இந்து தமிழ் திசை' நாளிதழுக்கு அவர் அளித்த சிறப்பு பேட்டியில் கூறியதாவது:

வாக்காளர் பட்டியலில் இருந்துதங்கள் பெயர் நீக்கப்பட்டுவிட்டதாக கூறி குறிப்பிடும் படியாகயாரும் போராட்டத்தில் ஈடுபடவில்லையே, ஏன்?வாக்காளர் பட்டியலில் இருந்துபெயர் நீக்கலை கூடுதல் கவனத்துடன் செய்ய வேண்டும்என்று அறிவுறுத்தி இருந்தோம். சிறப்பு முகாம்களில் ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வு மூலம், மக்கள் அதிக அளவில் வந்து பட்டியலை சரிபார்த்ததால்,

புகார்கள் எழவில்லை.வாக்குப்பதிவின்போது, இயந்திரங்களில் பழுது ஏற்படுவதும் குறைந்துள்ளதே?2019 மக்களவைத் தேர்தலின்போது கிடைத்த படிப்பினை அடிப்படையில் சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொண்டதால் இயந்திரப் பழுது




குறைந்துவிட்டது.அமைதியான தேர்தலுக்காகஎடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து?தேர்தலில் முக்கிய அங்கத்தினரே கட்சியினரும், வேட்பாளர் களும்தான். அவர்கள் அளிக்கும்தகவல்கள் மீது சிறப்பு கவனம்செலுத்தியதால் குறிப்பிடும்படியான அசம்பாவிதங்கள் இல்லை.தேர்தல் பணிகள் அனைத்தும் அரசியல் கட்சிகள் முன்னிலையில் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்டதால், அவர்களுக்கு நம்பகத்தன்மை ஏற்பட்டதும் ஒருகாரணம்.

முதியோர், மாற்றுத் திறனாளிகளுக்கு தபால் வாக்குகள் வழங்கப்பட்டதிலும் இதுவரை ஒரு புகாரும் எழவில்லை.இந்தத் தேர்தலில் எதை சவாலாக பார்க்கிறீர்கள்?கரோனா அச்சுறுத்தல் காலத்திலும் தேர்தலை சிறப்பாக நடத்திமுடித்ததை சாதனையாக கருதுகிறோம். கரோனா காலத்தில் எல்லாநடைமுறைகளும் புதிது. மாலை 6 முதல் 7 மணி வரை மட்டுமே கரோனா நோயாளிகள் அனுமதிக்கப்படுவர். வழக்கமான நேரங்களில் அவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என விழிப்புணர்வு ஏற்படுத்தி, வாக்காளர்களை அதிக அளவில் வரவழைத்தது பெரும் சவாலாக இருந்தது. ஓட்டுக்கு பணம் கொடுப்பதை தடுப்பது வழக்கமான ஒன்றாக இருந்தாலும், இப்போது நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதாக கட்சிகள் புகார் தெரிவித்தன.

அதுபோன்ற பிரச்சினைகளை எதிர்கொள்வது பெரும் சவாலாக இருந்தது. கரோனாபரவல் காலத்தில் தேர்தலைநடத்தியதால், 30 சதவீத வாக்குச்சாவடிகள் அதிகரிக்கப்பட்டன. அதற்கேற்ப கூடுதல் பணியாளர்கள், பாதுகாப்பு வீரர்களை பணியில் ஈடுபடுத்தியதும் ஒரு சவால்தான்.தேர்தலை சிறப்பாக நடத்திமுடித்ததில் தேர்தல் அலுவலர்களின் பங்களிப்பு எப்படி இருந்தது?தேர்தல் என்பது ஒரு கூட்டுப் பணி. இதில் தலைமை இடத்து அதிகாரிகள் முதல், கடைநிலை ஊழியர்கள் வரை சிறப்பாக பணியாற்றியதால்தான் தேர்தலை சிக்கல் இன்றி முடிக்க முடிந்தது. இந்த தேர்தலை நீதிமன்றமும் கண்காணித்து வந்தது. குறிப்பாக தலைமையிடத்தில் உள்ள கூடுதல்மற்றும் இணை தலைமை தேர்தல் அதிகாரிகள் அனைவரும் இரவு, பகல் பாராது உழைத்தனர்.

நீதிமன்றங்கள் கேட்கும்கேள்விகள், தேர்தல் ஆணையம் கேட்கும் கேள்விகள் உள்ளிட்டவற்றுக்கு காலத்தோடு பதில்அளிப்பது, அனைத்து மாவட்டஆட்சியர்களையும் ஒருங்கிணைப்பது போன்ற பணிகளை சிறப்பாக செய்ததால், தேர்தலை நல்ல முறையில் நடத்தி முடிக்க முடிந்தது. இதற்கு காவல்துறையின் பங்கும் மிக முக்கியம். தேர்தல்பணியில் ஈடுபட்ட அனைத்து துறை, அனைத்து நிலை பணியாளர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.இவ்வாறு சத்யபிரத சாஹூ தெரிவித்தார்.

# மறைந்த வே.ஆனைமுத்துவின் உடல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தானம்



மறைந்த பெரியாரிய அறிஞர் வே.ஆனைமுத்துவின் உடல் போரூர் ராமச்சந்திரா மருத்துவமனைக்கு, மருத்துவ மாணவர்கள் கல்விக்காக கொடையாக வழங்கப்பட்டது. மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி நிறுவனரும் பெரியாரிய மார்க்சிய ஆய்வாளருமான வே.ஆனைமுத்து (96) செவ்வாய்க்கிழமை புதுச்சேரியில் காலமானார். அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக தாம்பரம் இரும்புலியூரில் வைக்கப்பட்டிருந்தது.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நாம் தமிழர் ஒருங்கிணைப்பாளர் சீமான், புதுச்சேரி முன்னாள் முதல்வர் நாராயணசாமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் ராமகிருஷ்ணன், ஈ.வி.கே. எஸ்.இளங்கோவன், பொன்குமார், இளங்கோவன் எம்பி, தாம்பரம் தொகுதி வேட்பாளர்கள் எஸ்.ஆர்.ராஜா (திமுக), டிகேஎம். சின்னையா (அதிமுக), கரிகாலன் (அமமுக) மற்றும் பெரியார் சிந்தனையாளர்கள், அவரது கட்சியினர், உறவினர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள், சினிமா நடிகர்கள், இயக்குநர்கள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் மாலையில் அவரது உடல் வீட்டிலிருந்து ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு மருத்துவ மாணவர்களின் கல்விக்காக போரூர்ராமச்சந்திரா மருத்துவமனைக்கு கொடையாக வழங்கப்பட்டது. இதேபோல் இவரது மனைவி சுசீலாம்மாள் 2019ம் ஆண்டு மறைந்தார். அவரின் உடலும் போரூர் ராமச்சந்திரா மருத்துவமனைக்கு கொடையாக வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அரசியல் தலைவர்கள் இரங்கல்ஆனைமுத்துவின் மறைவுக்கு தமிழக அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன் : ஐயாவே.ஆனைமுத்து மறைவு அனைவருக்கும் பேரிழப்பாகும். மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகளை ஏற்று, அவற்றை இந்தியஅரசு செயல்படுத்த வேண்டும் என்பதற்காக இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பிற்பட்ட, ஒடுக்கப்பட்ட, பழங்குடியினர் மதச் சிறுபான்மையினர் ஆகிய அனைவரையும் ஒன்று திரட்டி அரும்பாடுபட்டு வெற்றி கண்ட பெருமைக்குரியவர். அவரின் மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கும், அவரது இயக்கத்தோழர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் : சமூக நீதி என்னும் சுடரின் ஒளியை இந்தியா முழுவதும் பரவச் செய்தவர்; பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு கிடைப்பதற்கான அடித்தளத்தை அமைத்தவர்; தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டின்அளவு 50% ஆக உயர்த்தப்பட்டதில் பெரும் பங்கு வகித்தவர் ஆனைமுத்து. சமூக நீதிக் கொள்கை பெரும் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ள சூழலில், அவரது மறைவு தமிழர்களுக்கு மிகப்பெரும் இழப்பு. அவருக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் எமது வீரவணக்கத்தைச் செலுத்துகிறோம்.

# நெல்லையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 13 பேருக்கு கரோனா தொற்று: தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியது மாநகராட்சி

திருநெல்வேலி மாநகராட்சிக்கு உட்பட்ட பேட்டை செந்தமிழ்நகர்ப் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பெண்கள், 3 சிறுவர்கள் உட்பட 13 பேருக்கு கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் கடந்த சில நாட்களாகவே கரோனா பரவல் வேகமெடுத்து வருகிறது. நேற்று மட்டும் தமிழகம் முழுவதும் 3986 பேருக்கு தொற்று உறுதியானது. இதனால் மாநிலம் முழுவதும் தடுப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இந்நிலையில், நெல்லை பேட்டை செந்தமிழ்நகர்ப் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 13 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது.

அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த 4 பேருக்கு நேற்று தொற்று உறுதியான நிலையில் இன்று மேலும் 9 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால், சுகாதாரப் பணியாளர்கள் அப்பகுதியில் முகாமிட்டுள்ளனர். அந்தப் பகுதி முழுவதும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்டோர் அனைவரும் தற்போது வீட்டிலேயே தனிமைப்படுத்திக் கொண்டுள்ளனர்.

அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இத்தனை பேருக்கு தொற்று ஏற்பட்டது எப்படி என்பதை கண்டுபிடிக்க தொடர்பு கண்டறியும் **(Contract Tracing)** பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

கரோனா தடுப்பு நடவடிக்கை:இதற்கிடையில், நெல்லை மாநகராட்சி ஆணையாளர் கண்ணன் உத்தரவின்படி மாநகர நல அலுவலர் டாக்டர். சரோஜா ஆலோசனையின்படி மாநகரப் பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்கும் பணி தீவிரமாக நடைபெற்றது.பேருந்துகள், ஆட்டோக்கள், ஏடிஎம்.,கள், மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டது.

பாளையங்கோட்டைப் பகுதிகளில் உதவி ஆணையாளர் பிரேம் ஆனந்த், சுகாதார அலுவலர் அரசகுமார் மேற்பார்வையில் சுகாதார ஆய்வாளர் நடராஜன் தலைமையில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டது. உடன் மேற்பார்வையாளர் முருகன், தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர் கனகப்ரியா, அதிகாரிகள் சீதா லட்சுமி, அருள் செல்வன், கண்ணன் மற்றும் பணியாளர் மாய கண்ணன் இருந்தனர். நெல்லை மாவட்டத்தில் நேற்று மட்டும் 41 பேருக்கு தொற்று உறுதியானது. இன்று மாவட்டத்தில் மொத்த பாதிப்பு மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.



பாதிப்பற்றது என நீங்கள் கருதும் தேநீர் இடைவேளை நீங்கள் நினைப்பதை விட அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்.
COVID-19 பரவுவதைத் தடுக்க முகக் கவசம் அணியுங்கள், உங்கள் கைகளைக் கழுவுங்கள், தனிநபர் இடைவெளியைப் பேணுங்கள்.
ontario.ca/covid-19 மூலம் மேலும் அறியுங்கள்
ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது
Ontario

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

*SUMMER SPECIAL* கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.



இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.





காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

## SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).






5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

*Open to the public, including:*
Contractors, cleaners, building maintenance providers and more.
We stock a full line of COVID19 Protective Products

- Commercial Vacuum Cleaners
- Industrial Blowers
- Floor Machines & accessories






Cold Foggers & Sprayers for COVID

வியாபார நிலையங்கள், அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் சுத்திகரிப்பு வேலைகளைச் செய்யும் ஒப்பந்தக்காரர்களுக்கு எமது அழைப்பு

உங்கள் சுத்திகரிப்பு மற்றும் Building Maintenance வேலைகளுக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் போதிய கையிருப்பில் எம்மிடம் உள்ளதால் நீங்கள் குறைந்த விலைகளில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
இந்த விளம்பரத்தைக் கொண்டு வருபவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

**A&B Supplies**
*Serving York Region for over 30 years*

500 Alden Road, Unit 12, Markham | Tel: (905) 513-6940 | www.anbsupplies.com

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!

RE/MAX

Four Sixteen Whitby Condos
Kaleido Corporation and DC and F Corp

Old Colony Estates
Fetcoscrest Homes

Hillsborough
Andrin Homes

Anchor Woods
Regal Crest Homes

Anchor Woods By Andrin Homes
Andrin Homes

Hometown Sharon Village

Blue Sky
Fieldgate Homes

Universal City Condos 4
Chestnut Hill Developments

U.C. Homes
Tribute Communities

Cornell Rouge Homes
Forest Hill Homes Ltd.

On the Mark Towns
Stateview Homes

Angus Glen South Village Homes
Kylemore Communities

Victory Green Homes
Kensington Homes

Nao Towns
Stateview Homes



**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

முதலில் நீ யார் என்று உணர்ந்து கொள் பின்னர் உன் செயலை தொடங்கு.



# சித்திரை அணங்கே வருக...!

**பிலவ வருடம் 14.04.2021**

சிரித்து வரும் சித்திரை அணங்கை வரவேற்க யாம் மன மகிழ்வோடு காத்திருக்கிறோம். இந்நாள் ஒரு பொன்னாள் தான். புத்துணர்வும் பூரிப்பும், புதுப் புதுச் சிந்தனைகளும் மனதில் பூத்துக் குலுங்கும் நன்னாள். ஆண்டு தோறும் மாறி மாறி வரும் பருவகாலங்களுள் சித்திரை வசந்தம், எல்லோராலும் வரவேற்கப்படுவதவாகும். சித்திரை வருடப்பிறப்பன்று அதிகாலை கண் விழித்தும் மங்கலப் பொருட்களான பொன், வெள்ளி, ரூபா நாணயங்கள், வெற்றிலை, பழம், பாக்கு, தேங்காய் முதலியவற்றில் கண்விழித்தல் முறையாகும். பின்னர் தூய நீராடி, புத்தாடை அணிந்து, இல்லத்தில் அமைந்த சுவாமி அறையில் தீபமேற்றி, வழிபட்டபின், இல்லத்தில் உள்ள மூத்தோர், பெற்றோர் அவர்களை வணங்கி அவர்களது நல்லாசிகளைப் பெற்று, ஆலய தரிசனத்தை முடித்துக்கொண்டு இல்லம் திரும்பி சூரிய பொங்கலை ஆரம்பிக்கலாம்.

புது வருடப் பிறப்பன்று ஆலயங்களிலும் இல்லங்களிலும் புதுப்பஞ்சாங்கம் படித்து பலன் சொல்லுதல் மரபாகும். புது வருடத்தின் பெயர் “பிலவ” வருடம் என்பதாகும்.

புதுவருடம் ஆங்கிலத் திகதி 14.04.2021 புதன்கிழமை பின்னிரவு 1.39 மணியளவில், பூர்வபக்க துதியை திதியில், பரணி நட்சத்திரத்தில், பிறக்கின்றது. அன்றைய தினம் முன்னிரவு 9.39 முதல் விஷு புண்ணிய காலமாகும். இப்புண்ணிய காலத்தில் நீராடும் போது, மருத்து நீரை சிரசில் இட்டு நீடாடுதல் முக்கியம் வாய்ந்ததாகும். மருத்து நீர், கொண்டு நீராடல் எமது தோஷங்களைப் போக்கும் என்பது நம்பிக்கை.

**இச் சந்தர்ப்பத்தில் மருத்து நீர் தயாரிக்கும் முறையை இங்கு நோக்குவோம்.**



தாமரை, தாழம் பூ, மாதுளம் பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, வில்வம், செங்கழுநீர், சீதேவியர் அறுகு, பீர்க்கு, மஞ்சள், மிளகு, திப்பிளி, பால், கோசலம், கோமயம், கோரோசனை, சுக்கு, முதலிய பொருட்களை சுத்தமான நீரிலிட்டு காய்ச்சிப் பெறப்படும் நீரே மருத்து நீராகும். மருத்துவ குணம் நிறைந்த இந்நீர், தோஷம் நீக்க வல்லது. பிணி தீர்க்க வல்லது. இத்தகைய மருத்துவ குணம் மிக்க நீர், எமக்குத் தினமும் கிடைக்க வாய்ப்பு இல்லை ஆதலால், புதுவருடப்பிறப்பன்று தன்னும் யாம் மருத்து நீர் ஸ்நானம் செய்தல் அவசியமாகும்.

வாக்கியபஞ்சாங்கப்படி இவ்வருடம் தோஷ முற்ற நட்சத்திரங்களான அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ம் காலம், பூரம், உத்தரம் 2ம், 3ம், காலங்கள், அத்தம், சித்திரை 1ம், 2ம் காலங்கள் என்பனவாம்.

இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்து நீர் ஸ்நானம் செய்வதுடன் இயன்றளவு தான தருமங்களும் செய்தால், இவர்கள் தோஷ நீக்கம் பெற வாய்புண்டு.

**இனிப் பொங்கலுக்கு ஆயத்தமாவோமா ?**

முற்றத்தில் ஒரு பகுதியைச் சுத்தப்படுத்தி, சாணத்தால் மெழுகி அதன்மேல் ஒரு சிறுபந்தல் அமைத்து, வாழை தோரணம் கட்டி மாக்கோலமிட்டு, கும்பம் வைத்து, பிள்ளையார் பிடித்து, குத்து விளக்கேற்றி, புத்தடுப்பில், புதுப்பானையில், புது அரிசி, பால், சர்க்கரை, பயறு, முந்திரிப்பருப்பு, முந்திரி வற்றல், ஏலம் ஆகியனவற்றை இட்டு, பொங்கல் பொங்கி, பொங்கலை சூரிய பகவானுக்கும், அக்கினிக்கும்

மற்றும் தெய்வங்களுக்குமாக தலைவாழையில் மூன்று படையல்களாகப் படைத்து, தேவாரம் பாடி, கற்பூர ஆரத்தி செய்து வழிபட்டு, பட்டாசு கொளுத்தி அயலவர், ஏழைகள், சுற்றத்தாருக்கும் பொங்கல் வழங்கிய பின்னர் குடும்பத்தினர் ஒன்றாக அமர்ந்து நாமும் பொங்கலை உண்டு மகிழுதல் முறையாகும்.

சுப நேரத்தில் பெரியோரிடம் கை விஷேசம் பெறுதலும் மரபாகும்.

இவ்வருடத்திற்குரிய புத்தாடை நிறம் நீலம், அல்லது சிவப்பு நிறம் கலந்ததாக அமைதல் நன்று. சித்திரை முதலாம் நாள், தெய்வ வழிபாடு, நட்புறவு, கொண்டாடல், நற்சிந்தனைகள், சமய தத்துவ நூல்கள் படித்தல், மங்களகரமாக மலர்ச்சியோடிருத்தல் வேண்டற்பாலனதாகும்.

அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

*“கலாபூஷணம்”*
*திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு M.A*



- மொன்றியால் விண்ணைமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

#40

இடம்: சென்னை அண்ணா கலையரங்கு. ஆண்டு: 1995. நிகழ்ச்சி: லலிதா நகை மாளிகையின் ஆதரவில் நடைபெறும் "பாட்டுக்குப்பாட்டு" வினோத வேடிக்கை நிகழ்ச்சிப் படப்பிடிப்பு. அதில் கலந்து கொள்ள வந்திருந்தவர்களுள் ஒருவர் சேலம் மணிநாதன். இவர் எனக்கு அறிமுகமானதும் - தான் ஒரு தீவிர சிவாஜி ரசிகன் என்பது பற்றிப் பேசிய சில சம்பவங்களை முன்பே எழுதியிருந்தேன். தன்னுடைய மனைவியுடன் பாசம் வைத்துக் குடும்பம் நடத்துவதற்கு "பாலும்-பழமும்" டாக்டர் ரவியாக நடித்த நடிகர் திலகம் சிவாஜி அவர்களே முதல் காரணம் என உணர்ச்சி மேலிட கூறியவற்றையும் குறிப்பிட்டிருந்தேன்.



மேலும் உரையாடலிடையே "அண்ணே! சிவாஜி இயக்கிய டைரக்டர்களுள் உங்களுக்குப் பிடித்தமானவர்கள் யார்?" என்று ஒரு கேள்வியைத் தொடுத்தார்!

"ஒவ்வொரு இயக்குநரும் ஒவ்வொரு வகையில் சிறந்தவர்கள்", என்றேன்.

"இருக்கலாம் அண்ணே! ஆனால் என்னைப் பொறுத்தவரையில் ஏ சி திருலோகச்சந்தர் பெஸ்ட் டைரக்டர் அண்ணே! அண்ணே!! "இருமலர்கள்" படம் பார்த்தீர்களா! அதில ஒரு காட்சி! செய்து காற்றேன் பாருங்க என்ன அழகான ஸ்கிரிப்ட் அது தெரியுமா சார்?!"

("இருமலர்கள்" திரைப்படத்தில் கதாநாயகன் சிவாஜி தனது காதலியான பத்மினி தன்னை ஏமாற்றி மோசம் செய்ததாக நினைத்து அவளை மீண்டும் சந்திக்க நேர்ந்தபோது உரையாடும் ஒரு காட்சி. வசனம் ஆரூர்தாஸ். இயக்குனர் ஏ.சி திருலோக்)

தனது மனைவியை அருகில் வைத்துக்கொண்டு வெட்கப்படாமல் நடித்து காண்பிக்கிறார் சேலம் மணி நாதன்.

"உமா! (பத்மினி) உன்கிட்ட இருந்து லெட்டர் வரும் லெட்டர் வரும் என்று எப்படியெல்லாம் துடித்துக் கொண்டு இருந்தேன் தெரியுமா? (அழுகையுடன்) ஆமா.. உன்னைப் பெண் பார்க்க வந்தானே அந்தப் பணக்கார வாலிபன்.. அவன் என்ன ஆனான்! ஆ... நீ என்னை ஏமாற்றின மாதிரி அவனும் உன்னை ஏமாத்திட்டு ஓடிட்டானா.. ஆ.. (அழுகையுடன் சிரிப்பு) இப்ப உன்னுடைய வாழ்க்கை என்ன ஆச்சு..! ஏன் இப்படிப் பட்டமரம் மாதிரி நிற்கிறாய்... (அழுகையுடன் சொல்லு உமா.. சொல்லு..!

"அண்ணே! இந்த இடத்தில பத்மினி அம்மாவை அப்படியே அட்ரஸ் இல்லாமல் பண்ணிட்டாரண்ணே! திருலோகச்சந்தர் என்ன நினைத்தாரோ அதை அப்படியே சிவாஜி சாரிட்டேயிருந்து கறந்தெடுத்துவிட்டார்..!

ஆரோக்கியமான ரசிகர்களை அபூர்வமாகத்தான் சந்திக்கலாம். சில ரசிகர்கள் தங்களை கதாசிரியர்களாகவோ டைரக்டர்களாகவோ நினைத்துக் கொண்டுதான் படம் பார்ப்பார்கள். அன்பர் மனிநாதனிடம் இந்தப் பார்வை நிறையவே உண்டு. என்னுடைய பார்வையும் அப்படிப்பட்டதுதான்! பொதுவாக யாழ்பாணத்து ரசிகர்கள் இப்படிப்பட்ட பார்வை உடையவர்களாகவும் படித்தவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் சிவாஜிக்கு கிடைத்த உயர்மட்ட ரசிகர்கள்!

1995 ஆம் வருடம் நவம்பரில் தலைநகர் கொழும்பில் நடிகர் திலகம் அவர்களுக்கு இந்திய அரசின் அதியுயர் விருதான "தாதா சாகேப் பால்கே விருது", வழங்கப்பட்டதை யொட்டி இலங்கை வாழ் கலாபிமானிகள் பண்டாரநாயக்கா நினைவு மண்டபத்தில் மாபெரும் பாராட்டு விழாவிற்கு சத்ரபதி சிவாஜி மன்னன் சூடிய கிரீடம் போன்ற முடியை பொன்னால் செய்து நடிகர் திலகத்திற்கு அணிந்து மகிழ்ந்தார்கள்.

அதன் பின் நடந்த பத்திரிக்கையாளர்கள் மாநாட்டில் நடிகர் திலகம் அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளில் ஒன்றுக்குச் சிவாஜி அவர்கள் சொன்னபதில் சேலம் அன்பர் மணிநாதனின் கருத்தையே எனக்கு நினைவூட்டியது!

"உங்களை வைத்துப் படம் எடுத்த இயக்குனர்களுள் தங்களைக் கவர்ந்தவர்கள் யார்?" எனக் கேள்வி எழுப்பிய போது, "எல்லா டைரக்டர்களும் சிறந்தவர்கள் தான். ஆனால் என்னிடம் அதிகம் வேலை வாங்கி "ப.. பா.." வரிசையில் வெற்றிப்படங்களை எடுத்த சகோதரர் ஏ.பீம்சிங்கும், என்னிடம் உள்ள திறமைகளை தோண்டி தோண்டி வெளியே கொண்டு வந்த திருலோகச் சந்தரும் முக்கியமானவர்கள் என்று கூறலாம்" என பதிலுரைத்தார் சிவாஜி அவர்கள்.



இவ்விதம் இயக்குனர் திருலோக் அவர்களால் தோண்டி தோண்டி நடிக்க வைத்த காட்சிகளிலொன்றையே மேலே அன்பர் மனிநாதன் நடித்துக் காண்பித்தார்.

நடிகர் திலகத்தின் நடிப்பாற்றலைத் தகுந்த முறையில் பாவித்து மிகச் சிறப்பான "சிவாஜி படங்கள்" எவை என்று பேசவைத்த இயக்குனரும், கதை ஆசிரியரும் சிவாஜி அவர்களின் அன்புக்குப் பாத்திரமானவருமான ஏ.சி திருலோகச்சந்தர் அவர்களும் அண்ணாவைப் போல், கலைஞரைப் போல் சிவாஜி அவர்களை என்றும் உயர்வாக மதிப்பவர் என்பதினால் அவர்கள் நடிகர் திலகம் பற்றி குறிப்பிட்டுச் சொல்லியவற்றைப் பார்ப்போம்.

"சிவாஜி கணேசன் அவர்களை வைத்து நான் 24 படங்கள் செய்திருக்கிறேன். ஆனால் அன்றும் சரி, இன்றும் சரி நான் அவருடைய பரம ரசிகன்", என்றார் "உயர்ந்த மனிதர்" திருலோக் அவர்கள்.

தமிழ்ப் பட இயக்குனர்களிலேயே உயர்ந்த மனிதரும் இவரே! சுமார் 6 அடி உயரமுள்ள ஆஜானுபாகுவானவர்! அவர் மேலும் கூறினார், "பராசக்தி படம் திரையிடப்பட்ட பிறகு தமிழ்த்திரையுலகிலேயே மிகப் பெரிய மாறுதல் - புதிய சகாப்தம் தோன்றப் போகிறது என்று நம்பிய பல்லாயிரக்கணக்கானவர்களில் நானும் ஒருவன். அந்த நம்பிக்கைக்கு வித்திட்டவர் நடிகர் திலகம் என்றால் அது மிகையில்லை!

நான் உதவிஇயக்குனராகப் பணியாற்றிய காலங்களில் பக்கத்து செட்டில் அவர் நடித்துக்கொண்டிருக்கும் படம் தயாரிப்பில் இருக்கும். அங்கே போய் ஒரு ஓரமாய் நின்றபடி அவருடைய நடிப்பை கண்கொள்ளாமல் ரசிப்பேன். அப்போதைய நிலையில் அவரை வைத்து மிக அதிகமான படங்களை இயக்க வரப்போகிறேன் என்று நான் சுத்தமாக எதிர்பார்க்கவில்லை. அவருடைய நடிப்பைப் பற்றிப் பேசவோ விவரிக்கவோ நேரம் போதாது. உலகப் பத்திரிகைகளின் எல்லா பக்கங்களையும் நிரப்பக்கூடிய அளவுக்கு அவரது ஆற்றலை விரிவாக எடுத்துச் சொல்ல முடியும்.

பாலாஜியின் படத்திற்கு இயக்குனராக பொறுப்பேற்றுக் கொண்ட நான் அதில் கதாநாயகனாக நடிக்கும் சிவாஜி கணேசனிடம் கதையைச் சொல்ல போன போதுதான் முதன்முதலாக டைரக்டர் என்ற முறையில் அவருடன் அறிமுகமானேன். அந்த சந்திப்பிலேயே நாங்கள் இணை பிரியாத நண்பர்கள் ஆகிவிட்டோம். பாச உணர்வு பின்னிய வலையில் நாங்கள் கட்டுண்டு விட்டோம். இருபது வருடங்களாக மதிய உணவை இருவரும் ஒன்றாக சேர்ந்து தான் சாப்பிட்டு இருக்கிறோம் என்றால் எங்களுக்கிடையே இருக்கும் நட்பு உணர்வை அது காட்டுகின்றது என்று தான் அர்த்தம்.

அவர் மிகச்சிறந்த நடிகர் மட்டுமல்ல! மிக நன்றாக பாடுவார். சங்கீத ஞானம் மிக கைவரப்பெற்றவர். எந்த கர்நாடக இசையையும் கண்டுபிடித்து விடும் வல்லமை அவருக்கு உண்டு. அதனால்தான் அவர் சம்பந்தப்பட்ட காட்சிகளை கவனித்தீர்களேயானால் அவரே உணர்ச்சிவசப்பட்டு பாடுவது போலவே தோன்றும். கழுத்து நரம்புகள் புடைக்க உதடுகள் மிகச்சரியாக வார்த்தைகளை உச்சரிக்க முகபாவங்களும் ராக அலைகளுக்கு ஏற்றார் போல் மாறும் மாயத்தை அவர் செய்ய கவனிக்கலாம்!

ஒருமுறை நான் கேட்டேன், "இவ்வாறு அழகாகப் பாடுகிறீர்கள், ஆனால் நாடகமேடையானாலும் சரி, சினிமாவானாலும் சரி நீங்கள் ஏன் பாடுவதில்லை? ஒரு ரீ ஆர் மகாலிங்கம் மாதிரி ஒரு பி யு சின்னப்பா மாதிரி ஏன் நீங்கள் திகழ கூடாது?

அதற்கு அவர் ரொம்பவும் அழகாக பதில் சொன்னார். "என்னுடைய ஒரே நோக்கம் நடிப்புதான். நடிப்புத் துறையில் நான் சிறக்க வேண்டும். ஆகவே அதில் மட்டுமே நான் முழுக்கவனமும் செலுத்துகின்றேன். என் நடிப்பை பார்க்கும் ரசிகர்களின் கவனம் என் நடிப்பிலிருந்து சிதறக்கூடாது என்று எதிர்பார்க்கிறேன். நான் பாடிக்கொண்டே நடிப்பதனால் ரசிகர்கள் என் நடிப்பை விடவும் ரசிப்பதற்குப்




பாட்டும் இருக்கிறதென்பதால் அவர்கள் கவனம் அதற்குத் திரும்புவதை நான் விரும்பவில்லை. மேடையில் ஒரு பாடகரிடம், "அந்தப் பாடலைப் பாடுங்கள்," என்று அவருடைய ரசிகர்கள் கேட்பதைப் போலவே, நான் மேடையில் இருக்கும்போது அந்த நடிப்பை நடித்து காட்டுங்கள் இந்த நடிப்பை நடித்து காட்டுங்கள் என்று கேட்டு அதை நிறைவேற்றத்தான் ஆசைப்படுகிறேன் ஆகவே நடிப்பு ஒன்றிலேயே என் முழு திறமையையும் முயற்சியையும் முழு சக்தியையும் குவித்து பிரயோகிக்கப் போகிறேன்.

என் இந்தத் திறமைகளை மனதுக்குள்ளேயே அமுக்கி வைத்த அந்த ஆற்றல்களை ஒருமுகப்படுத்தி நடிப்புத் திறமையிலேயே செலவிட்டு அதன் பரிணாமத்தை, அதன் எல்லையை தொட விரும்புகிறேன்.

ஆகவே தெரிந்திருந்தாலும் எனக்கு பாட்டு வேண்டாம். நடிப்பு... நடிப்பு.. அது தான் எனது மூச்சு! "இது கேட்டு நான் அசந்து விட்டேன்!

பிரேசில் நாட்டில் "பீலே" என்று உலகப் புகழ்பெற்ற கால்பந்து வீரர். அவரை அந்த நாடு தேசிய பொதுச் சொத்தாக அறிவித்திருக்கிறது. அவருக்குரிய கௌரவம் மரியாதை எல்லாம் தரப்படுகிறது. அவர் இன்று கால்பந்து விளையாடுவதில்லை, என்றாலும் தேசிய கௌரவத்தில் ஒரு எள்ளளவும் குறைவில்லாமல் பார்த்துக்கொள்கிறார்கள்.

அதேபோன்ற அந்தஸ்துக்கு நம் சிவாஜியும் தகுதியானவர். தேசிய அளவில் அவரை பொதுச் சொத்தாக அங்கீகரிக்க வேண்டும்.

அவர் நடிப்பின் சிகரம். எல்லையைத் தொட்டு விட்டவர். அவர் நடிக்காத பாத்திரமேயில்லை. திருக்குறளில் சொல்லப்படாத சமாச்சாரம் என்று ஏதாவது இருக்கிறதா? அதே போலத்தான் அவர் நடிப்பிற்கு மூலவராய் இருக்கிறார். அவர் ஏன் இயக்குனராக இருக்கக் கூடாது! அவருக்கு ஆற்றல் இல்லையா? இருக்கிறது! ஆனாலும் அவர் குறிக்கோள் நடிப்பு.. நடிப்பு... நடிப்புதான்! நடிப்பதை தவிர வேறு இல்லை!

சிவாஜி அவர்களை மூன்று வேடங்களில் நடிக்க வைத்து திரையுலகத்தை திரும்பிப் பார்க்க வைத்த படம் என்றால் இயற்றப்பெற்ற தெய்வமகன் படமாகும் இந்திய திரையுலகிற்கு பெருமை தரும் வகையில் 42வது ஆஸ்கார் திரைப்பட விருது தேர்வுக்கு இந்தியாவிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட படம் என்பது எல்லோருக்கும் குறிப்பாக தமிழ் திரையுலகிற்கு பெருமை சேர்க்கும் அண்ணனின் படமாகும்.

(திருலோக் சார் உயிருடன் வாழ்ந்த காலத்தில் சிவாஜி ஐயா பற்றி கூறிய செய்திகளாகும்!)

காட்சிகளும் - நினைவுகளும் தொடரும்!



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 941



## ரம்பொட ஆஞ்சநேயசுவாமிகள் ஆலயம், ரம்பொட. மலையகம்

"வஞ்சனை நீக்கும் அஞ்சனை செல்வன்
கதாயுதனை காற்றின் மைந்தனை இன்சொல்
அதேகொண்டு அவனை அனைத்தும் காக்க
சதா அபிடேகம் சாத்துவர் உவந்து."

ஆஞ்சநேய வழிபாட்டிலே வடைமாலை சாத்துவது சிறப்பான அம்சமாகக் கருதப்படுகின்றது. நவக்கிரகங்களிலே ராகு, சனி ஆகியவற்றால் பூவுலகில் வாழும் மாந்தர்களுக்கு ஏதேனும் இடையூறு ஏற்படின், ராகுவுக்குப் பிரியமான உழுந்தும், சனிபகவானுக்குப் பிரியமான எள் எண்ணையால் செய்த வடைமாலையும் ஆஞ்சநேயருக்குச் சாத்தி வழிபட்டால், சனி, ராகு ஆகியவற்றின் இடையூறிலிருந்து மனிதர்கள் விடுபடுவர். இதற்காகவே ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாத்தப்படுகின்றது. இவ்வாறே துளசி மாலையும், வெற்றிலை மாலையும் அறுகம்புல்மாலையும் ஆஞ்சநேயருக்கு மிகவும் பிடித்தவையாகும். எல்லா நாளும் ஆஞ்சநேயருக்குச் சிறந்த நாளாகக் கருதப்பட்டபோதிலும், வேதாசிரியர்களின் கூற்றுப்படி, புதன், வியாழன், சனி ஆகிய நாட்கள், வழிபடுவதற்குச் சிறந்த நாட்களெனக் கூறிப்பட்டுள்ளது.

மார்கழிமாதம் மூலநட்சத்திரத்துடன் கூடிய அமாவாசை நாள், ஆஞ்சநேயர் திருஅவதாரம் செய்த நாளாகும். அன்று ஆஞ்சநேயருக்கு அலங்காரம் செய்து தீப, தூபம் காட்டி வணஙகுவது சிறப்பாகும். சித்திரை மாதம், ஸ்ரீ ராமநவமியிலும், மாதந்தோறும் கேட்டை நட்சத்திரத்திலும் வழிபடுவது, மிகுந்த பலனைக் கொடுக்கும். திருப்பதியிலே ஸ்ரீ வெங்கடாசலபதிக்கு சுப்ரபாதம் பாடப்படும். இவ்வாறே ஆஞ்சநேயரை வாழ்த்தியும் சில ஆலயங்களிலே சுப்ரபாதம் பாடப்படும்.

ஆஞ்சநேய சுவாமிகள் பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டவர். இராமதூதுவனாக அறியப்பட்ட ஆஞ்சநேயர், இராமச்சந்திரமூர்த்தியின் பரமபக்தராக இருக்கும்போதே, பரமஞானியாகவும் விளங்கியுள்ளார். ஒன்பது வியாகரணமும் தெரிந்த "நவ வ்யாகரண வேத்தா" என்று, ராமரே ஆஞ்சநேயரைப் புகழும் அளவிற்குப் பெரும் கல்விமானாக விளங்கியுள்ளார். ஆனாலும் புத்திப் பிரகாசம், சக்திப் பிரவாகம் எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு, பக்தியிலேயே பரமானந்தம் அனுபவிப்பவராக ஆஞ்சநேய சுவாமிகள் காணப்படுகின்றார். ஞானத்திலே உச்சநிலை, பலத்திலே உச்சநிலை, பக்தியிலே உச்சநிலை, வீரத்திலே உச்சநிலை, கீர்த்தியிலே உச்சநிலை, சேவையிலே உச்சநிலை, வினயத்திலே உச்சநிலை என அனைத்தும் நிறைந்திருக்கின்ற ஸ்வரூபமாக, ஆஞ்சநேயசுவாமிகள் விளங்குகின்றார். இவை யாவற்றிற்கும் மேலாக, இவருடைய பிரமச்சரியம் போற்றத்தக்கது. இராமபிரானுக்குச் சேவை செய்வதைத்தவிர வேறெதையும் கருத்திற்கொள்ளாத பக்திமானாக, ஆஞ்சநேயசுவாமிகள் போற்றப்படுகின்றார்.

இராமநாமம் எங்கே ஒலித்தாலும், ரகுநாதகீர்த்தனம் எங்கே நடந்தாலும், அங்கெல்லாம் மற்றவர் கண்ணுக்குத் தெரியாமல் ஆஞ்சநேயசுவாமிகள் ஆனந்தக்கண்ணீர் பொழிந்தவாறு கேட்டுக்கொண்டிருப்பார். ஸ்ரீ இராமபிரான், சீதாப்பிராட்டி ஆகியோரின் முழு அன்பிற்கும் பாத்திரமான இவரை, ஈழத்திலே அனுமார் என்று அன்போடு அழைத்து வழிபடுகின்றார்கள். ஆஞ்சநேயசுவாமிகளிடம் காணப்பட்ட பண்பாடுகள் காரணமாக, அவரை மகான்கள் பலரும் பூசித்துள்ளனர்.

மலையகத்தில் எழுந்தருளியுள்ள ரம்பொட அஞ்சநேயர் ஆலயத்தின் மூலமூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ ராமபிரான், சீதாபிராட்டி ஆகியோரின் முழு அன்புக்கும் பாத்திரமானவர், அனுமான் என்றழைக்கப்படும் பெருமை பெற்றவர். ஸ்ரீ ஆஞ்சநேயர் என்றும் பிரமச்சாரி. தமிழ்நாட்டில் இவரை அனுமார் என்றும், கர்நாடகத்தில் அனுமந்தையா என்றும், கேரளாவில் ஆஞ்சநேயர் சுவாமி என்றும், மராட்டியத்தில் மாருதி என்றும், வடமாநிலங்களில் மகாவீர் என்றும் அழைத்துப் பக்தியுடன் பூசை செய்து வருகின்றார்கள். ஸ்ரீ ராகவேந்திர சுவாமியும் பஞ்சமுகி குகையில் அமர்ந்து, ஆஞ்சநேயர் வழிபாடு நடத்தினார்.

மகாபாரத யுத்தத்தின்போது அர்ச்சுனனை ஆயதபாணியாக உட்கார வைத்து, பரந்தாமன் ஓட்டிய ரதத்தில், வீர அனுமான் கொடிதான் பறந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அர்ச்சுனனின் தேர்க்கொடியில் இருந்துகொண்டு கீதோபதேசத்தை நேரில் கேட்டவர் ஸ்ரீ ஆஞ்சநேயர். இராமநாமம் கேட்கும் இடங்களில் ஆனந்தம் நிரம்பிய கண்களுடன், கூப்பிய கரங்களுடன் அரூபியாக அருகில் நின்று செவி மடுக்கின்றார், அருள் தரும் ஸ்ரீ ஆஞ்சநேயர் என, புராணங்களிலே கூறப்பட்டுள்ளது. ஞானத்தில், பலத்தில், பக்தியில், வீரத்தில், கீர்த்தியில், சேவையில், வினயத்தில், உச்சநிலை கொண்டவராக, இவையெல்லாம் சேர்ந்திருக்கின்ற ஸ்வரூபம் ஒன்று உண்டென்றால் அது ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமியையே குறிக்கும். இவ்வாறான பெருமை பல கொண்ட ஆஞ்சநேய சுவாமிகளுக்கு, மலையகத்திலும் கோவில்கட்டிச் சிறப்புச் செய்திருக்கின்றார்கள். ஈழத்தின் மத்தியிலுள்ள மலையகப் பிரதேசத்தில் நுவரெலியா, இயற்கை அழகு கொஞ்சும் அற்புதமான பூமியாக விளங்குகின்றது. நுவரெலியாவின் நகரஎல்லையிலே சீதாஎலிய என்ற இடம் காணப்படுகின்றது. இராவணன் சீதையைக் கவாந்துசென்று இலங்கையிலுள்ள அசோகவனத்திலே சிறைவைத்தான் என இராமாயணத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. சீதஎலிய என்ற இடத்திலேதான் அசோகவனம் காணப்படுகின்றது.

*வளரும்...*


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு




நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# இவ்வார ராசிபலன்

**09-04-2021 வெள்ளி தொடக்கம் 15-04-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** அன்பும், அரவணைப்பும் கிடைக்கக்கூடிய அமைதியான வாரம். சோதனைகள் நீங்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல் நலம் திருப்தி தரும். மன அமைதி குறையும். திருமண வாய்ப்பு கூடும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பேச்சு திறமை அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அக்னிலிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 5,7,9,0
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,U




**ரிஷபம்:** ஏராளமான பணவரவு கிடைக்கக் கூடிய எதார்த்தமான வாரம். சுய வீடு வாங்க முயற்சி செய்யலாம். மங்களமான நாள். அரசு வாய்ப்பு தடைப்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். திருமண முயற்சி வெற்றி தரும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும். பிரார்த்தனையால் பலன் உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: பட்டத்தரசியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Z




**மிதுனம்:** நிம்மதியும் வெகுமதியும் நிதர்சனமாக கிடைக்கக் கூடிய நிலையான வாரம். வெளிநாட்டுப் பயணம் உண்டு, கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன் கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். பதவி உயர்வு தடைப்படும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் அதிகரிக்கும். பெற்றோர்களால் பாராட்டு பெறுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹோரம்பகணபதி, அதிர்ஷ்ட எண்: 3,8,2,9
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,X




**கடகம்:** வெளிப்படையான ஆசைகள் பூர்த்தியாகக்கூடிய நேர்த்தியான வாரம். தொழில் லாபம் கூடும். புதிய எண்ணங்கள் உருவாகும்.வெகுமதி கூடும் நாள். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை அணிகலன் சேரும். மருத்துவச் செலவு உண்டு. பெண்களுக்கு கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: வீரஅண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 5,2,6,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,G




**சிம்மம்:** தியாகமும், யோகமும் திருப்தியோடு அமையக்கூடிய அற்புதமான வாரம். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெருமைகள் சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பணத் தேவை அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். புகழ் கூடும். அந்தஸ்து உயரும். உறவினர் ஒன்றுமை ஏற்படும். பொறுப்புகள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனகசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,2,5,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**கன்னி:** பிள்ளைகளின் நேசம் பெருவாரியாகக் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். சொத்து சேர்க்கை உண்டு. உழைப்பில் கவனம் தேவை. கோரிக்கை நிறைவேறும்.மனை வாங்கும் யோகம் உண்டு. பொருளாதார வளம் மேம்படும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தேவிசெல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 1,8,2,5
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,A




**துலாம்:** அர்ச்சனையால் பிரச்சனை ஓய்ந்து கர்ஜனையோடு வலம் வரக்கூடிய அற்புத வாரம். காதல் பிரிவை ஏற்படுத்தும். வீண் குழப்பங்கள் வந்து போகும். உடல் நலம் மேம்படும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய முயற்சிகள் கை கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு. அயல் நாட்டுப் பயணம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அற்புதமான நாள். பித்ருக்கள் சாபம் நீங்கும். மங்களச் செய்தி வரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மாங்கல்யேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,4,9,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,V




**விருச்சிகம்:** நிதிநிலை நிலையாகப் பெருகக்கூடிய நிதர்சனமான வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். வீண் செலவுகளை தவிர்ப்பது நல்லது. புதிய சிந்தனை உருவாகும். கண்ணாடிப் பொருட்கள் சேதமாகும். எதிர்ப்புகள் தவிடுப் பொடியாகும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர்.
வழிபடவேண்டிய தெய்வம்: அன்னமார்சுவாமி, அதிர்ஷ்ட எண்: 4,2,7,0
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Q




**தனுசு:** நுண்ணறிவைப் பயன்படுத்தி மென்மேலும் உயரக்கூடிய உன்னதமான வாரம். மனதில் மகிழ்ச்சி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. பொறாமைகள் விலகும் நாள். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகள் தாமதமாகும். நீண்ட நாளைய நோய் விலகும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். சுபக்காரியங்கள் நடந்தேறும். இல்லத்தில் அமைதி பெருகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: படைவீட்டம்மன், அதிர்ஷ்ட எண்: 0,9,3,6
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,F




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** மலையளவு நன்மைகள் கிடைக்கக்கூடிய மகத்தான வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: வேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**கும்பம்:** பிரியமானவர்களை சந்திக்கக் கூடிய சந்தோஷமான வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஓம்கார சுயம்புலிங்கம், அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மீனம்:** உண்மையான வரவு கிடைக்கக் கூடிய நன்மையான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பிரம்மசக்திஅம்மன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M

---

# பரதக் கலைக்கு கமல், அஜித் ஆகியோர் துரோகம் செய்து விட்டனர் என்கிறார் இயக்குநர் ஸ்ரீராம்



இயக்குநர் கே.ஸ்ரீராம் முழுக்க முழுக்க பரதக்கலையை மையமாக வைத்து குமார சம்பவம் என்ற படத்தை எடுத்து முடித்திருக்கிறார். படத்தில் கதை, திரைக்கதை, வசனம், இசை, பாடல்கள், நடனம், தயாரிப்பு, இயக்கம் என்பதோடு மட்டுமில்லாமல் அவரே கதாநாயகனாக நடித்திருக்கிறார். பரதம் சம்மந்தமான கதைக்கு இன்றைய அவசியம் என்ன என்பதை இயக்குநர் ஸ்ரீராம் நம்மிடம் தெரிவித்தார்.

நான் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டியத்துறையில் இருக்கிறேன். என்னுடைய அப்பா பி.கே.முத்து பரதக்கலைஞராக இருந்தவர். ஏழைபடும்பாடு, சுதர்ஸன், மக்களைப் பெற்ற மகராசி, மாங்கல்யம் போன்ற படங்களில் டான்ஸ் மாஸ்டராக இருந்திருக்கிறார். சிவாஜிக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

நானும் இதே துறைக்கு வந்து விட்டேன். இன்றைக்கு சினிமாவில் பரத நாட்டியத்தை மிகவும் மோசமாக சித்தரிக்கிறார்கள். பரதம் கற்றுக்கொண்டால் பெண் தன்மை வந்து விடும் என்ற தவறான ஒரு விஷயத்தை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அஜித் நடித்த "வரலாறு" படத்தில் பரதம் கற்றுக்கொண்டதால் தனக்கு திருமணம் ஆகவில்லை என்பதாக காட்டப்படும். அதே போல "விஸ்வரூபம்" படத்திலும் கமல்ஹாசன் நாட்டியக்கலைஞராக இருப்பதால் மனைவி வெறுப்பதாக காட்டப்பட்டிருக்கும். பரதம் என்பது புனிதமான விஷயம். அதை இப்படியெல்லாம் சிறுமைப்படுத்துவது பற்றி யாருமே கவலைப் படவில்லை. இந்த விஷயத்தில் கமலும், அஜித்தும் பரதக்கலைக்கு துரோகம் செய்துவிட்டார்கள் என்றே சொல்வேன்.

இது தொடர்வதைத் தடுக்க வேண்டும் என்று நினைத்தேன். இதற்காக நானே "குமார சம்பவம்" என்ற படத்தை எடுத்து முடித்திருக்கிறேன். நான் பரதத்தை எளிய மக்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக பல்வேறு வழிகளில் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறேன். பஞ்சபூதங்கள் பற்றியும், ஐந்திணைகள், நவக்கிரகங்கள் பற்றியும் நாட்டியத்தில் சொல்லி வருகிறேன். கிராமத்துக் காவல் தெய்வங்களான ஏழு முனிகள் பற்றிய நாட்டியத்தையும் ஆடியிருக்கிறேன். கார்கில் போர் நடந்தபோது அதைப் பற்றியும் பரதத்தில் சொல்லியிருக்கிறேன். இந்தப் படத்திற்குப் பிறகு பரதத்தை இனிமேல் யாரும் தவறாக காட்டக்கூடாது. அதுதான் என்னுடைய நோக்கம்.

படத்தில் என்னோடு நிகிதா மேனன், சாய் அக்ஷிதா, மீனாட்சி ஆகியோர் நடித்திருக்கிறார்கள். படத்தின் முதல் பிரதி தயாராக இருக்கிறது. விரைவில் வெளியாகும் என்றார் ஸ்ரீராம்.

# சித்திரைத் திருமகளும்! நித்திரைக் கனவுகளும்!!

- மொன்றியால் வீணை மைந்தன் -

மஞ்சத்தில் முகம் புதைத்த - என்,
நெஞ்சத்தில் நிலைத்திருக்கும்
அஞ்சனமையுடை அழகு தமிழ் மீனாளை
கெஞ்சி நான் அழைப்பதெல்லாம்
தஞ்சமென சரண்புகவே!
அஞ்சேல். அஞ்சேல் என
அன்புருவாய் வந்திடுவாள்!
எந்தன் உயிர் நிலைப்பதற்கு
என்றென்றும் துணையிருக்கும்
அகிலாண்டகோடி
பிரம்மாண்ட நாயகி,
மஞ்சள் முகத்தினிடை
மங்கலத் திலகமுடன்
மாலைக் கதிரொளியாய்
ஒளிவீசும் பெருமாட்டி!
மனசெல்லாம் நிறைந்திருப்பாள்,
தங்கமகள் சிலசமயம்
சிங்கத்தில் வலம் வருவாள்,
பொங்குவாள் பூரிப்பாள்,
அங்கயற்கண்ணியவள்
அடிபணிந்து வணங்கிடுவேன்!

இச்சையுடன் அவள் முகத்தை
லஜ்ஜையின்றி நோக்கிடுவேன்,
குங்குமம் துலங்கிடவே
குமின்சிரிப்பு இதழ் சிந்தும்
நான்மாடக்கூடல்
கோபுரத்து மலையரசி,
பச்சைப் புடவைக்காரி
பவளவாய் முத்துடையாள்,
மூவுலகும் ஒளிசிந்தும்
மூக்குத்தி அம்மன் அவள்
வாய் மலர்ந்து தூங்கென்றாள்!
தாய் எனும் தத்துவம்
தான் எனச் சொல்லிய
மான்விழியாள் மதுரை மீனாட்சி!
மனசினிலே கோயில் கொண்டாள்!

2.
மாராப்புச் சேலைக்குள்
தாராளமாய் எனை அணைத்துத்
தாலாட்டி உறங்க வைக்க
வேறுலகம் அழைப்பது போல
வேறொருத்தி எனைத் தழுவி
விதவிதமாய் முத்தமிட்டாள்!
யாரென்று நான் வினவ,
பாயில் நீ படுத்தாலும்
பஞ்சனையில் விழுந்தாலும்,
மஞ்சத்திலிருந்துன்னை
நெஞ்சத்தில் கட்டிப்போடும்
நித்திரா தேவி என்றாள்!
சொத்தென்ன சுகமென்ன
அத்தனையும் உனக்கே தான்
மெத்தென்று எனை அணைத்து
மேனி தழுவ என்றேன்!

மோனநிலைத் துறவியையும்
மோகத்தில் மூழ்கடித்த
மேனகையாள் ஸ்பரிசமென
ஆண்மையை இழந்தே தான்,
அவள் அணைப்பில் தொலைந்தேன் யான்!

3.
காணாமல் போன கைதிகளில்
ஒருவனென(க்)
கண்களை மூட வைத்து
கண்ணாம்பூச்சி ஆட வெனக்
காரிகையாள் இன்னொருத்தி
வாரியெடுத்தென்னை
மாரியென முத்தமிட்டாள்!
யாரடி நீ மோகினி என்றேன்
காய்கின்ற நிலவெனக்குச் சுடுவதனால்
நோய் போக்கும் உன் மேனி தழுவுவதற்கு
வந்திட்ட கனவு மங்கை நான் என்றாள்!

ஆஹா! ஓர் இரவில் இரு மங்கை,
எனைத் தழுவ இன்பந்தான்.. இன்பந்தான்
இதுவன்றோ சொர்க்கம் என்பேன்,
புது வெள்ளம் பாய்ந்தது போல்
புத்துணர்ச்சி காணுகின்றேன்.

மதுக்குடத்தில் போட்டுவைத்த
கம்பனவன் கவிதைகள் போல்
நீள் விழியாள் நித்திரையும்
கலையரசி கனவுமங்கை இருவரையும்
கவிதைப் புத்தகமாய் புரட்டிப் புரட்டி,
புதுப்புது அர்த்தங்கள் நான் கற்றேன்!

நேற்று வரை என்னை நெடுநாளாய்
தூங்கவைத்த



நித்திராதேவியவள் நீட்சியாய் கனவு மங்கை
இருவரதும், உறவுகளை உடைத்தெறிய
உரிமையுடன்
இன்னொருத்தி ஓடோடி வந்திட்டாள்!

4.
பருவக் குமரியவள் பதினாறு வயதுடையாள்,
முறுவல் முகத்தினிலே முழு நிலவை
பார்க்கின்றேன்,
முல்லைப் பூ; மல்லிப் பூ; அல்லிப் பூ;
செண்பகப்பூ
எங்கெங்கு நோக்கினும் அழகின் பொன்
சிரிப்பு!
எல்லையில்லா புன்சிரிப்பு இவள்
போகுமிடமெல்லாம்;
கொஞ்சு மொழி பேசும் வஞ்சிமகள் போன்று
கொடியிடையில் மணிச்சரங்கள் மின்னி
விளையாடும்,
கொலுசின் ஒளி கிண்கிணியாய் மணிக்கவிதை
பாடும்,
புள்ளினங்கள் கூவும் பூந்தென்றல் வீசும்,
பச்சை மயில் ஆடும் பசுங்கிளிகள் பாடும்,

இச்சை கொண்டு இளமான்கள் இன்பமுடன்
துள்ளும்,
இளவேனிற் காலமகள் இவள் தந்த
சீதனமாம்,
இத்தனையும் உனக்குத்தான்,
எழுந்து நீ வா வென்றாள்!

சித்திரையாள் அழைக்கின்றேன்,
தேதியொன்று சொல்லிடுவேன்,
சீக்கிரமாய் எழுகவென்றாள்!

எத்தனை காலம்தான்
முகக்கவசம் அணிந்து
முகம் மறைத்து முக்காடிட்டு
அகத்தினிலே அச்சம் குவித்து
இகசுகத்தைத் தொலைத்து
இருளிடையே நீ வாழ்வாய்?
முகிலைக் கிழித்து வந்து
முழு நிலவைப் பழித்துவரும்
சேல்விழியாள் செப்புகின்றாள்
ஊழ்வினையோவென்று
ஏமாந்து தூங்கிடாதே!


மரணத்தை மலிவாக்கும்
கொரோனாக்கள் துணையுடனே
அரசோச்சும் ஆர்எஸ்எஸ் கிருமிகளை
இந்தியப் பாசிசத்தை
வெந்தணலில் பொசுக்குதற்கும்,
எந்தையர் நாட்டை எம்மினத்தை
முந்தைய சங்கிலியும் வன்னியனும்
சொந்தங் கொண்டாடிய திருவிடத்தை
சிந்தை சிறிதுமின்றிச் சீரழிக்கும்
அந்தகரை - மந்திகளை - ஆணவப்
பிறவிகளை
அம்பாந்தோட்டைக்கு அனுப்பி வைப்பதற்கும்,

சித்திரை நான் வந்துவிட்டேன்!,
சிரிக்கட்டும் உந்தன் ஊர்
வசந்தகாற்றில்....!
நித்திரை விரட்டி இன்பக்கதைகள் பேசி,
முத்திரை பதிய முத்தங்கள் நான் தருவேன்!
வீரனே! என்விழி நிறைந்தவனே !
விடுதலைக்குரல் எழுப்பி
விரைந்து நீ வந்திடுவாய் !
சித்திரை என் சேலைக்குள்
சிறை பிடித்துச் சென்றிடுவேன்!
கைதியாக அல்ல ...
காதலால் என்றுரைத்தாள்..
ஆதலால்,
நானும் அவளுடனே செல்கின்றேன்!

# கொரோனா தடுப்பூசியின் பலன்கள்: உலக அளவில் ஒரு பார்வை

உலகம் முழுவதும் கொரோனா இரண்டாம் அலையின் தீவிரம் அதிகரித்து வருகிறது.

கடந்த சில மாதங்களாக பாதிப்பு குறைவாக இருந்த நாடுகளில் கொரோனா மீண்டும் வேகம் எடுக்கத் தொடங்கியுள்ளது. இந்தியாவில் கொரோனா முதல் அலையின்போது 2020 செப்.17-ல் அதிகபட்ச ஒரு நாள் பாதிப்பு 98,795 ஆக இருந்தது. 6 மாதங்களுக்குப் பின் தற்போது வேகம் எடுத்துள்ள கொரோனா 2-ம் அலையில் கடந்த ஏப்ரல் 5-ஆந்தேதி ஒருநாள் கொரோனா பாதிப்பு 1,03,558 ஆக உயர்ந்தது. ஏப்ரல்-7-ல் ஒருநாள் பாதிப்பு 1,15,736 ஆக அதிகரித்த நிலையில் இன்று (8-ந் தேதி) புதிய உச்சமாக 1,26,789 பேர் கொரோனா பாதிப்பிற்குள்ளாகி இருப்பதாக, மத்திய சுகாதாரத்துறைஅமைச்சகம் தெரிவித்துள்ளது.



இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில், கொரோனாவுக்கு 685 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் நாட்டில் கொரோனா பாதிப்பால் இறந்தோர் எண்ணிக்கை 1,66,862 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் இதுவரை 9,01,98,673 பேருக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இது மொத்த மக்கள் தொகையில் 5.5 சதவீதம் மட்டுமே. இந்தியா சுமார் 6 கோடிக்கும் அதிகமான கொரோனா தடுப்பு மருந்து டோஸ்களை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. இப்போது உள்நாட்டிலேயே தடுப்பூசியின் தேவை அதிகரித்து வருவதால் ஏற்றுமதியின் அளவை குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.



இதற்கிடையே, கொரோனாவின் அடுத்தடுத்த அலைகள் காரணமாக, பல்வேறு நாடுகளும் தடுப்பூசி செலுத்துவதில் முனைப்பு காட்டி வருகின்றன. அந்த வகையில் கொரோனா தடுப்பூசியின் முதல் டோஸை பின்வரும் நாடுகள் அதிக அளவில் செலுத்தியுள்ளன:

இஸ்ரேலில் தொற்று குறைகிறது:

இஸ்ரேல் அரசு கொரோனா தடுப்பூசியை மக்களிடையே கொண்டு செல்வதில் வெற்றி அடைந்துள்ளது. அந்த நாட்டில் இதுவரை 70 சதவீதம் பேருக்கு கொரோனா தடுப்பு மருந்தின் முதல் டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

தடுப்பூசியை தீவிரப்படுத்தியதன் காரணமாக இஸ்ரேலில் பிப்ரவரி மாதத்திலிருந்தே கொரோனா தொற்று குறைந்துள்ளது. கடந்த சில வாரங்களாக இஸ்ரேலில் 350-க்கும் குறைவானவர்களே கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இஸ்ரேலில் 8 லட்சத்துக்கும் அதிகமான நபர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நிலையில் தற்போது வெறும் 4 ஆயிரம் பேர் மட்டுமே சிகிச்சையில் உள்ளனர். அவர்களில் 294 பேர் மட்டுமே தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர்.

இங்கிலாந்திலும் பாதிப்பு குறைகிறது:

இங்கிலாந்தைப் பொருத்தவரை அங்கு 46.58 சதவீதத்தினருக்கு கொரோனா தடுப்பு மருந்தின் முதல் டோஸ் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த டிசம்பர் மாதம் முதலே இங்கிலாந்தில் தடுப்பூசி செலுத்துவது தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. கொரோனா தடுப்பூசி பயன்பாட்டை தீவிரபடுத்தியதைத் தொடர்ந்து இங்கிலாந்திலும் கொரோனா தொற்று விகிதம் குறைந்துள்ளது. இங்கிலாந்தில் கடந்த சிலவாரங்களாக 5 ஆயிரத்துக்கும் குறைவானவர்களே கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஜனவரி மாதம் முதலே கொரோனா தொற்று விகிதம் அந்நாட்டில் குறைந்து வருகிறது.

சிலி:

தென் அமெரிக்க நாடான சிலியில் இதுவரை 37.20 சதவீதம் பேருக்கு கொரோனா தடுப்பு மருந்தின் முதல் டோஸ் செலுத்தப்பட்டுள்ளது. சிலியில் நாள் ஒன்றுக்கு 6,000 பேர் வரை கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

சிலியில் இதுவரை 10 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுளனர். இதில் 9 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் குணமடைந்துள்ளனர்.

அமெரிக்காவில் ஏற்றஇறக்கம்:

கடந்த ஆண்டு கொரோனா பாதிப்பு தீவிரமாக இருந்த அமெரிக்காவில் இதுவரை 32.38 சதவீத மக்கள் கொரோனா தடுப்பு மருந்தின் முதல் டோஸை பெற்றுள்ளனர். ஜனவரி மாதத்தை ஒப்பிடுகையில் அமெரிக்காவில் கொரோனா தொற்று சற்று குறைந்துள்ளது. கடந்த சில வாரங்களாக அமெரிக்காவில் கொரோனா தொற்று விகிதம் ஏற்ற, இறக்கத்தை கண்டு வருகிறது.

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில்தான் கொரோனா தடுப்பு மருந்து அதிகம் செலுத்தப்பட்டுள்ளது. கலிபோர்னியாவில் 3 லட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு கொரோனா தடுப்பு மருந்தின் முதல் டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

பஹ்ரைன்:

பஹ்ரைனில் 31.73 சதவீதம் பேருக்கு கொரோனா தடுப்பு மருந்தின் முதல் டோஸ் செலுத்தப்பட்டுள்ளது. அந்நாட்டில் கடந்த சில வாரங்களாக 1,500க்கும் குறைவானவர்களே கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். 1 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது 7,000 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

தமிழ்நாட்டில் அதிகரிக்கும் பாதிப்பு:

தமிழகத்தில் நாள்தோறும் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதையடுத்து நோய்ப்பரவலை கட்டுப்படுத்தும் விதமாக தமிழகத்தில் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மேலும், 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் அடுத்த 2 வாரத்திற்குள் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசி மையங்களுக்கு சென்று கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுவரை 30 லட்சத்து 50 ஆயிரம் பேர் தமிழகத்தில் தடுப்பூசி செலுத்திக்கொண்டுள்ளனர்.


- மணிராஜ், திருநெல்வேலி

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் குடந்தைப் பயணம்... *(அத்தியாயம் #6)*

குடந்தை என்றும், குட முக்கு என்றும் அழைக்கப்படும் நகரம் இந்நாளில் கும்பகோணம் என்று அழைக்கப்படுகிறது. இது சோதிடத்தில் மிகவும் சிறப்புப் பெற்று விளங்குகிறது. இதன் தென்மேற்குத் திசையில் சோழர்களின் இடைக்கால தலைநகரமான பழையாறை உள்ளது. அதனால் வானளாவிய அரண்மனை மாடங்களும், ஆலயக் கோபுரங்களும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. இத்தகைய அழகிய பழையாறை அரண்மனைப் பெண்கள் தங்கள் அந்தப்புரத்தை விட்டு வெளியேறி அரசலாற்றை நெருங்கி வருகிறார்கள். அழகிய அன்ன வடிவமான படகில் பயணிப்பதற்கு வீற்றிருக்கிறார்கள். அவர்கள் யாவருக்கும் நடுவில் காந்த ஒளி வீசும் வதனம் கொண்டு, ஏழு உலகங்களையும் ஆளப்பிறந்த ராணிமயமாக வீற்றிருந்தாள் ராஜாதிராஜன் சுந்தரசோழனின் செல்வப் புதல்வி, ஆதித்தகரிகாலனின் அன்புத்தங்கை, அருள்மொழிவர்மனின் ஆசை அக்காள் குந்தவைதேவி. இளைய பிராட்டி என்று மக்களால் போற்றப்படும் மாதரசி. சோழப் பெரும் ராட்சியத்தின் மகிமைக்கு அடிகோலி-யவள் ராஜராஜனுடைய புதல்வன் ராஜேந்திரனை வளர்த்து வீரனாய், மன்னாதி மன்னனாய் ஆக்கிய தீரப் பெண்மணி. கம்பீர தோற்றம் கொண்ட காவல் தெய்வம். இவள் சோழ நாட்டின் இளவரசி. இவளருகே சாந்தவடிவமாய் அடக்கமும், இனிமையும் பொருந்திய மாது வானதி, குந்தவையின் பிரிய-மான தோழி. இவர்கள் இருவரையும் விட அங்கு அழகிய பல பெண் தோ-ழியர் கூடியிருந்து அந்த அன்னப் படகில் நறுமணம் வீசும் மலர்ச்செண்டு வைத்தாற்போல் காட்சி தந்தனர். இவர்கள் ஆடியும் பாடியும் வீணை மீட்டியும் மகிழ்ந்து, இயற்கை ரசனையுடன் ஆற்றின் நீரோட்டத்தில் அழகு நடனம் புரிந்து தம் பயணத்தைத் தொடர்ந்தனர். பின்பு படகு கரையை அடைந்ததும் குந்தவையும், வானதியும் கரையில் இறங்கினர். குந்தவை மற்றைய தோழி-களைப் பார்த்து 'நீங்கள் இங்கே இருங்கள் ஒரு நாளிகையில் திரும்பி வருகி-றேன' என்றாள். குந்தவையின் தோழிப் பெண்கள் அனைவரும் தமிழ் நாட்டின் சிற்றரசர்களின் அரண்மனையில் பிறந்த அரச குமாரிகள். குந்தவை தேவிக்கு தோழியாக இருப்பது பேறு எனக் கருதி இங்கு வந்தவர்கள். அவர்களில் ஒருத்தியான வானதியை மட்டும் அழைத்துச் செல்வது அவர்களுக்கு ஏமாற்றமாக இருந்தது.

குடந்தையின் கரையில் குதிரை பூட்டிய ரதம் ஆயத்தமாக இருக்க குந்தவையும் வானதியும் அதில் ஏறிக்கொள்ள ரதம் வேகமாகச் சென்றது. அப்பொழுது வானதி கேடடாள் 'எங்கே அக்கா போகிறோம்?' அதற்குக் குந்தவை, 'நாங்கள் சோதிடர் வீட்டிற்குப் போகிறோம். நீ பிரமை பிடித்தவள் போலவும், உடல் மெலிந்தும் வருகிறாய் அதற்காகவும், எனக்கு எப்பொழுது கல்யாணம் ஆகும் கடைசி வரை கன்னியாகவே இருப்பேனா என்று எல்லாம் கேட்கப் போகிறேன்' என்றாள் அதற்கு வானதி, 'அக்கா என் உடம்பிற்கு ஒன்றுமில்லை. உங்களுக்கு கல்யாணம் ஆகுமா? என்று உங்கள் மனதைக் கேளுங்கள் உங்களுக்கு இமய மலை முதல் குமரி முனை வரை உள்ள ராஜாக்கள் போட்டி போட்டுக்கொண்டு ஓடி வருவார்கள். கடல் கடந்த தேசங்களிலிருந்தும் வந்து நிற்பார்கள். உங்கள் கையைப் பிடிக்க எந்த வீர ராஜ குமாரருக்கு கொடுப்பனை உள்ளதோ' என்றாள். அதற்கு குந்தவை, 'இந்தப் பொன்னான பொன்னி நதி பாயும் சோழ நாட்டை விட்டு எங்கும் போகப் பிடிக்கவில்லை. அதனால் எந்த நாட்டு ராஜாக்களையும் நான் மணம் செய்ய மாட்டேன். பெண்கள் பிறந்த வீடு விட்டு புகுந்த வீடு போவது வழக்கமானதே. நான் கட்டாயம் கல்யாணம் செய்ய நேர்ந்தால் அனாதை-யான சோழ நாட்டு வீரனையே கல்யாணம் செய்து என் சோழ நாட்டில் குடியிருப்பேன்' என்றாள். அதற்கு வானதி, 'அக்கா நீங்கள் சோழ நாட்டை விட்டுப் போகவில்லை என்றால் நானும் உங்களைவிட்டுப் போக மாட்டேன் உங்களுடனேயே இருப்பேன்' என்றாள். அதற்கு குந்தவை, 'எனக்கு எல்லாம் தெரியும் உனக்கு சோழ நாட்டில் மிகுந்த அக்கறைதான். உன் சோழ நாடு வேலும், வாளும் ஏந்தி ஈழநாட்டிற்குச் சென்றது. அங்குதான் உன் ஆசை எனக்கு இது தெரியாது என்று எண்ணுகிறாயா?' 'அக்கா நீங்கள் நினைப்பது தவறு ஆசை இருக்கலாம் ஆனால் அடைய முடியாது என்றால் ஆசையை அறுத்து விடுவது நன்று' என்று வானதி கூற குந்தவையோ, 'நியாயமான ஆசைகள் நிச்சயம் நிறைவேறும்' என்றாள். இவ்வாறு உரையாடிக் கொண்டு செல்கையில் ரதம் குடந்தையிலுள்ள ஒரு சோதிடர் வீட்டிற்கு வந்து சேர்ந்தது. அங்கு சோதிடரும், அவர் சீடனும் ராஜகுமாரியை வரவேற்க ஆயத்தமாக நின்றனர். அவர்களுக்கு தகுந்த வரவேற்பு அளித்து, அலங்காரம் செய்யப்பட்ட வீட்டினுள் அழைத்துச் சென்று, அமர வேண்டிய இடத்தில் அமர வைத்தனர். 'தேவி வந்த காரியம் யாதென சொல்லியருள வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார் சோதிடர். அதற்கு குந்தவை, 'சோதிடரே நாம் சோதிடர் வீட்டிற்கு வந்துள்ளோம் நாம் வந்ததன் காரணத்தை சோதிடத்தில் பார்த்து சொல்லி அருளட்டும்' என்றாள். அப்பொழுது சோதிடர் கண்களை மூடிக் கொண்டு மந்திரம் செபித்தார். பின் 'இந்தக் கன்னிப் பெண்ணின் யாதகம் பார்க்க வேண்டுமா?' என்று கூறித் தொடர்ந்தார். 'இவள் கொடும்பாழூர் கோ-மகள். இவள் பெயர் வானதி இவளின் யாதகம் கூட என்னிடம் உண்டு தேடி எடுத்து வருகிறேன்' என்று சென்றார். பின்னர் சோதிடர் வந்து எதுவும் பேச முடியாத ஊமையாகி நின்றார். அப்பொழுது குந்தவை, 'என்ன சோதிடரே இந்தப் பெண் ஒரு வருடத்திற்கு முன் பழையாறை அரண்மனைக்கு வந்தாள் எட்டு மாத காலம் குதுகலமாக இருந்தாள். என் தோழியரிடையே இவள் தான் கலகலப்பானவள், இனிமையானவள் இப்பொழுது பிரமை பிடித்தவள் போல் இருக்கிறாள். இவள் பெற்றோருக்கு நான் பதில் சொல்ல வேண்டுமே' என்றாள். அப்பொழுது சோதிடர், 'இது ஒரு அதிசயமான யாதகம், யாருக்கும் கிடைக்காத பாய்க்கியம் இவளுக்குக் கிடைக்கப் போகிறது. இளவரசியின் கணவன் வீராதிவீரன் நூறு நூறு போர்க்களங்களின் முன்னிலையில் நின்று வாகைமாலை சூடுவான். மன்னாதி மன்னனாய் இருப்பான். ஆயிரமாயிரம் அரசர்கள் போற்ற சக்கரவர்த்தியின் சிம்மாசனத்தில் பன்னெடுங்காலம் வீற்றிருப்பான். ஆனால் அவனுக்கு எத்தனை எத்தனையோ அபாயங்களும், கண்டங்களும் ஏற்படும். பகைவர்கள் பலர் உண்டு இந்தத் தடைகள் யாவும் நீங்கி மகோன்னதமான பதவியை அடைவான். இவள் வயிற்றில் மகா விஷ்ணுவின் அம்சத்துடன் ஒரு பிள்ளை பிறப்பான். அவனுக்கு தடங்கல் யாவும் கிடையாது. தொட்டதெல்லாம் பொன்னாகும் நினைத்ததெல்லாம் கை கூடும் அவன் கால் பட்ட இடமெல்லாம் அவனதேயாகும். அவன் பிறந்த குலத்தின் கீர்த்தி உலகமெல்லாம் பரந்து விரி-யும்.' இவற்றையெல்லாம் கேட்ட வானதி மயங்கித் தரையில் விழுந்தாள். உடனே வானதி முகத்தில் தண்ணீர் தெளித்தாள் குந்தவை. வானதியும் கண் விழித்துக் கொண்டாள்.




'சோதிடரே ராஜ்ஜியத்தை பற்றி சொல்லுங்கள்' என்றாள் குந்தவை. 'எல்லாம் இறைவன் செயல் மகாராஜாவிற்குப் பெரிய கண்டம் இருக்கிறது. தங்கள் குடும்பத்தாருக்கு பெரிய அபாயம் இருக்கிறது' என்று மன வேதனையுடன் கூறினார் சோதிடர். குந்தவையின் மடிமீது சாய்ந்திருந்த வானதி எழுந்து உட்கார்ந்திருந்தாள். 'எனக்கு சோதிடம் சொன்னீர்கள் ராஜ்ஜியத்தைப் பற்றி சொன்னீர்கள், அபாயங்களுக்கு எச்சரிக்கை செய்தீர்கள். அடுத்து எங்கள் அக்காவின் சோதிடத்தைப் பற்றிச் சொல்லுங்கள்' என்றாள் வானதி. 'இதோ வருகிறார் 32 சாமுந்திரிகா இலட்சணம் பொருந்தியவர். புத்தியில் பிரகஸ்பதி, வித்தையில் சரஸ்வதி. அழகிலே மன்மதன், ஆற்றலில் அர்ச்சுனன்' என்றார் சோதிடர். அதே கணம் வந்தியத்தேவன் படாரென்று வாசலைத் திறந்தபடி உள்ளே நுழைய, அவனை சோதிடரின் சீடர் தோள்களைப் பிடித்து இழுத்தபடி நின்றான். திமிறிக்கொண்டு வாசல் படி தாண்டி உள்ளே வந்த வந்தியத்தேவனை சோதிடரும், குந்தவையும், வா-னதியும் பார்த்தார்கள். வந்ததியத்தேவனோ, குந்தவை வியப்பினால் திறந்த அவள் செவ்வாயின் இதழ்களைப் பார்த்து ------- கம்பீரமும், வியப்பும், குறும்புச் சிரிப்பும், கொண்ட அகன்ற கண்களைப் பார்த்தான். சங்கை ஒத்த கழுத்தை நோக்கினான். அவன் தன் கண்களால் குந்தவையின் ஒளிவீசும் அழகு முகம் தன் மனதில் பதியும் படி பார்த்தான். அத்துடன் சீடனை நோக்கி, 'ஏன் உள்ளே பெண்கள் இருப்பதாகச் சொல்லவில்லை' என்றபடி, வாசல்படியை மீண்டும் கடந்து வெளியே சென்றான். செல்லும் பொழுது குந்தவை மீது மீண்டும் தன் பார்வையைச் செலுத்தினான். வந்தியத்தேவன் வெளியில் சென்ற பின் குந்தவையும் வானதியும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தனர். சோதி-டரோ மௌனமாக அவர்கள் கையில் குங்குமம் தந்தார். அதைப் பெற்றுக் கொண்டு அரச குமாரியினர் வெளியே வந்தனர். அப்பொழுது சோதிடர் வீட்டு வாசல் பக்கமாக ஓரமாக நின்ற வந்தியத்தேவன் இவர்கள் வெளியே வருவதைக்கண்டு, 'மன்னிக்க வேண்டும் உள்ளே பெண்கள் இருக்கிறார்கள் என்று இந்தச் சோதிட சீடரான புத்திசாலி

எனக்குச் சொல்லவில்லை அதனால் இந்த விபரீதம் நடந்துவிட்டது' என்றான். அதற்கு எந்தப் பதிலும் பெண்கள் கொடுக்கவில்லை. குந்தவை மலர்ந்த முகத்துடன் மிடுக்கும், குறும்பும், கேலியும் கலந்த பாவனையுடன் வானதி-யின் கைகளைப் பிடித்து இழுத்தபடி ரதம் நின்ற ஆலமரத்தடி நோக்கிச் சென்றாள். அப்பொழுது வந்தியத்தேவன் உரத்த குரலில், 'குடந்தை நகரத்துப் பெண்களுக்கு மரியாதை தெரியாது போலும் வலிய வந்து பேசுகி-றானே இவனுக்கு ஒரு பதில் சொல்லலாகாதா' என்றான். அதற்கு அவர்கள் எதுவும் சொல்லாமல் ரதத்தில ஏறிக்கொண்டனர். ரதம் அரசலாற்றுக் கரை நோக்கிச் சென்றது.

*தொடரும்...*


---

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன**

---

## வீணாவின் கவிக்கணை

இழந்த இழப்பிற்கு
ஈடில்லையடி தோழி,
அதற்காக இழந்த
இடத்திலேயே
நின்றுவிடாதேடி தோழி,
தொலைந்த கனவுகள்
தொலைந்தது தானடி தோழி
அது தந்த அனுபவம் போதும்,
நீ இனி தொலையாமல்
காத்திடுமடி தோழி,
காலை மலர்களும் அறியும்
தன்நிலை என்னவென்று,
அதற்காக மலரமறுத்ததோ தோழி?
பிறந்த பிறப்பின் பயனறிந்து
நீயும் நிமிர்ந்து நில்லடி தோழி.



# அன்பின் தொனி - 606

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

## தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்

கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டு, கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலுமுள்ள பல தேசங்களிலுமிருந்து சேர்க்கப்பட்டவர்கள், அப்படிச் சொல்லக்கடவர்கள். அவர்கள் தாபரிக்கும் ஊரைக் காணாமல், வனாந்தரத்திலே அவாந்தரவழியாய், பசியாகவும், தாகமாகவும், ஆத்துமா தொய்ந்ததாகவும் அலைந்து திரிந்தார்கள். தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை விடுவித்தார். தாபரிக்கும் ஊருக்குப்போய்ச்சேர, அவர்களைச் செவ்வையான வழியிலே நடத்தினார். தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்கி, பசியுள்ள ஆத்து மாவை நன்மையினால் நிரப்புகிறாரென்று, அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் அவரைத் துதிப்பார்களாக. தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, உன்னதமானவருடைய ஆலோசனையை அசட்டைபண்ணினவர்கள், அந்தகாரத்திலும் மரண இருளிலும் வைக்கப்பட்டிருந்து, ஒடுக்கத்திலும் இரும்பிலும் கட்டுண்டு கிடந்தார்கள். அவர்களுடைய இருதயத்தை அவர் வருத்தத்தால் தாழ்த் தினார், சகாயரில்லாமல் விழுந்துபோனார்கள். தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார். அந்தகாரத்திலும் மரணஇருளிலுமிருந்து அவர்களை வெளிப்படப்பண்ணி, அவர்கள் கட்டுகளை அறுத்தார். கர்த்தர் வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பா ள்களை முறித்தாரென்று, அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித் தமும் அவரைத் துதிப்பார்களாக. நிர்மூடர் தங்கள் பாதகமார்க்கத்தாலும் தங்கள் அக்கிரமங்களாலும் நோய்கொண்டு ஒடுங்கிப்போகிறார்கள். அவர்கள் ஆத்துமா சகல போஜனத்தையும் அரோசிக்கிறது, அவர்கள் மரணவாசல்கள் பரியந்தம் சமீபிக்கிறார்கள். தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள், அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சிக்கிறார். அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார். - **சங்கீதம்** 107: 1-20

## ஞானவான்கள் கர்த்தருடைய கிருபைகளை உணர்ந்துகொள்வார்கள்.

அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து, ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தி, அவருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பார்களாக. கப்பலேறி, கடல்யாத்திரைபண்ணி, திரளான தண்ணீர்களிலே தொழில் செய்கிறார்களே, அவர்கள் கர்த்தருடைய கிரியைகளையும், ஆழத்திலே அவருடைய அதிசயங்களையும் காண்கிறார்கள். அவர் கட்டளையிட பெருங்காற்று எழும்பி, அதின் அலைகளைக் கொந்தளிக்கப்பண்ணும். அவர்கள் ஆகாயத்தில் ஏறி, ஆழங்களில் இறங்குகிறார்கள், அவர்கள் ஆத்துமா கிலேசத்தினால் கரைந்து போகிறது. வெறித்தவனைப்போல் அலைந்து தடுமாறுகிறார்கள், அவர்களுடைய ஞானமெல்லாம் முழுகிப்போகிறது. அப்பொழுது தங்கள் ஆபத்திலே அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடு கிறார்கள், அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார். கொந்தளிப்பை அமர்த்துகிறார், அதின் அலைகள் அடங்குகின்றது. அமைதலுண்டானதினிமித்தம் அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள், தாங்கள் நாடின துறைமுகத்தில் அவர்களைக் கொண்டுவந்து சேர்க்கிறார். அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து, ஜனங்களின் சபையிலே அவரை உயர்த்தி, மூப்பர்களின் சங்கத்திலே அவரைப் போற்றுவார்களாக. அவர் ஆறுகளை அவாந்தரவெளியாகவும், நீரூற்றுகளை வறண்ட ஸ்தலமாகவும், குடிகளுடைய பொல்லாப்பினிமித்தம் செழிப்பான தேசத்தை உவர் நிலமாகவும் மாற்றுகிறார். அவர் அவாந்தரவெளியைத் தண்ணீர்த்தடாகமாகவும், வறண்ட நிலத்தை நீரூற்றுகளாகவும் மாற்றி, பசித்தவர்களை அங்கே குடியேற்றுகிறார், அங்கே அவர்கள் குடியிருக்கும் நகரத்தைக் கட்டி, வயல்களை உண்டாக்கி விதைத்து, திராட சத்தோட்டங்களை நாட்டுகிறார்கள், அவைகள் வரத்துள்ள பலனைத்தரும். அவர்களை ஆசீர்வதிக்கிறார், மிகுதியும் பெருகுகிறார்கள், அவர்களுடைய மிருகஜீவன்கள் குறையாதிருக்கப்பண்ணுகிறார். பின்பு அவர்கள் இடுக்கத்தி னாலும், ஆபத்தினாலும், துயரத்தினாலும் குறைவுபட்டுத் தாழ்வடைகிறார்கள். அவர் பிரபுக்களின்மேல் இகழ்ச்சி வரப்பண்ணி, வழியில்லாத அவாந்தர வெளியிலே அவர்களைத் திரியச்செய்து, எளியவனையோ சிறுமையினின்று எடுத்து, உயர்ந்த அடைக்கலத்திலே வைத்து, அவன் வம்சங்களை மந்தையைப்போலாக்குகிறார். உத்தமர்கள் அதைக்கண்டு மகிழுவார்கள், நியாயக்கேடெல்லாம் தன் வாயை மூடும். எவன் ஞானமுள்ளவனோ அவன் இவைகளைக் கவனிக்கக்கடவன், ஞானவான்கள் கர்த்தருடைய கிருபைகளை உணர்ந்துகொள்வார்கள். - **சங்கீதம்** 107: 1-43

## என் சிநேகத்துக்குப் பதிலாக என்னை விரோதிக்கிறார்கள்

நான் துதிக்கும் தேவனே, மவுனமாயிராதேயும். துன்மார்க்கனுடைய வாயும், கபட்டுவாயும், எனக்கு விரோதமாய்த் திறந்திருக்கிறது, கள்ளநாவினால் என்னோடே பேசுகிறார்கள். பகையுண்டாக்கும் வார்த்தைகளால் என்னைச் சூழ்ந்துகொண்டு, முகாந்தரமில்லாமல் என்னோடே போர்செய்கிறார்கள். என் சிநேகத்துக்குப் பதிலாக என்னை விரோதிக்கிறார்கள், நானோஜெபம்பண்ணிக்கொண்டிருக்கிறேன். நன்மைக்குப் பதிலாக எனக்குத் தீமைசெய்கிறார்கள், என் சிநேகத்துக்குப் பதிலாக என்னைப் பகைக்கிறார்கள். அவனுக்கு மேலாகத் துஷ்டனை ஏற்படுத்திவையும், சாத்தான் அவன் வலதுபக்கத்தில் நிற்பானாக. அவன் நியாயம் விசாரிக்கப்படும் போது குற்றவாளியாகக்கடவன், அவன் ஜெபம் பாவமாகக்கடவது. அவன் நாட்கள் கொஞ்சமாகக்கடவது, அவன் உத்தியோகத்தை வேறொருவன் பெறக்கடவன். அவன் பிள்ளைகள் திக்கற்றவர்களும், அவன் மனைவி விதவையுமாகக்கடவர்கள். அவன் பிள்ளைகள் அலைந்து திரிந்து பிச்சையெடுத்து, தங்கள் பாழான வீடுகளிலிருந்து இரந்துண்ணக்கடவர்கள். கடன் கொடுத்தவன் அவனுக்கு உள்ளதெல்லாவற்றையும் அபகரித்துக்கொள்வானாக, அவன் பிரயாசத்தின் பலனை அந்நியர் பறித்துக்கொள்ளக் கடவர்கள். அவனுக்கு ஒருவரும் இரக்கங்காண்பியாமலும், அவனுடைய திக்கற்ற பிள்ளைகளுக்குத் தயவுசெய்யா மலும் போவார்களாக. - **சங்கீதம்** 109: 1-12

*தொடரும்...*




### ஜீவன் முக்தி (பகுதி) 112

# விதியை வெல்லும் சூட்சுமம்

யார் எந்த வாழ்க்கையைத் தேர்ந்து எடுக்கிறார்கள் என்று முடிவெடுக்கும்முன், நம்முடைய பிரார்ப்த்தம். பயோ மெமறியின் (bio memory) ஆழம் எவ்வளவென்று பார்க்க வேண்டும்.
நம்முடைய உடல் பிராரப்தத்தினால் உருவானது.

உங்கள் தசைகளில் பிராரப்தம் பதிவாகி இருக்கிறது. அந்த பிராரப்தம் தான் உங்களுடைய தசையினுடைய பதிவாகி இருக்கின்றது.
உங்கள் உடல் தசைகளுக்குள்ளே, பயோ மெமரியாக இருக்கின்ற பிராரப்தத்தின் ஆழத்தை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

அதன்பிறகுதான் வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
மற்றவர்களுக்காக சன்யாசமோ, பிரமச்சரியமோ எடுத்தால் சரிப்பட்டுவராது. முடிவெடுக்க விரும்புபவர் தனக்குத்தான் ஆழ்ந்து உள்வாங்குவது, மிக மிக முக்கியமானதாகும். நம் பயோமெமரியை ஆராய்ந்து பார்ப்பதற்கென்றே, நேரம் ஒதுக்க வேண்டும். அதற்காகவே ஒன்பது மாதம் ஒதுக்கவேண்டும்.

உடலுக்கும், மனதுக்கும் ஒத்துழைத்து, எந்த விதமான இன்பத்திற்குள்ளும் செல்லாமல் இருந்தால், உடலுக்கு ஒத்துழைப்பு தராமல் இருந்தோம் என்றால் அப்பொழுது இயற்கையாக மனம் என்ன செய்ய முயற்சிக்கும், கனவில் தன்னை திருப்திப் படுத்திக்கொள்ள முயற்சிக்கும்.
அப்போது நமக்குத் தெரிந்துவிடும். பிராரப்தத்தின் ஆழம் நமக்குத் தெரிந்து விடும்.

இருபத்தியொரு நாட்கள் வரை கனவிலும், தன்னுடைய மனம் இன்னொரு உடலைத் தேடாமல் இருந்ததென்றால் தெரிந்து கொள்ளுங்கள், உங்களுக்கு பிராரப்தத்தின் ஆழம் குறைவு என்பதைக் கண்டு கொள்ளலாம்.
நீங்கள் சன்யாஸ வாழ்க்கையில் இனிமையாக வாழ்ந்திடலாம்.

அப்போது துக்கம் வராது.
உணர்வில் கீழே விழமாட்டீர்கள்.
ஏன் இந்த சன்யாஸ வாழ்க்கை எடுத்தோம் என்ற துக்கம் இருக்காது. சஞ்சலம் இருக்காது.
சன்யாஸம்தான் சிறந்த வாழ்க்கை என்கின்ற தெளிவான மனஅமைப்பு வந்துவிடும்.

அப்படி இல்லாமல்... மாற்றம் நடக்காமல்... இருபத்தியொரு நாட்கள், கனவில் உங்கள் உணர்வு இன்னொரு உடலை வேண்டாம் என்று ஒதுக்கவில்லை என்றால், பிராரப்தப்படி திருமணம்தான் நல்லது. திருமணம் செய்துகொண்டு வாழ்வதுதான் நல்லது.

சன்யாஸியாக வாழும்பொழுதே, உங்கள் உணர்வை சூக்சுமமாக மாற்றுவது. இல்லையென்றால், திருமணம் செய்துகொண்டு இரண்டு பேரும் சேர்ந்து, இனிமையாக உங்கள் உணர்வை, சூக்சுமமாக்கி உயர்ந்த உணர்வு நிலைக்கு எடுத்துப் போவது.



தம்பதிகளாக இருவரும் இணைந்து உணர்வை உயர்திக் கொள்கின்ற தியான முறைகளை, காமத்தைத் தியான மாக்குகின்ற தியானங்களை ஈஸ்வரன் சிவ சூத்திரத்தில் அளிக்கின்றார்.

வாழ்வில் சந்நியாசமா? சம்சாரமா? என்று ஒருவர் எடுக்கும் முஎவு, அவரின் பிரார்ப்தபடி எடுக்கப்பட்ட முடிவாக இருந்தால் வாழ்வு இனிக்கும். சந்நியாசியாக வேண்டியவர், சம்சாரி ஆனாலோ, சம்சாரி ஆகவேண்டியவர் சந்நியாசி ஆனாலோ விதியை வெல்வதற்குப் பதில் சதிக்குள் சிக்கிக்கொள்வார்.

வாழ்க்கையைப் பற்றிய முடிவையெடுக்கும் முன்பு பூர்ணாபிஷேகம், தந்த்ராபிஷேகம் போன்ற 9 மாத சுய ஆராய்ச்சிக்குள் நுழையாமல் வாழ்வை ஆரம்பிப்பது, பெரிய ஆபத்தாகும். தவறான தேர்வை செய்தவர் யாராக இருந்தாலும், அவர் மாட்டிக்கொண்டுதான் விழிக்க வேண்டியிருக்கும்.

சுய ஆராய்ச்சி செய்து வாழ்விற்குள் துழைவதே, விதியை வெல்லும் ஒரு சூட்சுமம்தான்.

----------

அன்று பெங்களுரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது.. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

***பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்***

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080


SHIVA SAI DURGA ASTROLOGICAL CENTER

Pandit: Kumara swamy





Most Powerful Spiritual Healer
We can Handle any Problem
25 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 8 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்
உலகத்தில் சுரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே
இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்
Remove Black Magic,Witchcraft, Obeya,Evil Spirits
Bad Luck & Jadoo & Give 100%,Life Long Protection
கை பார்த்து. முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். Photo பார்த்து
ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி, நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம், காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்
எந்தப் பிரச்னையாக இருந்தாலும் 9 நாட்களில் தீர்வு காண்பார்
100% SATISFACTION GUARANTEED
Are you depressed & Lonely? All Religions welcome. 100% Guaranteed Result
Call for Appointments/Walk ins Welcomed 647-766-9775
2607 Eglinton Ave E Scarborough, M1K 2S2,
UPSTAIRS ERRA MARKET, EGLINTON & BRIMLEY

# மரண அறிவித்தல்



தாய் மடியினில்
1-12-1953

அரன் அடியினில்
4-04-2021

## செல்வகுமாரன் இராமச்சந்திரன்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட செல்வகுமாரன் இராமச்சந்திரன் அவர்கள் 04-04-2021 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரன் பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும்

இந்திரா, சந்திரா, சிவகுமாரன், திலகா, யோகா, கமலா ஆகியோரின் அன்புச் சகோதரரும்

காலஞ்சென்றவர்களான விவேகானந்தா, திருநாவுக்கரசு, சதானந்தன் மற்றும் நிர்மலாதேவி, செல்வமாணிக்கம், கிருபாகரன் ஆகியோரின் மைத்துனரும்

மீரா, நளினி, ராஜன், தாரிணி, ஞானவேல், ராகவன், கார்த்திகா, ஸ்ரீகணேஷ், கஜன், சித்தீசன், கிருஷன் ஆகியோரின் மாமனாரும்

ஷாமினி, தர்சி, ஸ்ரீயாழினி ஆகியோரின் சித்தப்பாவும்,
சிவானி, சைலா, சிவன், மாதுமை, ஆதவன், மாதுரி, சோபியா, அக்ஷயா, எலா அஞ்சலியின் பேரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

கிருபா - கமலா 416-724-8315
கிருஷன் 647-271-2127









# உதயன்

25 வது வெள்ளி விழா 2021 UTHAYAN






உதயம் 1305 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 9, 2021

# இந்தியா — கனடா வர்த்தக உறவுகள் மீண்டும் மலருகின்றன



*- சிவா பரமேஸ்வரன் – மூத்த பன்னாட்டு செய்தியாளர்*

இந்தியாவும் கனடாவும் நான்கு ஆண்டுகளுப் பிறகு சிறிய அளவிலான இருதரப்பு வர்த்தக உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. இது தொடர்பில் இந்திய-கனேடிய உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் திரைமறைவில் நடைபெற்று வந்தன. இருதரப்பும் விரிவான கூட்டு பொருளாதார ஒப்பந்தம் (**CE-PA**-சீபா) ஒன்றை ஏற்படுத்த கடந்த பத்தாண்டுகளாக தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

அப்படியான ஒப்பந்தம் தொடர்பில் கடந்த ஆகஸ்ட் 2017ல் கடைசியாக நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன

“நாங்கள் கனேடியத் தரப்புடன் கடந்த 2020 ஜூன் முதல் மெய்நிகர் தொடர்புகள் மூலம் பல சுற்றுகள் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தோம். அவ்வகையில் கடந்த அக்டோபரில் விரைவாக இடைக்கால உடன்பாடு ஒன்றை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடங்குவதற்கு எண்ணியிருந்தோம். அதற்கான முகாந்திரங்கள் குறித்த ஒரு குறிப்பு கனேடிய தரப்புடன் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது. எனவே முறையான வகையில் இந்த மாதத்தின் (ஏப்ரல்) பிற்பகுதியில் தீவிரமான பேச்சுவார்த்தைகள் நடைபெறும் சாத்தியங்கள் உள்ளன“ என்று இந்திய வர்த்தகத்துறை உயரதிகாரி ஒருவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். *(உள்ளே 4ம் பக்கத்தில் விபரமான கட்டுரை)*

## ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள சரவணா பவான் தென்னிந்திய உணவகம் தற்போது புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றது





கனடா-ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள சரவணா பவான் தென்னிந்திய உணவகம் தற்போது புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றது. உள்ளே வர்ணங்களால் அலங்காரம், அதிக ஆசன வசதிகள் முன்னரைவிட அழகு ஜொலிக்கிறது. மிகுந்த பொருட்செலவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு தற்போது வாடிக்கையாளர்களுக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. தற்போதை கோவிட் தொற்று தொடர்பான பல கட்டுப்பாடுகள் தொடர்ச்சியாக ஒன்றாரியோ மாகாணத்தில் கடைப்பிடிக்கப்பட்டாலும் சரவணா பவான் உணவகத்தில் இணையவழி ஊடாக வாடிக்கையாளர்கள் தொடர்புகொண்டு தங்கள் விருப்பத்திற்கேற்ப உணவு வகைகளை பெற்றுக்கொள்வுத அதிகரித்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

கனடாவில் சரவணா பவான் உணவகத்தின் மூன்று கனடிய கிளைகளை நிர்வகிக்கும் அதன் தலைவரும் சமூக ஆர்வலருமான கணேசன் சுகுமார் மற்றும் வன்குவர் கிளையின் முகாமையாளர் கணேஸ் ஆகியோரும் இங்கு படங்களில் காணப்படுகின்றனர். தொடர்புகளுக்கு: 416 293 7755

## கனடாவில் Bankruptcy க்குச் செல்லும் நிலையில் நிதியளிக்கப்பட்ட அல்லது குத்தகைக்கு எடுக்கப்பட்ட காருக்கு என்ன நடக்கும்?




உங்கள் நிதி வளங்களுடன் போராடுவது மிகவும் கடினமானது எவ்வாறாயினும், உங்களுக்கு என்ன கடன் தீர்வுகள் உள்ளன, அதேபோல் உங்கள் சொத்துக்களில் எவை பாதுகாக்கப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்வது என்பதற்காக சம்பந்தப்பட்ட நிபுணர் பரிந்துரைகளுக்கு அழைப்பு விடுங்கள். பணத்திற்கு கடன்பட்டிருக்கும் நிறைய பேர் உண்மையிலேயே அதிகமாக உணர்வார்கள் அதிஸ்டவசமாக, சில நிறுவனங்களின் நிதிக் கடன் உதவியைப் கனடா முழுவதும் பயன்படுத்தலாம். *(உள்ளே 2ம் பக்கத்தில் விபரமான கட்டுரை)*

## கனடா உதயன் மற்றும் நண்பன் இணையத்தளம் ஆகியவற்றின் இலங்கைப் பிரதிநிதிக்கு சிறந்த விளம்பர முகவர் என்னும் அரச விருது



கனடா உதயன் மற்றும் நண்பன் இணையத்தளம் ஆகியவற்றின் இலங்கைப் பிரதிநிதியும், பிளக்ஸ் விளம்பர முகவர் நிறுவனம் மற்றும் பிளக்ஸ் வரைகலை நிறுவனம் ஆகியவற்றின் பங்காளருமான திரு விஜேய் பழனிசாமிக்கு இலங்கையில் சிறந்த விளம்பர முகவர்களில் ஒருவர் என்னும் அரச விருது விருது அண்மையில் வழங்கப்பெற்றுள்ளது.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற அரச வைபவம் ஒன்றில் விஜேய் பழனிசாமி அவர்கள் தனக்குரிய விருதினை இலங்கையின் அமைச்சர் ஒருவரிடமிருந்து பெற்ற பின்னர் அவரோடு நிற்பதைக் காணலாம்

கனடாவிற்கு சில தடவைகள் வந்து சென்ற விஜேய் அவர்கள் இன்றும் கனடாவில் பல வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## உலகின் பெரும் பணக்காரர் அமேசான் தலைவர் ஜெவ் பேசோஸ் இரண்டாவது இடத்தை ஏலன் மஸ்க் அடைந்துள்ளார்

அமெரிக்காவின் போபஸ் பத்திரிகை இந்த ஆண்டிற்கான பெரும் பணக்காரர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் 2,755 பேர் பில்லியன் கணக்கான டொலர் மதிப்புள்ள செல்வத்தை வைத்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பெற்றுள்ளது





முதலிடத்தில் அமேசான் நிறுவனத்தின் தலைவர் ஜெப் பேசோஸ் உள்ளார். அவர் தொடர்ந்து 4ஆவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளார்.

இரண்டாவது இடத்தில் ஏலன் மஸ்க் உள்ளார். கடந்த ஆண்டு அவர் 31ஆவது இடத்தில் இருந்தார். பிரான்ஸ் நாட்டு தொழிலதிபரான பெர்னாட் ஆர்னோல்ட் 3 ஆவது இடத்தை பிடித்திருப்பதோடு 4ஆவது இடத்தில் பில் கேட்ஸ் உள்ளார். 5ஆம் இடத்தில் பேஸ்புக் நிறுவனத்தின் தலைவர் மார்க் ஸக்கர்பர்க் உள்ளார்.

இந்த தெரிவி தொடர்பாக போபஸ் பத்திரிகை விடுத்துள்ள செய்திக் குறிப்பில், கொவிட்–19 சூழலால் உலகப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருந்தாலும் உலகப் பெரும் பணக்காரர்களின் செல்வங்கள் மேலும் வளர்கின்றன என்றும் இந்த ஆண்டின் பெரும் பணக்காரர் பட்டியலில் உள்ளவர்களின் மொத்தச் சொத்து மதிப்பு சுமார் 13.1 டிரில்லியன் டொலர் என்றும் அறிவித்துள்ளது.